சென்னைப் பல்கலைக்கழகம்

UNIVERSITY OF MADRAS

அடித்தளப் படிப்பு

பகுதி - 1 தமிழ்

(முதல் மற்றும் இரண்டாம் பருவங்களுக்குரியது)

அனைத்துப் பட்டப்படிப்புப் பிரிவுகளுக்கும்
ஐந்தாண்டு ஒருங்குமுறைப் பட்டமேற்படிப்புப் பிரிவுகளுக்கும் பொதுவானது

FOUNDATION COURSE

Part - I Tamil

For I & II Semesters

Common to all undergraduate course
and Five - year Integrated Postgraduate courses

2023 - 24 onwards

நூலாக்கம் : **சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பாடத்திட்டக் குழு**

உரிமை : **சென்னைப் பல்கலைக்கழகம்**

முதல் பதிப்பு : **சூலை 2023**

Copy rights reserved.

முதல் பருவம்

First Semester

பாடத்திட்டம்

பொதுத்தமிழ் - 1
முதல் பருவம்

அலகு - 1 தமிழ் இலக்கண, இலக்கிய வரலாறு அறிமுகம்

1. இலக்கண வரலாறு

அ. இலக்கண நூல்கள்

ஆ. மொழிப் பயிற்சி

i) வல்லினம் மிகும் இடங்கள்
ii) வல்லினம் மிகா இடங்கள்
iii) ஈரொற்று வரும் இடங்கள்
iv) ஒரு, ஓர் வரும் இடங்கள்
v) அது, அஃது வரும் இடங்கள்
vi) தான், தாம் வருமிடங்கள்

(இலக்கிய வரலாறு)

2. சங்க இலக்கியம்

அ. எட்டுத்தொகை

ஆ. பத்துப்பாட்டு

3. அற இலக்கியம்

4. காப்பியங்கள்

அ. ஐம்பெருங் காப்பியங்கள்

ஆ. ஐஞ்சிறு காப்பியங்கள்

இ. சமயக் காப்பியங்கள்

5. பக்தி இலக்கியமும் பகுத்தறிவு இலக்கியமும்

அ. பக்தி இலக்கியம்

i) பன்னிரு திருமுறைகள்
ii) நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஆ. பகுத்தறிவு இலக்கியம்

i) சித்தர் இலக்கியம்
ii) இராவண காவியம்

அலகு - 2 சங்க இலக்கியம்

அ. எட்டுத்தொகை

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. கலித்தொகை
5. புறநானூறு

ஆ. பத்துப்பாட்டு

1. முல்லைப்பாட்டு

அலகு - 3 அற இலக்கியம்

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக் கடிகை
4. பழமொழி நானூறு
5. இனியவை நாற்பது

அலகு - 4 காப்பிய இலக்கியம்

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. பெரியபுராணம்
4. கம்பராமாயணம்
5. சீறாப்புராணம்
6. இயேசு காவியம்

அலகு - 5 பக்தி இலக்கியமும் பகுத்தறிவு இலக்கியமும்

அ. பக்தி இலக்கியம்

1. திருநாவுக்கரசர் - தேவாரம்
2. மாணிக்கவாசகர் - திருவாசகம்
3. பொய்கையாழ்வார்
4. பூதத்தாழ்வார்
5. பேயாழ்வார்
6. ஆண்டாள் - திருப்பாவை

ஆ. பகுத்தறிவு இலக்கியம்

1. திருமூலர் - திருமந்திரம்
2. பட்டினத்தார் - திருவிடை மருதூர்
3. கடுவெளி சித்தர்
4. இராவண காவியம் - தாய்மொழிப் படலம்

பொருளடக்கம்

அலகு	பாடப்பொருள்	பக்கம்
அலகு - 1	**1. தமிழ் இலக்கண, இலக்கிய வரலாறு அறிமுகம்**	
	1.1. இலக்கண வரலாறு	9
	அ. இலக்கண நூல்கள்	
	ஆ. மொழிப் பயிற்சி	13
	i) வல்லினம் மிகும் இடங்கள்	
	ii) வல்லினம் மிகா இடங்கள்	
	iii) ஈரொற்று வரும் இடங்கள்	
	iv) ஒரு, ஓர் வரும் இடங்கள்	
	v) அது, அஃது வரும் இடங்கள்	
	vi) தான், தாம் வருமிடங்கள்	
	இலக்கிய வரலாறு	
	1.2. சங்க இலக்கியம்	18
	அ. எட்டுத்தொகை	
	ஆ. பத்துப்பாட்டு	
	1.3. அற இலக்கியம்	27
	1.4. காப்பியங்கள்	34
	அ. ஐம்பெருங் காப்பியங்கள்	
	ஆ. ஐஞ்சிறு காப்பியங்கள்	
	இ. சமயக் காப்பியங்கள்	
	1.5. பக்தி இலக்கியம் பகுத்தறிவு இலக்கியமும்	45
	அ. பக்தி இலக்கியம்	
	i) பன்னிரு திருமுறைகள்	
	ii) நாலாயிர திவ்வியப் பிரபந்தம்	
	ஆ. பகுத்தறிவு இலக்கியம்	
	i) சித்தர் இலக்கியம்	
	ii) இராவண காவியம்	

அலகு - 2	**2. சங்க இலக்கியம்** **2.1. எட்டுத்தொகை** 2.1.1. நற்றிணை 2.1.2. குறுந்தொகை 2.2.3. ஐங்குறுநூறு 2.2.4. கலித்தொகை 2.2.5. புறநானூறு **2.2. பத்துப்பாட்டு** 2.2.1. முல்லைப்பாட்டு	**54** **58**
அலகு - 3	**3. அற இலக்கியம்** 3.1. திருக்குறள் 3.2. நாலடியார் 3.3. நான்மணிக் கடிகை 3.4. பழமொழி நானூறு 3.5. இனியவை நாற்பது	**63**
அலகு - 4	**4. காப்பிய இலக்கியம்** 4.1. சிலப்பதிகாரம் 4.2. மணிமேகலை 4.3. பெரியபுராணம் 4.4. கம்பராமாயணம் 4.5. சீறாப்புராணம் 4.6. இயேசு காவியம்	 **66** **69** **75** **77** **82** **91**
அலகு - 5	**5. பக்தி இலக்கியமும் பகுத்தறிவு இலக்கியமும்** **5.1. பக்தி இலக்கியம்** 5.1.1. திருநாவுக்கரசர் - தேவாரம் 5.1.2. மாணிக்கவாசகர் - திருவாசகம் 5.1.3. பொய்கையாழ்வார் 5.1.4. பூதத்தாழ்வார் 5.1.5. பேயாழ்வார் 5.1.6. ஆண்டாள் - திருப்பாவை **5.2. பகுத்தறிவு இலக்கியம்** 5.2.1. திருமூலர் - திருமந்திரம் 5.2.2. பட்டினத்தார் - திருவிடை மருதூர் 5.2.3. கடுவெளி சித்தர் 5.2.4. இராவண காவியம் - தாய்மொழிப் படலம்	 **93** **98**
	வினாத்தாள் அமைப்பு	**106**
	மாதிரி வினாத்தாள்	**107**

பொதுத்தமிழ் - 1

முதல் பருவம்

அலகு - 1 தமிழ் இலக்கண, இலக்கிய வரலாறு அறிமுகம்

வரலாறு மற்றும் மொழியியல் ஆய்வாளர்களாலும் கண்டறிய இயலாத காலப் பழமைகொண்ட தமிழ் மொழியானது, தோன்றிய காலம்தொட்டு, தொடர்ச்சியான இலக்கியங்களையும் அவை புழக்கத்தில் இருந்த சமுதாய மக்களின் வாழ்வியலையும் பதிவு செய்துகொண்டு வந்துள்ளது. இலக்கியங்களை முறைப்படுத்தி, நெறிப்படுத்த இலக்கணங்களும் அந்தந்தக் காலகட்டங்களில் தோன்றியுள்ளன. அவற்றைக்குறித்த சுருக்கமான அறிமுகத்தைத் தருவதாகவும் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் அரசு வேலைவாய்ப்புகளைப் பெறும் நோக்கில், போட்டித் தேர்வுகளுக்குப் பயன்படும் வகையிலும் இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இலக்கண வரலாறு

அ. இலக்கண நூல்கள்

1. தொல்காப்பியம்

தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்றுள்ள முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். இலக்கணம் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர் தொல்காப்பியர். இது "ஒல்காப் புகழ் தொல்காப்பியம்" என்ற சிறப்புடையது.

இதன் ஆசிரியர் தொல்காப்பியர் ஆவார். தொல்காப்பியம் என்ற நூலை இயற்றியதால் இவர் இப் பெயர் பெற்றார். இந்நூலின் சிறப்புப் பாயிரத்தைப் பாடியவர் பனம்பாரனார். இவர் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணாக்கர் எனக் கருதப்படுகிறார். நிலந்தரு திருவின் நெடியோன் என்னும் அரசனின் அவையில் அதங்கோட்டு ஆசான் என்னும் புலவர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதாக இந்நூலின் சிறப்புப் பாயிரம் கூறுகிறது.

நூல் அமைப்பு: நூற்பா அமைப்பில் 1,610 நூற்பாக்கள் கொண்டது. எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்கள் கொண்டவை. மொழிக்கும், இலக்கியத்திற்கும் மட்டும் அல்லாது அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கைமுறையும் கூறுவது இந்நூல். உலகியல் வழக்கு, நாடக வழக்கு என்னும் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்கள் படைக்கப்படுவதாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு இரண்டு வழக்குகளுக்கும் இலக்கணம் கூறும் இந்நூல், இக்கால இலக்கிய வளர்ச்சிக்குரிய வடிவத்திற்கும் இலக்கணம் இயம்பும் சிறப்பான அமைப்பையுடையது. மொழியியல் அமைப்பில் மொழிக்கு இலக்கணம் கூறுவதுடன் மண்ணில் வாழும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியின் இலக்கணத்தையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் உரைக்கின்றது.

எழுத்ததிகாரத்தில் எழுத்துகளின் வகை, எண்ணிக்கை, அவற்றில் சொல்லுக்குரிய முதல் எழுத்துகள், இறுதி எழுத்துகள், ஒலிகள் பிறக்கும் முறை, சொற்களில் எழுத்துகள்

ஏற்கும் மாற்றங்களைப் புணர்ச்சி வகைகளாக வகைப்படுத்துதல், 'நரம்பின் மறை' என்னும் இசை இலக்கணம், தமிழ் மாதங்களின் பெயர் என யாவும் விளக்கப்பட்டுள்ளன.

சொல்லதிகாரத்தில் சொல் வகைகள், தொடர்களின் இலக்கணம், உயர்திணை, அஃறிணைப் பாகுபாடு ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

பொருளதிகாரமானது இலக்கியம் படைப்போருக்கான படைப்புக் குறிப்புகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக அகம், புறம் என இலக்கியப் படைப்புக் கோட்பாட்டை மையமாகக் கொண்டுள்ளது. இது தமிழர்களின் வாழ்க்கைமுறையின் சிறப்புகளை உயர்த்திக் கூறுவதாகவும் அமைகிறது. அணியிலக்கண நுட்பம், யாப்பிலக்கணக் கூறுகள், மனிதனின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் என அனைத்துச் செய்திகளும் இவ்வதிகாரத்தில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன.

மேற்கோள் நூற்பாக்கள்:

“எழுத்தெனப்படுப
அகரமுதல் னகர இறுவாய் முப்பஃது என்ப”

“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”

“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"

“மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்"

“ஒன்று அறிவு அதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவு அதுவே அதனொடு நாவே
மூன்று அறிவு அதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவு அதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவு அதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவு அதுவே அவற்றொடு மனனே”

2. இறையனார் களவியல் உரை

இறையனார் என்னும் புலவர் இந்நூலைத் தொகுத்துள்ளார். இதனால் இது இறையனார் களவியல் உரை அல்லது இறையனார் அகப்பொருள் உரை எனப் பெயர் பெற்றது.

நூல் அமைப்பு: இது தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய நூல். தமிழரின் அகவாழ்வைப் பற்றிக் கூறும் இந் நூலிற்கு உரை எழுதியவர் நக்கீரர். உரைநடை வளர்ச்சியில் சிலப்பதிகாரத்தில் வரும் உரைப்பாட்டு மடை என்னும் பகுதிக்குப் பின்னர்த் தமிழில் காணப்படும் உரைநடை என்னும் சிறப்புக்குரியது இறையனார் களவியல் உரை. இந் நூலில் களவுப் பிரிவில் 33 நூற்பாக்களும் கற்பு பிரிவில் 27 நூற்பாக்களுமாக மொத்தம் 60 நூற்பாக்கள் உள்ளன.

இறையனார் அகப்பொருள் உரையில் முச்சங்க வரலாறு மற்றும் கடல்கோள்கள் குறித்த பதிவுகள் இடம்பெறுகின்றன. இப்பதிவுகள் முதல், இடைச் சங்கங்கள் கடல்கோள்களால் மூழ்கடிக்கப்பட்ட நிகழ்வுகளைச் சுட்டுகின்றன.

3. நம்பியகப் பொருள்

இதனை எழுதியவர் நாற்கவிராச நம்பி. இவர் 12ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டில் வாழ்ந்தவர். சமணச் சமயத்தவரான இவர் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்னும் நான்கு கவிகளையும், திறமையாகப் பாட வல்லவர் என்பதால் இவருக்கு நாற்கவிராசர் என்னும் சிறப்புப்பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்லவராக இருந்தார்

நூல் அமைப்பு: தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு எழுதப்பட்ட வழிநூல். 5 இயல்களைக் கொண்டது. 252 நூற்பாக்கள் உள்ளன. அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் எனும் 5 இயல்களில் கிளவி, தொகை, வகை, விரி என நூற்பாக்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

தோழி என்பவர் செவிலியின் மகள், செவிலி என்பவர் நற்றாயின் தோழி, நற்றாய் தலைமகளை ஈன்ற தாய், தலைமகளை வளர்த்தவள் _ செவிலித்தாய் என்பனவும் கைக்கிளை, பெருந்திணை, கைக்கோள் வகை, பகற்குறி, இரவுக்குறி, அவற்றைக் குறிக்கும் உரிமை, பாங்கி மதி உடன்பாடு ஆகிய செய்திகளை எடுத்தியம்புகிறது.

4. புறப்பொருள் வெண்பாமாலை

தமிழில் புற இலக்கணம் கூறும் ஒரே நூல் புறப்பொருள் வெண்பா மாலையாகும். இதன் ஆசிரியர் ஐயனார் இதனார்.

நூல் அமைப்பு: 9 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூல் தொல்காப்பியம் மற்றும் பன்னிரு படலம் ஆகியவற்றின் வழிநூல். இதன் பகுதிகள்: திணை - 12, நூற்பா - 19, கொளு - 341, வெண்பா - 361. நூற்பா திணைகளின் துறைகளைப் பட்டியலிடுகிறது; கொளு துறையின் இலக்கணத்தைக் கூறுகிறது; வெண்பா துறை இலக்கணத்திற்கு உதாரணமாகத் திகழ்கிறது.

வெட்சி நிரை கவர்தல்; மீட்டல் கரந்தையாம்
வட்கார் மேல் செல்வது வஞ்சி; உட்காது
எதிர்ஊன்றல் காஞ்சி;எயில்காத்தல் நொச்சி
அது வளைத்தல் ஆகும் உழிஞை – அதிரப்
பொருவது தும்பையாம்; போர்க்களத்து மிக்கோர்
செரு வென்றது வாகையாம்

என வெட்சி முதல் வாகை ஈறான புறத்திணைகள் குறித்து விரிவாகப் பேசுகின்றது. இந்த நூலில் எடுத்துக்காட்டுப் பாடல்களை ஆசிரியரே இயற்றியுள்ளார். புறப்பொருள் வெண்பாமாலைக்கு முதன்முதலில்உரை எழுதியவர் சாமுண்டித் தேவ நாயக்கர்.

5. நன்னூல்

இந்நூலை இயற்றியவர் பவணந்தி முனிவர். இந்நூலை எழுதும்படி கேட்டுக் கொண்ட மன்னன் சீயகங்கன். இம்மன்னன் சனகாபுரி என்றும் பகுதியை ஆண்ட சிற்றரசன்.

நூல் அமைப்பு: 13ஆம் நூற்றாண்டின் இலக்கண நூல் நன்னூல். இதன் முதல்நூல் தொல்காப்பியமாகும். நன்னூல் இரண்டு அதிகாரங்களைக் கொண்டது. அவை: எழுத்ததிகாரம், சொல்லதிகாரம். ஒவ்வொரு அதிகாரத்திலும் தலா 5 இயல்கள் உள்ளன. மொத்த நூற்பாக்கள் 462. இதன் பாயிரவியல் 56 நூற்பாக்களைக் கொண்டது.

பாயிரம் என்பது, அது பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு வகைப்படும். நூலின் வகைகள், நூலின் பயன், நூலில் ஏற்படும் குற்றங்கள், நூலின் அழகு, ஆசிரியர்க்கு உதாரணம், மாணவர் நிலை, எழுத்தும் அதன் ஒலி அளவும், மொழி வகை, வழக்கு வகை, தொகை வகைகள் ஆகியவற்றுக்கு எளிய முறையில் விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது.

6. தண்டியலங்காரம்

தண்டி என்பவரால் எழுதப்பட்ட அணி இலக்கண நூல் தண்டியலங்காரம் ஆகும். இவர் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

நூல் அமைப்பு: அலங்காரம் என்றால் அழகு என்று பொருள். இது, காவியதர்சம் என்னும் வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல். இந்நூலிற்கு " அணியதிகாரம்" என்ற பெயரும் உண்டு. இதில், மூன்று இயல்கள் உள்ளன. மொத்தம்126 நூற்பாக்கள், அவை:

பொதுவியல் - 26
பொருளணியியல் (குணவியல்) - 65
சொல்லணியியல் (எச்சவியல்) - 35.

மேலும், செய்யுள் வகைகள் நான்கு, காப்பியங்கள் வகையும் அவற்றின் இலக்கணமும், நெறி வகைகள், அணிவகைகள் 35, அவற்றின் இலக்கணம், சித்திரக்கவி வகைகள் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

7. யாப்பருங்கலக் காரிகை

இதனை இயற்றியவர் அமுதசாகரர். இவர் குணசாகரரின் மாணவர். ‘சாகரம்’ என்பதற்குக் கடல் என்பது பொருள்.

நூல் அமைப்பு: தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய யாப்பியல் நூல்களுள் இதுவே சிறப்பு பெற்றது. நூலைச் செய்வித்தவர் கண்டன் மாதவன். 10 ஆம் நூற்றாண்டின் செய்யுள் இலக்கண நூலான இதனை “காரிகை” என்றும் அழைப்பர். காரிகை என்பது கட்டளை கலித்துறை என்னும் செய்யுள் வகையாகும். மொத்தக் காரிகைகள் 44. எழுத்தியல், செய்யுளியல், ஒழிபியல் என்று மூன்று இயல்கள் உள்ளன.

கட்டளைக் கலிப்பா என்பது, “எழுத்தெண்ணிப் பாடப்படும் யாப்பு” என்று பொருள். துறை என்பது பா இனத்தின் ஒரு வகைக்குரிய பெயர். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் ஆகிய யாப்புறுப்புகளின் இலக்கணத்தை இந்நூல் கூறுகிறது. இந்நூலின் செய்யுள்கள் மகடூஉ முன்னிலையாக எழுதப்பட்டுள்ளன.

ஆ. மொழிப்பயிற்சி - ஒற்றுப்பிழை தவிர்த்தல்

i) வல்லினம் மிகும் இடங்கள்

தமிழ் மொழியில் மொழி (சொல்) முதல் எழுத்துகளாக வருவன,

வல்லினம் - க, ச, த, ப

இடையினம் - ய, வ

மெல்லினம் - ஞ, ந, ம ஆகியவை ஆகும்.

இவற்றுள் வல்லின மெய்யாகிய க், ச், த், ப் ஆகிய நான்கும் பன்னிரு உயிரெழுத்துகளுடன் இணைந்து மொழிக்கு முதலில் வரும். இவை இரண்டு சொற்கள் இணையும்போது வருமொழியாக வல்லினம் வருமிடங்களில் சில இடத்திற்கேற்ப வல்லினம் மிகும். அவ்விடங்களே வல்லினம் மிகும் இடங்கள் என்கிறோம். இவை மிகாத இடங்களுமுண்டு. அவற்றை வல்லினம் மிகா இடங்கள் என்று சுட்டுகிறோம். சில இன்றியமையாத வல்லினம் மிகும் இடங்களாவன:

1. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.

   பூ + பந்து - பூப்பந்து *தீ + பெட்டி - தீப்பெட்டி*

2. அ, இ ஆகிய சுட்டெழுத்துகளுக்குப் பின் / அந்த, இந்த உள்ளிட்ட சுட்டுப் பெயர்களுக்குப் பின் வல்லினம் மிகும்.

   அ + சங்கம் - அச்சங்கம் *அந்த + காலம் - அந்தக் காலம்*

   இ + குழு - இக்குழு *இந்த + சூழல் - இந்தச் சூழல்*

3. 'எ' என்னும் வினா எழுத்தின் பின் / எந்த, எப்படி என வரும் வினாச்சொற்களுக்குப் பின்னும் மிகும்.

   எ + பணி - எப்பணி *எந்த + பரிசு - எந்தப் பரிசு*

4. இனி, தனி, நடு, புது ஆகிய சொற்களின் பின் மிகும்.

   இனி + பேசாதே - இனிப் பேசாதே *தனி + குடில் - தனிக் குடில்*

   நடு + பக்கம் - நடுப்பக்கம் *புது + தெரு - புதுத்தெரு*

5. அகர ஈற்று வினையெச்சத்ததில் வல்லினம் மிகும்.

   வர + சொன்னார் - வரச் சொன்னார்

   ஓட + பார்த்தான் - ஓடப் பார்த்தான்

   பாட + சொன்னான் - பாடச் சொன்னான்

6. குறிலும், நெடிலும் இணைந்து நிற்கும் சொல்லின் முன் வல்லினம் மிகும்.

   நிலா + சோறு - நிலாச் சோறு *கனா + காலம் - கனாக்காலம்*

7. வன்தொடர்க் குற்றியலுகரத்தில் வல்லினம் மிகும்.

காட்டு + செடி - காட்டுச்செடி நாட்டு + பற்று - நாட்டுப்பற்று

8. திசைப் பெயர்களில் வல்லினம் மிகும்.

கிழக்கு + திசை - கிழக்குத் திசை வடக்கு + பகுதி - வடக்குப் பகுதி

9. இரண்டாம் வேற்றுமை (ஐ), நான்காம் வேற்றுமை (கு) விரிந்து வருகையில் வல்லினம் மிகும்.

பாடத்தை + படித்தேன் - பாடத்தைப் படித்தேன்

படத்திற்கு + சென்றேன் - படத்திற்குச் சென்றேன்

10. ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாக இருந்தால் வல்லினம் மிகும்.

புலி + பல் - புலிப்பல்

11. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

ஓடா + குதிரை - ஓடாக் குதிரை கூவா + குயில் - கூவாக் குயில்

12. சில உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + சிறந்தது - சாலச் சிறந்தது தவ + சிறிது - தவச் சிறிது

13. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

தாமரை + பாதம் - தாமரைப் பாதம்

14. இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

உழவு + தொழில் - உழவுத் தொழில்

வெள்ளி + கிழமை - வெள்ளிக் கிழமை

ii) வல்லினம் மிகா இடங்கள்

தமிழ் மொழியில் நிலைமொழியானது வருமொழியுடன் சேரும்போது, வருமொழியானது க, ச, த, ப என வல்லினமாக இருந்தாலும், சில இடங்களில் மிகாது எழுதுதல் வேண்டும். அவை வருமாறு

1. அது, இது, எது / அவை, இவை /அன்று, இன்று, என்று இவை நிலைமொழியாக அமைய, வருமொழி வல்லினமாக இருப்பினும் ஒற்று மிகுதல் கூடாது.

அது + சிறியது - அது சிறியது எது + பெரியது - எது பெரியது

அவை + கற்கள் - அவை கற்கள் எவை + பார்த்தன - எவை பார்த்தன

அன்று + கூறினார் - அன்று கூறினார் என்று + போனார் - என்று போனார்

மேலும், அத்தனை, இத்தனை, எத்தனை / அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு / அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு ஆகியவற்றிலும் வல்லினம் மிகாது.

2. பெயரெச்சங்களின் முன் வல்லினம் வரும்போது ஒற்று மிகாது.

   படித்த + பெண் - படித்த பெண் *சூடிய + பூ - சூடிய பூ*

3. வினாப் பொருளுணர்த்தும் ஆகார இடைச்சொல், ஓகார இடைச் சொல்லில் ஒற்று மிகாது.

   அவனா + கேட்டான் - அவனா கேட்டான்

   அதுவோ + தின்றது - அதுவோ தின்றது

4. வினையெச்சங்களில் ஒற்று மிகாது.

   வந்து + பார்த்தார் - வந்து பார்த்தார்

   நின்று + பேசினான் - நின்று பேசினான்

5. வியங்கோள் வினைமுற்றில் வல்லினம் மிகாது.

   வாழ்க + பல்லாண்டு - வாழ்க பல்லாண்டு

6. விளியின் முன் வல்லினம் மிகாது

   தம்பீ + போ - தம்பீ போ

7. வினைத் தொகையில் வல்லினம் மிகாது.

   விரி + கதிர் - விரிகதிர் *உயர் + பதவி - உயர்பதவி*

8. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

   இரவு + பகல் - இரவுபகல் *காய் + கனி - காய்கனி*

9. எட்டு, பத்து ஆகிய எண்களைத் தவிர பிற எண்ணுப் பெயர்கள் வருமிடங்களில் வல்லினம் மிகாது.

   இரண்டு + புத்தகம் - இரண்டு புத்தகம் நான்கு + கட்டுரை - நான்கு கட்டுரை

10. இரட்டைக் கிளவி மற்றும் அடுக்குத் தொடரில் வல்லினம் மிகாது.

    கல + கல - கலகல *பாம்பு + பாம்பு - பாம்பு பாம்பு*

iii) ஈரொற்று வரும் இடங்கள்

ஒரு சொல்லில் இரண்டு மெய்யெழுத்துகள் (ஒற்று - புள்ளி வைத்த எழுத்துகள்) அடுத்தடுத்து வருவது ஈரொற்று மயக்கம் எனப்படும். இவ்வாறு ஈரொற்று வரும் சொற்களை வரிசைப்படுத்தினால் ய், ர், ழ் ஆகியவற்றைத் தொடர்ந்து, க், ங், ச், ஞ், த், ந், ப், ம் ஆகிய மெய்யெழுத்துகள் சேர்ந்து வரும். அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

1. ய் என்னும் ஒற்றுடன் ஈரொற்று வருதல்

    வாய்க்கால், வேய்ங்குழல், காய்ச்சி, மெய்ஞ்ஞானம்,
    மேய்த்தல், காய்ந்தது, தாய்ப்பால்.

2. ர் என்னும் எழுத்துடன் ஈரொற்று வருதல்

    சேர்க்கிறாள், அயர்ச்சி, சேர்த்தல், தேர்ந்தான், வளர்ப்பு.

3. ழ் என்னும் எழுத்துடன் ஈரொற்று வருதல்

    சூழ்ச்சி, தாழ்ந்த, வீழ்ச்சி, காழ்ப்பு, புகழ்ந்து.

iv) ஒரு, ஓர் வரும் இடங்கள்

வருமொழியில் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருப்பின் 'ஓர்' வருதல் வேண்டும்.

ஓர் அணில், ஓர் ஆடு, ஓர் இலை, ஓர் ஈசல்.

வருமொழியில் முதல் எழுத்து உயிர்மெய் எழுத்தாக இருப்பின் 'ஒரு' வருதல் வேண்டும்.

ஒரு கண்ணாடி, ஒரு பாட்டு.

v) அது, அஃது வரும் இடங்கள்

உயிர்மெய் எழுத்து வரும் இடங்களில் இயற்கையாய் 'அது' என்றே வரும்.

அது மரம், எது வீடு.

வருமொழி உயிராகவரின் அஃது, இஃது, உஃது, எஃது என எழுதும் வழக்கம் இருந்தது.

அஃது அணில், அஃது ஆட்டம், எஃது ஏணி.

vi) தான், தாம் வருமிடங்கள்

தற்காலத் தமிழில் தான், தாம் என்பன பின்வரும் மூன்று நிலைகளில் வரும். அவை: தான், தாம் ஆகியன தன்மை, முன்னிலைப் பெயர்களோடும் அவன், அவள், அவர்கள் போன்ற சுட்டுப் பெயர்களோடும் பிற பெயர்களோடும் சேர்ந்து 'வலியுறுத்தும்' பொருளில் வழங்கிவருகின்றன.

நான்தான் பொறுப்பு, அவன்தான் சொன்னான், அவர்கள்தான் கட்டினர்.

தாம் என்பது பொதுவாகப் படர்க்கைப் பன்மையில் வரும். ஆனால், முன்னிலை ஒருமையைக் குறிப்பதாகவும் மரியாதைப் பன்மையாகவும் 'கள்' விகுதி சேர்ந்து வரும்.

அவர்கள் தங்கள் கடமையைத் தாங்களே அறியவில்லை.

தாங்கள் எப்படி இருக்கிறீர்கள்

அமைச்சர் தாம் அறிவித்தார்

வேற்றுமை உருபை ஏற்பதற்காகத் திரிந்த வடிவங்களாகிய தன், தம், தங்கள் ஆகியன தற்சுட்டுப் பெயர்களாக வழக்கத்தில் உள்ளன.

அவள் தன்னையே நம்பவில்லை

அவர்கள் தம்மை உயர்வாகக் கருதினர்

தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் அவர்கள் ஆண்டனர்.

பயிற்சி: வல்லினம் மிகும் இடங்கள், மிகா இடங்கள் தவறாக வரும் வகையில் ஒரு பத்தி கொடுத்து, அதில் ஒற்றுப் பிழைகளைத் திருத்தி எழுதச்செய்தல்.

இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் கரையானும் நெருப்பும் வெள்ளமும் அழித்தவைபோக எஞ்சிய தொகுப்பு நூல்களுள் மிகப் பழமையான இலக்கியங்கள் சங்க இலக்கியங்களாகும். அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. இவை தனிப்பாடல்கள், தண்ணுணர்ச்சிப் பாடல்கள், தொடர்ந்து அறம்கூறும் இலக்கியங்களான - மனிதவாழ்வைச் சீர்படுத்தும் நோக்கில் அமைந்த பதினென் கீழ்க்கணக்கு நூல்கள், வெவ்வேறு காலங்களில் தோன்றிய கதைபொதி நெடும்பாட்டுகளான காப்பியங்களும் கிடைத்துள்ளன.

முக்திநிலை வேண்டிப் பக்திசெலுத்தும் இலக்கியங்கள் அக்காலத்தில் இருந்த சைவ - வைணவ இறைப்படிவங்களைப் பாடுவதோடு, பக்தி அனுபவத்தையும் பதிவுசெய்துள்ளனர். பிற்காலத்தில் சமயத்தில் சீர்திருத்தம், சமூகத்தில் சீர்திருத்தம் முதலியன பகுத்தறிவின் வெளிபாடான சித்தர் இலக்கியங்களில் காணலாம். தொடர்ந்து பெரியார் ஈ.வெ.ராவின் சுயமரியாதை இயக்கத் தாக்கத்தால் ஏற்பட்ட இலக்கியங்கள் எனத் தமிழ் இலக்கியத் தொடர்ச்சி அமைந்துள்ளது. இனி இவை ஒவ்வொன்றின் அறிமுகம் குறித்தும் சற்று விரிவாகக் காணலாம்.

2. சங்க இலக்கியம்

பெயர்க்காரணம்

தமிழ்மொழியில் நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களில் சங்கக் இலக்கியமே முதலாவதாகவும் மூத்ததாகவும் விளங்குகிறது. சங்க காலத்தில் (கி.மு.6 - கி.பி.2) இயற்றப்பட்டதால் இது இப் பெயர் பெற்றது என்பர். கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் வச்சிரணந்தி என்பவர் தோற்றுவித்த திராவிடச் சங்கத்தில் இவை தொகுக்கப்பட்டதால் இப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

வகைப்பாடு

சங்க இலக்கியத்தைத் தொகை, பாட்டு என இரண்டாக வகைப்படுத்துவர். புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு தொகை ஆகும். 8 தொகை நூல்கள் உள்ளதால் இதனை எட்டுத் தொகை என்பர்.

தனி ஒரு புலவர் பாடிய ஒருபாட்டைப் பாட்டு என்பர். இதில் 10 பாடல்கள் உள்ளதால் இதனைப் பத்துப் பாட்டு என்பர். இவ்விரண்டையும் சேர்த்து (8 + 10=18) பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று கூறுவர்.

அ. எட்டுத்தொகை

“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை.”

என்ற பழம்பாடல் தொகை நூல்கள் எட்டின் பெயரையும் கூறுகிறது.

இவற்றுள் அகநூல்கள் ஐந்து. அவை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியன. புறநூல்கள் இரண்டு. அவை புறநானூறு, பதிற்றுப்பத்து. மேலும், அகமும் புறமும் கலந்த ஒரு நூல் பரிபாடல்.

1. நற்றிணை

400 ஆசிரியப்பாக்களைக் கொண்ட அகநூல். பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்ட இப்பாடல்களை 175 புலவர்கள் பாடினர் என்பர். இத்தொகையில் பாடிய பெண்பாற் புலவர்கள் 9 பேர். 56 பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. 9 அடி சிற்றெல்லையும் 12 அடிப் பேரெல்லையும் கொண்ட நூல். இதனைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்குக் கடவுள் வாழ்த்து பாடியுள்ளார்.

தனிமகனார், தேய்புரிப் பழங்கயிற்றினார், தும்பிசேர்க் கீரனார், விழிக்கட் பேதை பெருங்கண்ணனார், வண்ணப்புறக் கந்தரத்தனார், மலையனார் முதலானோர் பாடலின் தொடரால் பெயர் பெற்ற புலவர்கள் ஆவர். பல்லி சகுனம், பெண்கள் கால்பந்து விளையாடியது முதலான கருத்துகளைக் கொண்ட பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. தூது உள்ளிட்ட சிற்றிலக்கிய வகைமைக்கு முன்னோடியான பாடல்கள் அடங்கிய தொகை இதுவாகும். 1914 இல் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் முதலாவதாகச் சுவடியிலிருந்து எடுத்துப் பதிப்பித்தார். இதில்,

> “*முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்*
> *நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்*”

முதலிய சிறந்த அடிகள் பல இடம்பெற்றுள்ளன.

2. குறுந்தொகை

400 ஆசிரியப் பாக்களால் ஆன அகநூல். 4 அடி சிற்றல்லையும் 8 அடிப் பேரெல்லையும் கொண்ட நூல். இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ. தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. இதன் கடவுள் வாழ்த்துப் பாடலை எழுதியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். 205 புலவர்கள் இத்தொகை பாடல்களைப் பாடியுள்ளனர். 1915 இல் முதலாவதாகப் பதிப்பித்தவர் சௌரி பெருமாள் அரங்கன். செம்புலப் பெயல்நீரார், அணிலாடு முன்றிலார், குப்பை கோழியார், காக்கை பாடினியார் எனத் தொடரால் பெயர்பெற்ற புலவர்கள் 19 பேர் ஆவர். பின்வந்த உரையாசிரியர்கள் இதிலிருந்து அதிக மேற்கோள்களைக் காட்டியுள்ளனர்.

> “... *செம்புலப் பெயல்நீர் போல*
> *அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே!*”

> “*கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி*
> *காமம் செப்பாது கண்டது மொழிமோ ...*”

முதலிய சிறந்த அடிகள் பல இதில் இடம்பெற்றுள்ளன.

3. ஐங்குறுநூறு

500 ஆசிரியப் பாக்களைக் கொண்ட அகநூல். 3 அடி சிற்றெல்லையும் 6 அடிப் பேரெல்லையும் கொண்டது. குறிஞ்சி முதலான ஐந்து திணைகளுக்கும் திணைக்கு 100 பாடலாக 500 பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு திணையும் பத்துப் பத்தாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பத்துக்கும் அச்செய்யுளின் தொடக்கச் சொல், தொடர், இறுதிச் சொல், கூற்றுக்குரியோர், கேட்போர், கருப்பொருள் ஆகிய எவையேனும் ஒன்றைக்கொண்டு தலைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர்.

மருதம்	- ஓரம்போகியார்
நெய்தல்	- அம்மூவனார்
குறிஞ்சி	- கபிலர்
பாலை	- ஓதலாந்தையார்
முல்லை	- பேயனார்

இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார். தொகுப்பித்தவர் யானை கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை. இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். இந்திர விழா (62), பெண்பிள்ளை வேண்டித் தவம் செய்தது (257), தேர் ஏறித் தலைவன் உடன்போக்கு சென்றது (385), கார்காலத்தில் தலைவன் பிரிவதாகக் கூறுவது (427), பசு - ஆ என்ற விலங்கினப் பெயர் முதன்முதலில் இடம்பெறுல், குருவி என்ற சொல் இடம்பெறுல், இதில் உள்ள தொண்டிப் பத்து என்ற பகுதி மட்டும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளமை அதிகப்படியான உள்ளுறையும் இறைச்சியும் மிகுதியாக இடம்பெறுதல் எனப் பிற அகப்பாடல்களில் காணமுடியாத பல வியப்புக்குரிய செய்திகள் இதில் உள்ளன. இதனை உ. வே. சாமிநாதையர் முதன் முதலாகப் பதிப்பித்தார். இதில்,

“தேன் மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு
உவலைக் கூவல் கீழ
மான்உண்டு எஞ்சிய கலிழி நீரே”

முதலிய சிறந்த அடிகள் பல உள்ளன.

4. பதிற்றுப்பத்து

சேர அரசர்கள் 10 பேரை, 10 புலவர்கள், தலா பத்துப் பாடல்கள் வீதம் பாடிய நூறு பாடல்களின் தொகுப்பே இந்நூலாகும். இதில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. தற்போது 80 பாடல்கள் மட்டுமே உள்ளன. இது புறநூல். உதியஞ் சேரல், அந்துவஞ்சேரல் என்ற இரு அரசக் குடும்பத்தினரைப் பற்றி மட்டும் இந்நூல் கூறுகிறது. இதில் நான்காம் பத்து மட்டும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. கொடுமணம், மாந்தை, பந்தர் போன்ற சேர நாட்டு ஊர்களைக் குறிப்பிடுகிறது.

“பன்மீன் நாப்பண் திங்கள் போலப்
பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை”

முதலிய பல சிறந்த அடிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

5. பரிபாடல்

பரிபாடல் என்பது தொல்காப்பியம் கூறும் பாவகையில் ஒன்றாகும். இது பாவகையால் பெயர் பெற்றது. 25 அடி சிற்றெல்லையும் 400 அடிப் பேரெல்லையும் கொண்டது. இன்றுள்ள பரிபாடலில் 22 பாடல்கள் மட்டுமே உள்ளன. அவை திருமாலுக்கு 6, முருகனுக்கு 8, வையைக்கு 8 என அமைந்துள்ளன. இதனை 13 புலவர்கள் பாடியுள்ளனர். நல்லச்சுதனார் போன்றோர் இசை வகுத்துள்ளனர். இதனைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. இசையோடு பாடப்பட்ட இந்நூல் பாண்டிய நாட்டைப் பற்றி மட்டுமே கூறுகிறது. இதனை உ.வே.சா. முதன் முதலில் பதிப்பித்தார்.

"யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒளி தாரோயே"

முதலிய புகழ்பெற்ற தொடர்கள் இடம்பெற்ற நூல் கலித்தொகை.

6. கலித்தொகை

கலிப்பா என்ற பாவகையால் பெயர் பெற்ற நூல். 150 பாடல்களைக் கொண்ட அகநூல். 16 முதல் 70 அடிகள் வரையிலான பாடல்களைக் கொண்டுள்ளது. சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்தை நல்லந்துவனார் பாடியுள்ளார். தொல்காப்பியர் அகப் பாடல்கள் பாடுவதற்கான யாப்பாகக் கலிப்பா, பரிபாடல் யாப்புகளைக் குறிப்பிடுவார். சங்க இலக்கியங்களுள் இவை யாப்பு வகையால் பெயர் பெற்ற நூல்களாகும். ஐந்து திணைகளையும் திணைக்கு ஒருவராக 5 பேர் பாடியுள்ளனர்.

பாலைத் திணை - பாலை பாடிய பெருங்கடுக்கோ (35 பாடல்கள்)
குறிஞ்சித் திணை - கபிலர் (29 பாடல்கள்)
மருதத் திணை - மருதம் பாடிய மருதனிளநாகனார் (35 பாடல்கள்)
முல்லைத் திணை - நல்லுருத்திரன் (17 பாடல்கள்)
நெய்தல் திணை - நல்லந்துவனார் (33 பாடல்கள்)

இதனைத் தொகுத்தவர் நல்லந்துவனார். தொகுப்பித்தவர் யார் எனத் தெரியவில்லை. கைக்கிளை, பெருந்திணைப் பாடல்களைக் கொண்ட ஒரே தொகை நூல் கலித்தொகை மட்டுமே. தனிவகையிலான கூற்று அமைப்பு, கூற்றில் இருவர் உரையாடுவது போல் அமைதல், என மாறுபட்ட அமைப்பு கொண்ட நூல். தமிழகத்தில் கடல்கோள் (சுனாமி) நிகழ்ந்தது பற்றியும், பாண்டிய மன்னன், மதுரை மாநகரம், ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகளையும் கொண்டுள்ளது. இதன் பாடல்கள் முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். முதன் முதலாக 1887 இல் சி.வை. தாமோதரம் பிள்ளை இதனைப் பதிப்பித்துள்ளார்.

"ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"

போன்ற சிறந்த அடிகள் பல கொண்ட நூல்.

7. அகநானூறு

400 ஆசிரியப்பாக்களால் ஆன அகநூல். 145 புலவர்கள் பாடியுள்ளனர். தொகுத்தவர் உருத்திரன் சன்மனார். தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்தினைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். இந்நூல் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1 - 120 பாடல்கள் - களிற்றியானை நிரை (120 பாடல்கள்

121 - 300 பாடல்கள் - மணிமிடை பவளம் (180 பாடல்கள்)

301 - 400 பாடல்கள் - நித்திலக் கோவை (100 பாடல்கள்)

பாடல்கள் 13 அடி சிற்றெல்லையும் 31 அடிப் பேரெல்லையும் கொண்டவை ஆகும். இந்நூலுக்கு நெடுந்தொகை என்ற வேறு பெயரும் உண்டு. எட்டுத்தொகை நூல்களுள் ஓர் ஒழுங்கு முறையில் தொகுக்கப்பட்ட நூல் இதுவாகும். அவ் ஒழுங்கு வருமாறு:

1, 3, 5, 7, 9... என ஒற்றைப்படையில் வருவன - பாலை (200 பாடல்கள்)

2, 8, 12, 18... என வருவன - குறிஞ்சி (80 பாடல்கள்)

4, 14, 24... என வருவன - முல்லை (40 பாடல்கள்)

6, 16, 26... என வருவன - மருதம் (40 பாடல்கள்)

10, 20, 30... என வருவன - நெய்தல் (40 பாடல்கள்)

குடவோலைத் தேர்தல் முறை குறித்தும் பண்டைய திருமண முறை குறித்தும் கூறும் இந்நூல், வரலாற்று செய்திகளை மிகுதியாகக் கொண்டதாகவும் திகழ்கிறது. இதனை வே. இராசகோபால ஐயங்கார் முதன்முதலாகப் பதிப்பித்தார்.

“யவனர் தந்த வினை மாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியோடு பெயரும்”

முதலிய சிறந்த அடிகளைக் கொண்ட நூல்.

8. புறநானூறு

புறப்பொருள் பற்றிய 400 ஆசிரியப் பாக்களைக் கொண்டது. 157 புலவர்களால் பாடப்பட்டது. இதனை ‘புறம்’, ‘புறப் பாட்டு’ என்றும் அழைப்பர். இதனைத் தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. சிவனைப் பற்றிய கடவுள் வாழ்த்தினைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய திணைகளில் அமைந்த பாடல்கள் உள்ளன. இந்நூலினை முதலில் பதிப்பித்தவர் உ.வே.சா. அவர்கள். ஏ.கே. இராமானுஜன், ஜார்ஜ் எல். ஹார்ட், ஜி.யு. போப் முதலானோர் இத்தொகை பாடல்கள் சிலவற்றை மொழிபெயர்த்துள்ளனர்.

தொடித்தலை விழுத்தண்டினார், ஊன் பொதி பசுங்குடையார் போன்றோர் பாடல் தொடரால் பெயர் பெற்றுள்ளனர். இந்நூல் தமிழரின் வாழ்வியல் கருவூலமாகத் திகழ்கிறது.

மூவேந்தர்களின் அடையாளப் பூக்கள், கொடிகள், தலைநகரங்கள், துறைமுகங்கள், தமிழக மலைகள், ஆறுகள், கடற்கரைகள், காடுகள், புலவர்கள், கடையேழு வள்ளல்கள் குறித்த அரிய தகவல்களைத் தருகின்றது.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்!"

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!"

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!"

போன்ற சிறந்த அடிகள் பல கொண்ட நூல்.

ஆ. பத்துப்பாட்டு

"முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை
பெருகு வள மதுரைக்காஞ்சி மருவினிய
கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்ற பழம்பாடல் பத்துப்பாட்டின் பத்து நூல்களையும் தொகுத்துக் கூறுகிறது. இவற்றுள் அகநூல் நூல்கள் 3 (முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை). புறநூல்கள் 6 (திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம்). அகமா? புறமா? என்ற கருத்து வேறுபாட்டைத் தோற்றுவிக்கும் நூல் ஒன்று - நெடுநல்வாடை.

1. திருமுருகாற்றுப்படை

ஆசிரியர் நக்கீரர். 317 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன புறநூல். பாடப்பட்டவன் தமிழ்க் கடவுள் முருகன். இதற்குப் புலவர் ஆற்றுப்படை என்ற வேறு பெயரும் உண்டு. ஆற்றுப்படை நூல்கள் பரிசில் பெறச் செல்வோரால் பெயர் பெறும். திருமுருகாற்றுப்படை மட்டும் பரிசில் கொடுப்போனால் பெயர் பெற்றுள்ளது. முருகனின் ஆறு படைவீடுகள் குறித்துக் கூறும் நூல்.

"கைபுனைந்து இயற்றாக் கவின் பெறு வனப்பு"

முதலிய சிறந்த அடிகளைக் கொண்ட நூல். இந்நூல் பதினோராம் திருமுறையிலும் இடம் பெற்றுள்ளது. எனவே, இரு தொகுப்புகளில் இடம்பெற்ற ஒரே நூல் திருமுருகாற்றுப்படை.

2. பொருநர் ஆற்றுப்படை

ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார். 248 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன புறநூல். பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான். வேடம் தாங்கி நடிப்பவர்கள் பொருநர் எனப்பட்டனர். ஏர்க்களமோ போர்க்களமோ பரணியோ பாடும் கூத்தரும் பொருநர் எனப்பட்டனர். இப்பாடலின் பொருநர் போர்க்களம் பாடுவோர் ஆவர். கரிகாலனின் வீரச் சிறப்பும் விருந்து உபசரிப்பும் காவிரியின் சிறப்பும் இதனுள்

கூறப்பட்டுள்ளது. விருந்தினர் பிரியும்போது 7 அடி உடன் நடந்து வந்து, வழி அனுப்ப வேண்டும் என்ற தமிழர் பண்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

''முரசு முழங்கு தானை மூவரும் கூடி
அரசவையில் இருந்த தோற்றம் போல''

முதலிய சிறந்த அடிகளைக் கொண்ட நூல்.

3. சிறுபாண் ஆற்றுப்படை

ஆசிரியர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார். 269 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன புறநூல். பாட்டுடைத் தலைவன் ஓய்மான்நாட்டு நல்லியக்கோடன். சிறிய வகை யாழை மீட்டிப் பாடும் பாணனை ஆற்றுப் படுத்தியதால், இது சிறுபாண் ஆற்றுப்படை எனப் பெயர் பெற்றது. ஓய்மான்நாடு என்பது திண்டிவனம் பகுதி. இடைக்கழி நாடு என்பது செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் உள்ள கடற்கரைப் பகுதி. இது உப்பங்கழிக்கும் கடலூருக்கும் இடைப்பட்ட பகுதியாதலால் இடைக்கழி நாடு எனப்பட்டது. இந்நூல் கூறும் எயிற்பட்டினமான வேலூர், ஆமூர் ஆகியன இன்றும் உள்ளன. கடையேழு வள்ளல்கள் பற்றியும் குமண வள்ளல் குறித்தும் கூறும் நூல். வஞ்சி, மதுரை, உறந்தை என்ற மூவேந்தரின் தலை நகரங்களும் ஒருகாலத்தில் வறுமை அடைந்து விட்டன எனக் கூறும் நூல். விறலியின் வருணனை மிக அழகாக மாலை உவமையில் அமைந்துள்ளது.

''முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமா நோக்கின் வாள்நுதல் விறலியர்''

முதலிய சிறந்த அடிகளைப் பெற்ற நூல்.

4. பெரும்பாண் ஆற்றுப்படை

ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். 500 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன புறநூல். இதன் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன். இவன் வெள்வேற்கிள்ளிக்கும் நாககன்னி பீலிவளைக்கும் பிறந்தவன் என்பர். பெரிய யாழை மீட்டிப் பாடும் பாணனை ஆற்றுப்படுத்தியதால் இது பெரும்பாண் ஆற்றுப்படை எனப் பெயர் பெற்றது. இளந்திரையனின் தலைநகரமான திருவெஃகா (காஞ்சிபுரம்), நீர்ப்பெயற்று ஆகிய புகழ்பெற்ற நகரங்கள் குறித்து இந்நூல் கூறுகிறது. உமணப் பெண்கள் கைக்குழந்தையுடன் வண்டியோட்டி வணிகம் செய்வது, வேடர்கள் குழிக்குள் பதுங்கி வேட்டையாடுவது, ஆயர்குலப் பெண்களின் மனிதநேயம் எனப் பல்வேறு செய்திகள் இதில் காணக்கிடகின்றன.

''முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி''

முதலிய சிறந்த அடிகள் இடம் பெற்ற நூல்.

5. முல்லைப்பாட்டு

ஆசிரியர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகன் நப்பூதனார். 103 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன அகநூல் என்பதால் இந்நூலுக்குப் பாட்டுடைத் தலைவன் இல்லை. பத்துப்பாட்டில் மிகச் சிறிய நூல் இதுவே. பிரிந்து சென்ற

தலைவன் திரும்பி வரும்வரை ஆற்றி இருக்கும் தலைவியின் கற்புத் திறத்தை எடுத்துக்கூறுகிறது. இந்நூல் முல்லை நில இயல்பைக் குறிப்பதோடு வஞ்சி திணையின் இயல்புகளையும் இணைத்து அழகாகப் பாடப்பட்டுள்ளது. முதலில் கார்கால மாலைப்பொழுது வருணனை, பின்னர்த் தலைவியின் பிரிவாற்றாமை, பாசறை அமைப்பு, தலைவனின் நிலை, தலைவியின் துயரம், மழைக்காலச் சிறப்பு எனக் காட்சி மாற்றத்தோடு நாடகம்போன்று இந்நூல் புனையப்பட்டுள்ளது.

"நெல்லொடு நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ்அலறி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"

(இந்நூல் முழுமையும் அலகு - 2 'முல்லைப்பாட்டு' பகுதியில் கற்க இருக்கிறீர்கள்)

6. மதுரைக்காஞ்சி

ஆசிரியர் மாங்குடி மருதனார். 782 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன புறநூல். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். 354 அடிகளில் மதுரையை மட்டுமே சிறப்பிக்கிறது. மதுரையில் பண்டைக் காலத்திலேயே நகர அமைப்பு இருந்தமை, உயிரியல் பூங்கா இருந்தமை குறித்தும் ஆண்டுதோறும் ஆறு திருவிழாக்கள் கொண்டாடப்பட்டமை குறித்தும் பௌத்தப் பள்ளி, சமணப் பள்ளி, அந்தணர் பள்ளிகள் இருந்தமை குறித்தும் கூறும் நூல் இது.

"மழை கொளக் குறையாது புனல் புக மிகாது
கரை பொருது இரங்கும் முந்நீர் போல
கொளக் கொளக் குறையாது தரத்தர மிகாது"

நாளங்காடியும் அல்லங்காடியும் இருந்ததாகவும் மதுரை மாநகர் தூங்கா நகரமாக விளங்கியதையும் இந்நூல் பதிவுசெய்கிறது.

7. நெடுநல்வாடை

ஆசிரியர் நக்கீரர். திருமுருகாற்றுப்படையைப் பாடியவரும் நக்கீரர்தான். 188 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன நூல். பாண்டியன் நெடுஞ்செழியனே இதன் பாட்டுடைத் தலைவன் என்று கூறுவார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர். அரசமாதேவிக்கு நெடிய வாடையாகவும் மன்னனுக்கு நல்ல வாடையாகவும் இருந்ததால் நெடுநல்வாடை எனப் பெயர் பெற்றது. அரண்மனை அமைக்கும் தொழில்நுட்பம் குறித்துக் கூறும் நூல். பூவின் மலர்ச்சியைக் கொண்டு பொழுதினை அறிதல், படுக்கையறையில் குளிர் காய்வதற்குப் பயன்படும் 'மிடா' இருத்தல் போன்ற வியத்தகு செய்திகள் குறித்துக் கூறும் நூல்.

"குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்"

என்று குளிர்காலத்தை வருணிக்கிறது.

8. குறிஞ்சிப்பாட்டு

ஆசிரியர் கபிலர். 261 அடிகளைக் கொண்ட ஆசிரியப் பாவால் ஆன அகநூல். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தக் கபிலர் பாடியது என்ற குறிப்பு உள்ளது.

இது தோழி அறத்தொடு நிற்றல் என்ற துறையில் அமைந்த நூலாகும். இதில் குறிஞ்சி நிலத்தில் பூக்கும் 99 வகையான பூக்களின் பெயர்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

> *“இகல்மீக் கடவும் இருபெரும் வேந்தர்*
> *வினையிடை நின்ற சான்றோர் போல”*

போன்ற சிறந்த அடிகள் பல உள்ள நூல்.

9. பட்டினப்பாலை

பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிக்கும். இதன் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். 301 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆன அகநூல். செலவழுங்கல் (தலைவியைப் பிரிந்துசெல்லத் தலைவன் மறுப்பது) என்ற துறையில் அமைந்த நூல். அகநூல் ஆயினும் புறச் செய்திகளே மிகுதியாக உள்ளன. கரிகால் பெருவளத்தானின் புகழ், ஆட்சிச் சிறப்பு, நாட்டின் வளம் ஆகியவற்றைப் பாடும் நூலாக அமைந்துள்ளது.

> *“காடு கொன்று நாடாக்கி*
> *குளம் தொட்டு வளம் பெருக்கி”*

போன்ற சிறந்த அடிகள் பல இடம்பெற்ற நூல்.

10. மலைபடுகடாம்

மலையை யானையாகவும் மலையிலிருந்து விழும் அருவியின் ஓசையைக் கடாமாகவும் (யானையின் வாயிலிருந்து வழியும் மதநீர்) உருவகித்து, மலைபடுகடாம் என்ற பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்.

இதன் பாட்டுடைத் தலைவன் செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னன். இரணிய முட்டம் என்பது மதுரையை அடுத்துள்ள ஆனைமலை, அழகர் மலை பகுதியாகும். நன்னன் ஆண்ட பகுதி சவ்வாது மலையாகும். பண்டைய இசைக்கருவிகள் குறித்து மிகுதியாகக் கூறுகிறது. நன்னனின் தலைநகரம் செங்கண்மா (செங்கம்) குறித்தும் சேயாறு (இன்றைய சண்முக நதி, செய்யாறு) குறித்தும் கூறுகிறது.

> *“இட்ட எல்லாம் பெட்டாங்கு விளைய*
> *பெயரொடு வைகிய வியன்கண் இரும்புனம்”*

முதலிய சிறந்த அடிகள் இடம்பெற்றுள்ள நூல்.

சங்க இலக்கியத்தின் சிறப்புகள்:

- இந்தியாவில் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளின் இலக்கியங்களில் மிகப் பழைய இலக்கியம் சங்க இலக்கியம்.
- தமிழில் திணை (ஐந்திணை வாழ்வியல் முறை) இலக்கியம் என்று போற்றத்தக்க இலக்கியம்.
- அகம் - புறம் என்னும் தெளிந்த படைப்புப் பொருளை உணர்த்தி நிற்பது.

- அகப் பாடல்களில் பாத்திரங்களின் பெயர், அவர்களது ஊர், நாடு ஆகியன குறிப்பிடப்படக் கூடாது என்னும் நனிநாகரிகப் படைப்புக் கோட்பாட்டை உலகுக்கு உணர்த்துவது.

- உள்ளுறை, இறைச்சி போன்ற இலக்கியச் சுவைகள் நிறைந்த இலக்கியம்.

- தமிழை ஓர் உயர்தனி செம்மொழியாக அடையாளப்படுத்த மிகவும் உறுதுணையாக விளங்கும் இலக்கியம்.

- தமிழர்தம் வாழ்வியல், வரலாறு ஆகியவற்றை அறியவும் ஆய்வுசெய்யவும் உதவும் ஒப்பற்ற இலக்கியம்.

- 2000 ஆண்டுகளுக்கு முன்பே செம்மாந்த மொழி நடையில் இயற்றப்பட்ட இலக்கியம்.

3. அற இலக்கியங்கள்

இவை செய்யக்கூடியன இவை செய்யக்கூடாதன என்று வரையறுத்துக் கூறும் இலக்கியம் அற இலக்கியம் ஆகும்.

வேறுபெயர்கள்:

- சங்கக் காலத்தை அடுத்து (கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை) தோன்றியதால் சங்கம் மருவிய கால இலக்கியம் என்றும்

- களப்பிரர்கள் ஆண்ட காலம் ஆதலால் களப்பிரர் கால இலக்கியம் என்றும்,

- 18 நூல்களின் தொகுப்பு ஆதலால் பதினெண் கீழ்க்கணக்கு (கணக்கு - நூல்) என்றும் இதற்குப் பல்வேறு பெயர்கள் உண்டு.

நூல்கள்:

“நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்
பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இந்நிலையைக் காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைநிலைய வாம் கீழ்க் கணக்கு”

என்ற பழம் பாடல் 18 நூல்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறது. இப்பதினெட்டு நூல்களையும் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. பன்னிரு பாட்டியல் என்ற இலக்கண நூல், பதினெண் கீழ்க்கணக்கு நூலுக்கு இலக்கணம் கூறியுள்ளது. இவற்றுள் அறக் கருத்துகளைக் கூறும் நூல்கள் 11. அவை வருமாறு:

அறநூல்கள்: 1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. முப்பால் (திருக்குறள்), 6. திரிகடுகம், 7. ஆசாரக்கோவை, 8. பழமொழி நானூறு, 9. சிறுபஞ்சமூலம், 10. முதுமொழிக்காஞ்சி, 11. ஏலாதி.

அகநூல்கள்: 1. கார்நாற்பது, 2. ஐந்திணை ஐம்பது, 3. ஐந்திணை எழுபது, 4. திணை மொழி ஐம்பது, 5. திணைமாலை நூற்றைம்பது, 6. கைந்நிலை (இந்நிலை).

புறநூல்: 1. களவழி நாற்பது.

பதினெண் கீழ்க்கணக்கில் மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல்கள் மூன்று உள்ளன. அவை திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி.

1. நாலடியார்

பாண்டி நாட்டுச் சமண முனிவர்கள் இயற்றிய பாடல்களின் தொகுப்பு. இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆன ஒரே தொகுப்பு நூல் ஆகும். இந்நூல் மூன்று பிரிவுகளை உடையது. அறத்துப்பால் - 13, பொருட்பால் - 24, இன்பத்துப்பால் - 3 அதிகாரங்களை உள்ளடக்கியது. இதற்கு 'வேளாண் வேதம்', 'திருக்குறளின் விளக்கம்' போன்ற வேறு பெயர்களும் உண்டு. இதனைத் தொகுத்தவர் பதுமனார். மூன்று பாலையும் 40 அதிகாரங்களையும் கொண்ட நூல். 12 இயல்களும் உள்ளன. கீழ்க்கணக்கில் திருக்குறளுக்கு அடுத்துப் புகழ் பெற்ற நூல் இதுவாகும். இதனை 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி', 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி', 'பழகு தமிழ்ச் சொல் அருமை நாலிரண்டில்' ஆகிய தொடர்களால் அறியலாம். இந்நூலை, ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

"*கல்வி கரையில கற்பவர் நாள் சில*"

போன்ற சிறந்த அடிகள் பலவற்றைப் பெற்ற நூல்.

2. நான்மணிக்கடிகை

கடிகை என்றால் துண்டு (பகுதி), கட்டுவடம்/அட்டிகை (Necklace), ஆபரணம் எனப் பல பொருள்கள் உண்டு. ஒவ்வொரு பாடலிலும் நான்கு மணியான அறக் கருத்துகள் கூறப்படுவதால், இது நான்மணிக்கடிகை எனப்பட்டது. இதன் ஆசிரியர் விளம்பிநாகனார். இவர் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இந்நூலில் மொத்தம் 140 பாடல்கள் உள்ளன. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் மூன்று உண்மைகளைக் கூறிச் சென்று, முடிவில் நான்காவதாக, சிறப்பு உண்மை ஒன்றைச் சொல்வதையும் இந்நூலில் நாம் காணமுடிகிறது. ஜி.யு.போப் நான்மணிக்கடிகையின் இரண்டு பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார் என்பது சிறப்பு.

"*யார் அறிவார் நல்லாள் பிறக்கும் குடி*"

"*வெல்வது வேண்டின் வெகுளி விடல்*"

"*இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்*"

போன்ற கருத்தாழம் மிக்க அடிகள் இதில் உள்ளன.

3. இன்னா நாற்பது

கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 பாடல்கள் இந்நூலில் உள்ளன. ஆசிரியர் கபிலர். நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். மனிதர்களுக்குத் துன்பம் கொடுக்கும் செயல்களை

ஆசிரியர் தொகுத்துக் கூறியுள்ளார். இதில் மொத்தம் 164 இன்னா செயல்கள் கூறப்பட்டுள்ளன.

“தீமையுடையார் அருகில் இருத்தல் இன்னா”
“ஊனைத் தின்று ஊனைப் பெருக்கல் முன்இன்னா”
“பொருள் இல்லார் வண்மை இன்னா”

என்பன போன்ற பல அடிகள் உள்ளன.

4. இனியவை நாற்பது

கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 பாடல்கள் உள்ளன. ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதன் சேர்ந்தனார். இவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். மனித வாழ்வுக்கு இவை இவை இனியவை என்று இதில் 124 இனிய செயல்கள் கூறப்பட்டுள்ளன.

“ஒப்ப முடிந்தால் மணவாழ்க்கை முன் இனிது”
“வருவாய் அறிந்து வழங்கல் இனிது”

போன்ற கருத்தாழம் மிக்க பாடல்களும் உண்டு.

5. கார் நாற்பது

சிறப்புப் பாயிரம் நீங்கலாக 40 வெண்பாக்கள் உள்ளன. ஆசிரியர் மதுரைக் கண்ணன் கூத்தனார். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இது ஒருதிணையை மட்டும் பாடும் அகநூல். முல்லைத் திணை ஒழுக்கமாகிய (தலைவனது பிரிவைத் தலைவி) ஆற்றி இருத்தல் பற்றி மட்டும் கூறுகிறது. அனைத்துப் பாடல்களிலும் கார்கால வருணனை வருகிறது. தலைவன், தலைவி, தோழி, பாங்கன் என்ற நால்வர் மட்டும் இடம்பெறுகின்றனர்.

“பாடுவண்டு ஊதும் பருவம் பணைத்தோளி
வாடும் பசலை மருந்து”

போன்ற சுவைமிகுந்த அடிகள் பல அடிகள் உண்டு.

6. களவழி நாற்பது

நாற்பது வெண்பாக்கள் உள்ளன. ஆசிரியர் பொய்கையார். பதினெண் கீழ்க்கணக்கில் புறம் பற்றிக் கூறும் ஒரே நூல். சோழன் செங்கணானுக்கும் சேரன் கணைக்கால் இரும்பொறைக்கும் கழுமலம் என்ற இடத்தில் நடந்த போரில், தோற்ற சேரனைச் சோழன் குடவாயில் கோட்டம் என்ற ஊரில் சிறை வைத்தான். சேரனை மீட்கப் பொய்கையார் சோழனைப் புகழ்ந்துபாடும் நோக்கில் இதனைப் படைத்தார் என்பர். ஆனால், சேரன் சிறையில் அருந்த நீர் கேட்டு அது தாமதமாகத் தரபட்டதால், மானம் கருதி உயிர் விட்டான். இந்நூல் யானைப் போர் பற்றி மட்டுமே பாடுகிறது. பிற்காலத்தில் ஒரு துறைக் கோவை, பரணி இலக்கியம் போன்றவை தோன்ற இந்நூல் வழி வகுத்தது எனலாம்.

7. ஐந்திணை ஐம்பது

திணைக்குப் பத்துப் பாடல்களாக 50 பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் மாறன் பொறையனார். நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இது ஒரு அகநூல்.

“வெஞ்சுடர் அன்னானை யான் கண்டேன் கண்டாளாம்
தண் சுடர் அன்னாளைத் தான்”

போன்ற சுவையான அடிகள் பல இதில் உள்ளன.

8. ஐந்திணை எழுபது

திணைக்கு 14 பாடல்களாக மொத்தம் எழுபது பாடல்கள் உள்ளன. இதுவும் ஒரு அகநூல். ஆசிரியர் மூவாதியார். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இந்நூலில் 60, 70 ஆகிய இரு பாடல்களும் கிடைக்கவில்லை.

“நன்மலை நாட! மறவல் வயங்கிழைக்கு
நின்அலது இல்லையால் ஈயாயோ கண்ணோட்டத்து
இன்னுயிர் தாங்கும் மருந்து”

என்பது போன்ற பல அகச்சுவைப் பாடல்கள் உள்ளன.

9. திணைமொழி ஐம்பது

திணைக்குப் பத்துப் பாடல்களாக ஐந்து திணைகளுக்கும் மொத்தம் 50 பாடல்கள் உள்ளன. ஆசிரியர் கண்ணன் சேந்தனர். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

“துணிகடல் சேர்ப்பன் துறந்தான்கொல் தோழி
தணியும் என் தோள் வளை”

என்பது போன்று பாடல்களைக் கொண்டுள்ள நூல்.

10. திணைமாலை நூற்றைம்பது

திணைக்கு முப்பது பாடலாக மொத்தம் 150 அகப் பாடல்கள் உள்ளன. ஆசிரியர் கணிமேதாவியார். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர். ஏலாதி என்ற நூலின் ஆசிரியரும் இவரே ஆவார்.

“ஒருசுடரும் இன்றி உலகு பாழாக
இருகடரும் போந்தன என்றார்”

என்பன போன்ற பல அடிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

11. திருக்குறள் (முப்பால்)

தமிழில் திரு என்ற அடைபெற்ற முதல் நூல் இது எனலாம். இதற்குத் தெய்வ நூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, பொருளுரை, திருவள்ளுவம் என்ற வேறு பெயர்களும் உண்டு. இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவருக்கு முதற்பாவலர். தெய்வப்புலவர், செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவன் என்ற வேறு பெயர்களும் உண்டு. இவரைப் பற்றி எந்த உறுதியான தகவலும் தெரியவில்லை. இவர் மயிலாப்பூரில் வசித்தார் என்றும் மதுரையில் வசித்தார் என்றும் வாசுகி இவர் மனைவி என்றும் கூறப்படுபவை அனைத்தும் செவிவழிச் செய்திகளே.

இந்நூலில் அறம், பொருள், இன்பம் என மூன்று பாலும் 133 அதிகாரங்களும் 1330 பாக்களும் உள்ளன.

அறத்துப்பால் - 38 அதிகாரம் (380 பாடல்கள்)
பொருட்பால் - 70 அதிகாரம் (700 பாடல்கள்)
காமத்துப்பால் - 25 அதிகாரம் (250 பாடல்கள்).

இந்நூலுக்கு இதுவரை 300 பேருக்கும் மேல் உரை எழுதியுள்ளனர். அவற்றுள் பரிமேலழகர் உரையே சிறந்த உரையாகப் போற்றப்படுகிறது. திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் செய்யுள் நூல் 'திருவள்ளுவ மாலை'யாகும். இன்றுள்ள திருவள்ளுவரின் திருஉருவப்படத்தை வரைந்தவர் ஓவியர் வேணுகோபால சர்மா என்பவர் ஆவார்.

"*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்*"

"*பெண்ணின் பெருந்தக்க யாவுள*"

"*அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்*"

"*அறிவு அற்றம் காக்கும் கருவி*"

போன்ற அரிய அறக் கருத்துக்கள் மிகுதியாக உள்ளன. திராவிடக் கருத்தாக்கம் மேலோங்கிய காலத்திலிருந்து திருக்குறள் மக்களிடம் வெகுவாகப் பரவத் தொடங்கியது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இதன் தனிச் சிறப்புகள்,

- திருக்குறள் அதிக அடிகளைக் கொண்ட நூல்.
- அதிக அறங்களைச் சொல்லும் நூல்.
- செய்யுள் பெயரால் (குறள்) பெயர் பெற்ற ஒரே நூல்.
- குறள் வெண்பாவால் ஆன ஒரே நூல்.
- உலக அளவில் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இலக்கிய நூல்களுள் முதலாம் இடத்தில் உள்ள நூல்.

"*வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"

எனப் பாரதியாரும்

"*வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே*"

எனப் பாரதிதாசனும் போற்றுகின்றனர்.

12. திரிகடுகம்

இந்நூலில் நூறு பாடல்கள் உள்ளன. ஆசிரியர் நல்லாதனார். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். மருந்தால் பெயர் பெற்ற நூல். திரியென்றால் மூன்று; கடுகம் என்றால் காரம். காரமுள்ள மூன்று மருந்துகள் (சுக்கு, மிளகு, திப்பிலி) என்பது கருத்து. இம் முன்று மருந்துகளைப்போல் ஒவ்வொரு பாடலிலும் மூன்று கருத்துகள் வலியுறுத்தப்படுகின்றன.

"*வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்*"
"*தாளாளன் என்பான் கடன்பட வாழாதான்*"
"*கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி*"

எனப் பல அரிய கருத்துகள் இதன் பால் உள.

13. ஆசாரக்கோவை

நூறு பாடல்களைக் கொண்ட நூல். ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அன்றாட வாழ்க்கையில் செய்யும் சிறு சிறு வேலைகளையும் எப்படிச் செய்ய வேண்டும் என்று கூறும் சிறப்பான நூல். இதற்கு ஆசாரமாலை என்ற பெயரும் உண்டு.

“கைப்பன எல்லாம் கடை, தலைத் தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறை வகையால் ஊண்”

என உணவு உண்ணும் முறைகள் குறித்த பாடல் உள்ளிட்ட சுவையான பாடல்கள் நிறைந்தது.

14. பழமொழி நானூறு

பழமொழி நானூறு அதன் சிறப்புப் பாயிரத்தையும் கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த 401 பாடல்களைக் கொண்ட அற நூலாகும். இது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. முன்றுறை என்பது ஊர்ப் பெயர் என்றும் அரையன் என்ற பட்டம் பெற்றவர் என்றும் கூறுவர். இவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இதில் உள்ள பழமொழிகள் அனைத்தும் இலக்கியப் பழமொழிகள் ஆகும்.

ஒரு கதையோ வரலாற்று நிகழ்வோ சுட்டி உரைக்கப்பட்டு, பாடலின் இறுதியில் பழமொழி வாயிலாக அறக்கருத்து சுட்டப்படுவதாலும் நானூறு பாடல்களை உடையதாலும் பழமொழி நானூறு எனப் பெயர் பெற்றது.

இந்நூல் பெரும் பிரிவுகள் 5, இயல்கள் 34 என அமைந்ததாகும்.

பிரிவு - 1 - கல்வி, ஒழுக்கம், புகழ் (9 இயல்கள்)
பிரிவு - 2 - சான்றோர், நட்பின் இயல்பு (7 இயல்கள்)
பிரிவு - 3 - முயற்சி, பொருள் (8 இயல்கள்)
பிரிவு - 4 - அரசர், அமைச்சர் (6 இயல்கள்)
பிரிவு - 5 - இல்வாழ்க்கை, உறவினர், வீடு (4 இயல்கள்)

சங்கக் காலக் குறுநில மன்னர்கள், மூவேந்தர்கள், புலவர்கள் பற்றிய குறிப்புகளைத் தரும் நூல்.

“அணி எல்லாம் ஆடையின் பின்”
“கற்றலின் கேட்டலே நன்று”
“குலவிச்சை கல்லாமல் பாகம்படும்”
“பாம்பறியும் பாம்பின கால்”

என்பன போலப் புகழ்பெற்ற அடிகள் பல உள்ள நூல் இது.

15. சிறுபஞ்சமூலம்

பஞ்சம் - ஐந்து, மூலம் - வேர்கள். 5 வேர்களாவன: கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், சிறு நெருஞ்சி வேர் போன்றவை. மருந்தால் பெயர் பெற்ற நூல். மொத்தம் 102 வெண்பாக்கள் இதில் உள்ளன.

இதன் ஆசிரியர் காரியாசான். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். 'தோலால் செய்த கன்றுக்குட்டியைக் காட்டி, பசுவிடம் பால் கறக்கும் பழக்கம் கொடியது' என்று கூறும் நூல். மேலும்,

"பேதைக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு"

"நூலுக்கு இயைந்த சொல்லின் வனப்பே வனப்பு"

என்பன போன்ற சிறந்த அடிகளைக் கொண்ட நூல்.

16. முதுமொழிக்காஞ்சி

ஆசிரியர் கூடலூர் கிழார். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இந்நூலில் 10 பிரிவுகளும் பிரிவுக்குப் பத்துப் பாடலுமாக மொத்தம் 100 பாடல்கள் உள்ளன. சிறந்த பத்து, பழியாப் பத்து எனப் பலவாறு பெயர் பெறுகிறது. ஒவ்வொரு பத்தும் 'ஆர்கலி உலகத்து' எனத் தொடங்குகிறது.

"ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"

"மேதையின் சிறந்தன்றுக் கற்றது மறவாமை"

எனப் பல சிறந்த அடிகள் இடம் பெற்றுள்ளன.

17. ஏலாதி

ஏலாதி என்பதற்கு 'ஏலத்தை (வாசனை மற்றும் மருந்துப் பொருள்) முதலாக உடையது' என்று பொருள். மருந்தால் பெயர் பெற்ற நூல். ஆசிரியர் கணிமேதாவியார். திணைமாலை நூற்றைம்பதின் ஆசிரியரும் இவரே. ஏலம், இலவங்கம், சிறுநாவற் பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்ற ஆறும் ஏலாதி எனப்படுவன ஆகும். ஒவ்வொரு பாடலிலும் ஆறு கருத்துகள் இடம் பெற்றுள்ளன. மொத்தம் 80 பாடல்கள் உள்ளன. 'உணவு கொடுத்து ஆதரிப்போர் பெருவாழ்வு பெறுவர்' என்று 21 பாடல்களில் வலியுறுத்துகின்றது.

18. கைந்நிலை

ஆசிரியர் புல்லங்காடனார். ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இது ஒரு அகநூல். மொத்தம் 60 பாடல்கள் உள்ளன. இதற்கு ஐந்திணை அறுபது என்ற பெயரும் உண்டு. இதன் பாடல்கள் சில சிதைந்து காணப்படுகின்றன.

அற இலக்கியத்தின் சிறப்புகள்

- அனைத்தும் வெண்பா என்ற செய்யுள் வடிவால் ஆனவை.
- இதில் உள்ள அக நூல்கள் சங்க அக மரபை அழியாமல் காக்க முயல்கின்றன.
- 'உள்ளத்துக்கும் உடலுக்கும் மருந்தாவன' என்னும் உயரிய சிந்தனை வியக்க வைக்கிறது.
- இதில் உள்ள ஐந்திணைப் பாடல்களே பிற்காலத்தில் தோன்றிய காப்பியங்களில் ஐந்நில வருணனையாக வளர்ச்சி அடைந்தன எனலாம்.

- இதில் உள்ள திருக்குறள் உலகப் புகழ் பெற்ற நூலாகும்.
- சங்கக் காலத்திற்குப் பின் பல்லவர்களுக்கு முன் உள்ள இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் குறித்து அறிந்து கொள்ளத் துணை புரியும் நூல்கள் இவை.

4. காப்பியங்கள்

அரசர்கள் மீஉயர் மாந்தர்கள் உள்ளிட்டோரின் முழுமையான (பிறப்பு முதல் இறுதிவரையான) கதைகளைக் கூறும் படைப்புகள் காப்பிய இலக்கியமாகும். தண்டியலங்காரம் என்ற இலக்கண நூல் காப்பியத்தின் இலக்கணத்தை விரிவாகக் கூறுகிறது.

காப்பியத்தின் வேறு பெயர்கள்

பொருள் தொடர்நிலை செய்யுள், கதைச் செய்யுள், அகலக் கவி, தொடர்நிலை செய்யுள், விருத்தச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், காவியம் ஆகியன காப்பியத்தின் வேறு பெயர்களாக விளங்குகின்றன.

காப்பிய வகை

காப்பியத்தைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரண்டாகப் பிரிப்பர். அத்துடன் சமயக் காப்பியங்கள் என்ற ஒன்றும் இக்காலத்தில் சேர்ந்துள்ளது.

அ. ஐம்பெரும் காப்பியங்கள்

நன்னூல் உரையாசிரியரான மயிலைநாதர்தான் முதன் முதலாக ஐம்பெரும் காப்பியங்கள் என்ற தொடரைக் கூறியவர் ஆவார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களுடன் தூது, போர், வெற்றி, முடிசூட்டல், மக்கட்பேறு, இரு சுடர் (சூரியன், சந்திரன்) தோற்றம், மறைவு போன்ற உறுப்புகள் அமையப் பாடுவது பெருங்காப்பியம் என்று தண்டியலங்காரம் கூறுகிறது. ஐம்பெரும் காப்பியங்களும் அவற்றின் ஆசிரியர்களும் வருமாறு:

சிலப்பதிகாரம்	- இளங்கோவடிகள்
மணிமேகலை	- சீத்தலைச் சாத்தனார்
சீவக சிந்தாமணி	- திருத்தக்க தேவர்
வளையாபதி	- பெயர் அறியப்படவில்லை
குண்டலகேசி	- நாதகுத்தனார்

1. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள். சேரன் செங்குட்டுவனின் தம்பி. இளம் வயதில் துறவு பூண்டு, குடவாயில் கோட்டம் என்ற இடத்தில் இருந்தார் என்றும் சீத்தலைச் சாத்தனார் இவரின் நண்பர் என்றும் கூறப்படுகிறது. மூன்று காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்ட நூல். காதை என்பதற்குக் கதை பொதிபாட்டு என்று பொருள்.

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதற் காப்பியம் எனக் கருதப்படுகிறது. கோவலன் கண்ணகி, மாதவி ஆகியோரது வரலாற்றை விவரிப்பது. கதையில் வரும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் சிலம்பே காரணமாக இருத்தலின் இது சிலப்பதிகாரம்

எனப்பட்டது. இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்டது. காப்பியங்களுக்கான இலக்கண அமைப்புகள் அனைத்தும் பொருந்தியது. இதனை 'குடிமக்கள் காப்பியம்' என்றும், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் விரவிக் காணப்படுவதால் 'முத்தமிழ்க் காப்பியம்' என்றும், புதுமை மிகு கருத்துகள் கொண்டதால் 'புரட்சிக் காப்பியம்' என்றும், சேரச் சோழ மன்னர்களின் பெருமை பேசுவதால் 'மூவேந்தர் காப்பியம்' என்றும் அக்காலத் தமிழக மக்களின் வரலாற்றை அறியும் கருவூலமாக விளங்குவதால் 'வரலாற்று காப்பியம்' என்றும் பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றது.

காவிரி, வைகை முதலான ஆறுகளும் புகார், மதுரை, வஞ்சி முதலான நகரங்களும் குரவைக் கூத்து முதலிய கூத்துகளும் அடர்ந்து வளர்ந்த பெருங்காடுகளும், மலைகளும், சமவெளிகளும் இந்நூலில் சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளன. இது கடவுள் வாழ்த்துடன் தொடங்காமல் திங்கள், ஞாயிறு, மழை என இயற்கை வாழ்த்துடன் தொடங்குகிறது.

கதை

பூம்புகார் நகரில் வணிகக் குலத்தில் பிறந்த கோவலன், கண்ணகியை மணந்து வாழ்ந்து வந்தான். மாதவி என்ற ஆடல் மங்கையுடன் ஏற்பட்ட தொடர்பால் தன் செல்வங்களை எல்லாம் இழந்து, முடிவில் பொருளீட்ட மனைவியுடன் மதுரை சென்றான். அங்குத் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, பாண்டிய மன்னனால் கொல்லப்பட்டான். கண்ணகி தன்னிடமிருந்த மற்றொரு சிலம்பைச் சாட்சியாக்கி, பாண்டியனை வென்று மதுரையைத் தீக்கிரையாக்கினாள். பின் சேர நாடு சென்று கணவனை இழந்த 14ஆம் நாள் தேவ வடிவில் வந்த கணவனுடன் வானகம் புகுந்ததாகக் கதை அமைகிறது.

இம் முதன்மைக் கதையுடன் தேவந்தி வரலாறு, பூம்புகாரின் பத்தினிப் பெண்டிர் கதை, பொற்கைப் பாண்டியன் கதை, வார்த்திகன் கதை போன்றவை கிளைக் கதைகளாக உள்ளன. இதில்,

> *"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"*
>
> *"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"*
>
> *"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்"*

என்னும் மூன்றும் சிலம்பின் குறிக்கோள்கள் ஆகும்.

> *"நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டே மால்"*
>
> *"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து*
> *நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்*
> *பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"*

போன்ற சிறந்த பாடலடிகள் பல உள்ளன. இதனை,

> *"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு"*

என்று புகழ்ந்துரைக்கிறார் பாரதியார்.

2. மணிமேகலை

இதன் ஆசிரியர் மதுரை கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனார். சீத்தலை என்பது திருச்சிக்கு அருகே உள்ள ஊர். காலம் இரண்டாம் நூற்றாண்டு. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. பெண்ணின் பெருமை பேசும் இது ஆபுத்திரன் வரலாறு, அமுதசுரபி வரலாறு, காயசண்டிகை வரலாறு, விருச்சிக முனிவன் வரலாறு என மிகுந்த கிளைக் கதைகளைக் கொண்ட காப்பியமாகத் திகழ்கிறது.

இதில், காண்டப் பிரிவுகள் இல்லை. 30 காதைகளைக் கொண்டது. இந்நூல் 'மணிமேகலை துறவு' எனவும் குறிக்கப்படுகிறது. காப்பியத் தொடர்ச்சி, பா வளம், காலத் தொடர்பு, காப்பிய அமைப்பு கதைக்களம் எனப் பல படைப்பு இயல்புகள் கருதி, இவ்விரு காப்பியங்களும் 'இரட்டைக் காப்பியம்' என்றும் அழைக்கப்பெறும்.

மக்களிடையே பௌத்தச் சமயக் கொள்கைகளைப் பரப்பிட எழுந்த சமயப் பிரச்சார விளக்க நூல் மணிமேகலை ஆகும். கதை கூறுவதுடன் மூவகை பத்தினி பெண்டிர், பிணத்தினை அடக்கம் செய்யும் ஐந்து முறைகள், தீயவை 10, பசிப்பிணி போக்க வேண்டும், சிறையை ஒழிக்க வேண்டும், ஏழைகளையும் ஊனமுற்றோரையும் காக்க வேண்டும் போன்றவற்றுக்கு முதன்மை கொடுக்கும் காப்பியமாக உள்ளது.

கதை

மாதவிக்குப் பின்னர் அவரது மகள் மணிமேகலை குல வழக்கப்படி இந்திர விழாவில் நாட்டியமாட வருவாள் என்று அனைவரும் எதிர்பார்க்க மாதவியோ தானும் துறவு பூண்டு, தன் மகள் மணிமேகலையையும் துறவு பூணச் செய்கிறாள். மணிமேகலையை ஒருதலையாகக் காதலிக்கும் இளவரசன் உதயகுமாரன், அவளைப் பின்தொடர்கிறான். உதயகுமாரனிடமிருந்து அவளைக் காப்பாற்றுவதற்காக மணிமேகலா தெய்வம் அவளை மணி பல்லவம் என்னும் தீவிற்கு மணிமேகலையை எடுத்துச் செல்கிறது.

மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு மூன்று மந்திரங்களை உபதேசித்து மறைகிறது. மந்திரங்களைப் பெற்றுக் கொண்ட மணிமேகலை, மணிபல்லவத் தீவைச் சுற்றிப் பார்த்தனள். அப்போது தீவதிலகை மணிமேகலையைப் பாராட்டுகிறாள். அங்கு, சிறப்புடைய பீடிகையைத் தொழுது ஏத்திய நிலையில், கோமுகி என்னும் பொய்கையிலிருந்து தோன்றும் அமுதசுரபி என்னும் உணவுப் பாத்திரம் மணிமேகலை கையில் வந்து சேர்ந்தது. மணிமேகலை அமுதச் சுரபியைப் பெற்ற மகிழ்ச்சியில் புத்தத் தேவனைத் துதித்து ஏத்தினள். அமுதசுரபியைக் கைக்கொண்ட மணிமேகலை புகார் நகரை அடைந்து மாதவியைக் கண்டு வணங்கினாள். தொடர்ந்து உலக மக்களுக்கெல்லாம் பசிப்பிணி போக்கும் பணியினை மேற்கொண்டாள்.

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாதிது கேள் மன்னுயிர்க்கெல்லாம்

உண்டியும் உறையுளும் அல்லது
கண்டது இல்''

போன்ற கருத்தாழம் மிக்க அடிகள் இந்நூலில் நிறைந்துள்ளன.

3. சீவக சிந்தாமணி

இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர். ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவர், சோழ மரபினர். சீவக சிந்தாமணியை இயற்றுவதற்கு முன் நரிவிருத்தம் பாடித் தன் துறவை உறுதி செய்ததாகக் கூறுவர். இது சமணக் காப்பியம். சீவக சிந்தாமணி நூல் வடமொழியில் உள்ள கத்திய சிந்தாமணி, க்ஷத்திர சூடாமணி என்ற இரு நூல்களைத் தழுவி எழுதப்பட்டது. இதற்கு மணநூல், காம நூல், முக்தி நூல் என்ற வேறு பெயர்களும் உண்டு. இதில் காதைப் பிரிவுகள் இல்லை. 13 இலம்பகங்களையும் 3,145 பாடல்களையும் கொண்டது. இடைக்காலத்தில் அனைத்துச் சமயத்தாரும் விரும்பிக் கற்ற நூல். விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் என்பர்.

கதை

இதன் கதைத் தலைவன் சீவகன். சீவகனின் ஆசிரியர் அச்சணந்தி. இவன் தந்தை எதிரிகளின் சூழ்ச்சியால் நாட்டை இழக்க, தாய் தப்பிச் சென்று ஒரு இடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுக்கிறாள். வளர்ந்து சீவகன் காந்தர்வதத்தை முதல் சுரமஞ்சரி வரை எட்டுப் பெண்களை மணம் செய்து கொள்கிறான். பின்னர் நாட்டை மீட்டு நல்லாட்சி நடத்தி, இறுதியில் துறவு மேற்கொள்கிறான்.

''காய்மாண்ட தெங்கின் பழம்வீழ...''
''சொல்லரும் சூல் பசும் பாம்பின் தோற்றம்போல்...''

போன்ற சுவையான அடிகள் இந்நூலில் நிறைந்துள்ளன.

4. வளையாபதி

ஆசிரியர் பெயர் அறியப்படாத சமணக் காப்பியம். நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. 66 பாடல்களும் உரை மேற்கோள்களிலிருந்து ஆறு பாடல்களுமாக மொத்தம் 72 விருத்தப்பாக்கள் கிடைத்துள்ளன. இதன் மூலநூல் வைசிக புராணம். இதில் 35 சருக்கங்கள் உள்ளன. நவகோடி நாராயணன் பற்றி கூறுகிறது. மடலேறுதல் பற்றிக் கூறும் காப்பியமாகவும் உள்ளது. இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மிகவும் போற்றப்பட்ட நூல். ஒட்டக்கூத்தர் என்ற புலவர் கவியழகு வேண்டி வளையாபதியை நினைந்தார் என்று தக்கயாகப் பரணி உரையாசிரியர் கூறுகிறார்.

கதை

நவகோடி நாராயணன் என்னும் வணிகன் தாழ்ந்தகுலத்துப் பெண் ஒருவரை மணக்கிறான். இருவருக்கும் ஒரு மகவு பிறந்த நிலையில், அவனது பெற்றோரின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அவன் வேறொரு பெண்ணை மணக்கிறான். பிற்காலத்தில் முதல் மனைவியின் மகனால் குடும்பம் ஒன்று சேர்வதே கதை.

''பொறை இலா அறிவு போகப் புணர்வு
இலா இளமை மேவத்
துறை இலா வசன வாவி, துகில் இலா

கோலத் தூய்மை
நறை இலா மாலை கல்வி நலம்இலாப்
புலமை நன்னீர்
சிறை இலா நகரம் போலும்
சேய் இலாச் செல்வம் அன்றே''

போன்ற சிறந்த அடிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

5. குண்டலகேசி

ஆசிரியர் நாதகுத்தனார். 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இது ஒரு பௌத்த நூல். குண்டலகேசி என்பதற்குச் சுருண்ட தலை முடியை உடையவள் என்று பொருள். நூல் முழுவதும் கிடைக்கவில்லை. 224 பாடல்கள் மட்டும் கிடைத்துள்ளன. புறத்திரட்டிலிருந்து 19 பாடல்கள் பிற உரைகளிலிருந்து 25 பாடல்கள் கிடைக்க அவை தொகுக்கப்பட்டுள்ளன.

கதை

குண்டலகேசியின் இயற்பெயர் பத்திரை. இராஜகிருக நாட்டு மந்திரியின் மகள். காளன் என்ற கள்வனைக் காதலித்து மணந்தவள். அவனது துர்புத்தியை அறிந்து மலையில் இருந்து அவனைக் கீழே தள்ளிக் கொன்றுவிடுகிறாள். பின் பௌத்த மதத்தைத் தழுவிச் சமூகப்பணிகளைச் செய்கிறாள். இக்கதை பின்னாளில் மந்திரிகுமாரி என்ற பெயரில் திரைப்படம் ஆனது.

''பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ்வியல்பும் இன்னே
மேல்வரும் மூப்பும் ஆகி
நாளும் நாம் சாகின்றேமால்
நமக்கு நாம் அழாதது என்னே''.

போன்ற அரிய கருத்துகளுடன் கூடிய பாடல்கள் இக்காப்பியத்துள் இடம்பெற்றுள்ளன.

ஆ. ஐஞ்சிறு காப்பியங்கள்

காப்பிய இலக்கணத்தைப் பெற்று அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள் நான்கினுள் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறு காப்பியம் எனப்படும். ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற வழக்கினை ஏற்படுத்தியவர் யாழ்ப்பாணத்துத் தமிழ் அறிஞர் சி.வை தாமோதரம் பிள்ளை ஆவார். ஐஞ்சிறு காப்பியங்களான நாககுமார காவியம், உதயணகுமார காவியம், யசோதரக் காவியம், நீலகேசி, சூளாமணி என்னும் அனைத்தும் சமணக் காப்பியங்கள் ஆகும்.

1. நாககுமார காவியம்

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கத்தியார் (சமணப் பெண் துறவியின் பொதுப் பெயர்) ஒருவர் எழுதியது என்றும் கூறுவர். ஐந்து சருக்கங்களையும் 170 பாடல்களையும் கொண்டது. இதற்கு 'நாகபஞ்சமி கதை' என்று வேறு பெயரும் உண்டு. சிரேணிக மன்னனுக்கும் அவனது தேவி சாலினிக்கும் கௌதம முனிவர் என்பவர் நாககுமாரனது

கதையைக் கூறுவதாகக் கதை அமைந்துள்ளது. மணத்தையும் போகத்தையும் மிகுதியாகக் கூறும் நூல்.

“அறன் இன்றிப் பின்னை ஒன்று உயிருக்கு
அரண் இல்லை என்றும்
மறம் இன்றி உயிருக்கு இடர் செய்யும்
மற்றொன்று மில்லை என்றும்
திறமிகு உணர்ந்து தேறித்
தீக்கதிப் பிறவிக்கு அஞ்சி
மறம் இதை விட்டு அறத்தில்
வாழுமின் உலகத் தீரே”

போன்ற சுவையான பாடல்கள் நிறைந்துள்ளன.

2. உதயணகுமார காவியம்

ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. இவர் ஒரு கத்தியார் என்பர். இதன் மூலநூல் பெருங்கதை ஆகும். 369 பாடல்களைக் கொண்ட நூல். மகத, வத்தவ, நரவாண, துறவு எனக் காண்டங்கள் பெயர் பெறுகின்றன. பெருங்கதையின் முற்பகுதியும் பிற்பகுதியும் கிடைக்கவில்லை. அதன் முழுக்கதையையும் அறிய இந்நூல் துணைபுரிகிறது.

வத்தவ நாட்டு மன்னன் உதயணன் கதையைக் கூறுகிறது. இவன் வாசவதத்தை, பதுமாவதி, மானநீகை, விரிசிகை என்ற நான்கு பெண்களை மணக்கிறான். இவனது அமைச்சரும் நண்பனுமான யூகியின் ஆற்றல் பல இடங்களில் புலப்படுகிறது. இக்காப்பியம் உதயணன் வரலாற்றையும் பிற்பகுதி அவன் மகன் நரவாணன் வரலாற்றையும் கூறுகிறது.

“வீணை நற்கிழத்தி நீ வித்தக உருவி நீ
நாணின் பாவை தானும் நீ நலந்திகழ் மணியும் நீ
காண என்றன் முன்பாய் காரிகையே வந்து நீ
தோணி முகம் காட்டு எனச் சொல்லியே புலம்புவான்”.

போன்ற சிறந்த செய்யுள்கள் இதில் உள்ளன.

3. யசோதர காவியம்

ஆசிரியர் வெண்ணாவலூர் உடையார் வேள். ஐந்து சருக்கங்களையும் 320 பாடல்களையும் கொண்டது. வடமொழி உத்திரபுராணத்திலிருந்து இதன் கதை எடுக்கப்பட்டது என்றும் வடமொழியில் புட்பதத்தர் எழுதிய யசோதர சரித்திரத்தின் தழுவல் என்றும் கூறுவர். இதில் வரும் யசோதரன் அசோகனின் மகன் ஆவான். நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்ற சமணத்தின் மும்மணிகள் குறித்தும் ஏழு வகையான நரகங்கள் குறித்தும் (இருளில் இருள், இருள், புகை, சேறு, மணல், பரல், மருள்) இந்நூல் கூறுகின்றது.

ஔதேயநாட்டு மன்னன் மாரிதத்தன் மாரிதேவிக்கு உயிர்ப்பலி கொடுக்க அபயருசியையும் அவன் தங்கை அபயமதியையும் கொணர்கிறான். அப்போது அபயருசி சிரித்துக்கொண்டே மன்னனுக்கு உயிர்கொலையின் விளைவை எடுத்துரைக்கிறாள்.

“யான் உயிர் வாழ்தல் எண்ணி

எளியவர் தம்மைக் கொல்லின்
வான்உயர் இன்பமே அல்லால்
வருநெறி திரியும்''

போன்ற சுவையான சமணத் தத்துவப் பாடல்களை இந்நூல் கொண்டுள்ளது.

4. நீலகேசி

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நீலகேசி என்பதற்குக் கருத்த கூந்தலை உடையவள் என்பது பொருள். இதில் பதிகம், உரை, சருக்கம், நீங்கலாகப் பத்துச் சருக்கங்களும் 894 பாடல்களும் உள்ளன. இதற்கு 'நீலகேசி தெருட்டு' என்ற வேறு பெயரும் உண்டு. தமிழின் முதல் தருக்க நூல். சமணம் அல்லாத பிற இந்திய மதங்களின் கோட்பாடுகளைத் தருக்க முறையில் மறுத்து உரைக்கும் நூல். குண்டலகேசி என்ற நூலுக்கு எதிராக இயற்றப்பட்ட எதிர் நூலே நீலகேசி ஆகும். இதற்குச் சமயத் திவாகர வாமன முனிவர் என்பவர் மிகச்சிறந்த உரை எழுதியுள்ளார். இவ்வுரைக்கு 'திவாகர விருத்தி' என்று பெயர்.

சமண முனிவரான முனிச்சந்திரனை நீலி என்ற பெண் அச்சுறுத்தி மயக்க முயல்கிறாள். மயங்காத முனிவர் அவளுக்கு அறிவுரை கூற, அவள் திருந்திச் சமணச் சமயத்தை ஏற்றுக்கொண்டு பிற சமயவாதிகளை வெல்கிறாள் என்பதுதான் கதை.

''நீரும் ஓடும் நிழல் நீரும்
பொன்னும் நிகரா நோக்குவான்''.

போன்ற தத்துவக் கருத்துகள் மிகுதியாகக் காணப்படும் நூல்.

5. சூளாமணி

ஆசிரியர் தோலா மொழித் தேவர். இவரின் இயற்பெயர் வர்த்தமானத் தேவர். இந்நூல் 12 சருக்கங்களையும் 2,330 பாடல்களையும் கொண்டது. பெருங்காப்பியத்திற்கான அனைத்து இலக்கணங்களையும் பெற்றிருந்தும் சிறு காப்பியத்தில் இடம் பெற்றுள்ள நூல். வடமொழியில் உள்ள 'ஆருகத புராணம்' என்ற நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்.

உலகில் சூளாமணியாக விளங்குபவன் சுரமை நாட்டு மன்னன் பயாபதி. இவனுக்குத் திவிட்ட நம்பி, விசய நம்பி என்ற இரு மகன்களும் ஜோதி மாலை என்ற பெண்ணும் பிறக்கின்றனர். இந்நூல் பெரும்பாலும் திவிட்டனைப் பற்றியே கூறுகிறது. இவன் விண்ணுலக மங்கையான சுயம்பிரபையை மணக்கிறான். தன்னைக் கொல்ல வந்த மாயசிங்கத்தை வெல்கிறான்.

''ஆனை துரப்பத் திறக்க அரவு உறை ஆழ்குழி
நானவர் பற்றுபு நாலும் ஒருவன் ஓர்
தேனின் அழிதுளி நக்கும் திறத்தது
மானுடர் இன்பம் மதித்தனை கொள்நீ''

போன்ற சிந்தனைக்குரிய பாடல்கள் நிறைந்த நூல்.

இ. சமயக் காப்பியங்கள்

ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் தவிரப் பிற காப்பியங்களும் தமிழில் உள்ளன. அவை பெரும்பாலும் சமயம் சார்ந்த காப்பியங்களாக இருப்பதால் அவற்றைச் சமயக் காப்பியங்கள் எனத் தனியே குறிப்பிடுகின்றனர். அவை கம்பராமாயணம், பெரியபுராணம், சீறாப்புராணம், இயேசு காவியம் போன்றன ஆகும்.

1. கம்பராமாயணம்

வால்மீகி இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் தமிழில் இயற்றியதால், அவர் பெயருடன் சேர்த்துக் கம்பராமாயணம் எனப்படுகிறது. கம்பர் தன் நூலுக்கு இட்ட பெயர் இராம அவதாரம் என்பதாகும். கம்பர் வாழ்ந்த காலம் ஒன்பதாம் நூற்றாண்டு, பத்தாம் நூற்றாண்டு, பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று கருத்து வேறுபாடுகள் உள்ளன. இவர் சோழநாட்டில் உள்ள திருவழுந்தூர் (தேர் அழுந்தூர்) என்ற ஊரில் பிறந்து, பாண்டிய நாட்டில் உள்ள நாட்டரசன் கோட்டையில் இயற்கை எய்தினார். அங்கு அவருக்குச் சமாதி எழுப்பப்பட்டுள்ளது. சடையப்ப வள்ளல் என்பவர் கம்பரை ஆதரித்தார். தன் செய்ந்நன்றியைக் காட்ட ஆயிரம் பாடலுக்கு ஒருமுறை கம்பர் சடையப்ப வள்ளலைப் பாராட்டியுள்ளார். கம்பர் தன் இராமாயணத்தை அரங்கேற்றிய இடம் திருவரங்கம். இராமகாதையைத் தவிர ஏர் ஏழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி ஆகிய நூல்களையும் கம்பர் எழுதியுள்ளார்.

நூல் அறிமுகம்

இது ஆறு காண்டங்களையும் 116 படலங்களையும் 10,569 பாடல்களையும் கொண்ட நூல். பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரக் காண்டம், யுத்தக் காண்டம் என்பவை ஆறு காண்டங்களாகும். ஏழாம் காண்டமாகிய "உத்திரக் காண்டம்" என்னும் பகுதியை "ஒட்டக்கூத்தர்" இயற்றினார் என்பர். விருத்தப்பாக்களால் ஆன இந்நூல், காட்சிகளைக் கண்முன் காட்டும் ஒரு நாடகம் போன்று அமைந்துள்ளதால் இதனை 'கம்ப நாடகம்' என்றும் சிலர் அழைப்பர். கம்பர் வரைந்த அழகான ஓவியம் என்ற பொருளில் சிலர் இதனை 'கம்பச் சித்திரம்' என்றும் அழைப்பர். வடமொழி கலவாத தனித்தமிழ்ச் சொற்களைத் தனது நூலில் கையாண்டதால் கம்பர் தொல்காப்பிய நெறி நின்றவர் என்று புகழப்படுகிறார். கம்பராமாயணம் பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது. அணி, பொருள், நடை ஆகியவற்றால் சிறந்து விளங்குவது. சொற்சுவையும் பொருட்சுவையும் கொண்டு தமிழ்ப் பண்பாட்டோடு இயைந்து விளங்குவது.

> *"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"*
> *"இன்று போய் நாளை வா"*
> *"வஞ்சி என நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"*
> *"பேசுவது மானம் இடை பேணுவது காமம்*
> *கூசுவது மானிடரை நன்று நமது கொற்றம்"*

போன்ற புகழ்பெற்ற பல தொடர்கள் இடம்பெற்ற நூல்.

இந்நூலின் சிறப்பு கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் “தமிழுக்குக் கதி” (கம்பராமாயணம் திருக்குறள்) என்பார் திருமணம் செல்வகேசவராயர்.

“யாமறிந்த புலவரிலே
கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதானில் யாங்கணுமே பிறந்ததில்லை”

எனப் போற்றுகிறார் பாரதியார்.

2. பெரியபுராணம்

பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர்புராணம் என்பது சேக்கிழார் அவர்களால் இயற்றப்பெற்ற சைவக் காப்பியமாகும். இயற்பெயர் அருள்மொழித் தேவர். இவர் தொண்டை மண்டலத்தில் உள்ள குன்றத்தூரில் வேளாண் மரபில் பிறந்தவர். இவரின் புத்திக் கூர்மையை அறிந்த சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கன் இவரை அமைச்சராக்கிக் கொண்டான். அமைச்சராக இருந்தபோது இவருக்கு உத்தமச் சோழப் பல்லவன் என்பது பட்டப்பெயராகும். மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க இவர் பெரிய புராணத்தை இயற்றினார். இறைவன் 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுக்க, அதனை நூலின் முதல் - இடை - கடையாகக் கொண்டு நூல் செய்தார்.

நூல் அறிமுகம்

காப்பியமா? இல்லையா? என்ற வாதத்தை ஏற்படுத்திய நூல். தமிழின் முதல் கள ஆய்வு நூல். முதல் நூலான சுந்தரர் இயற்றிய திருத்தொண்டர் தொகையையும் அதன் வழிநூலான நம்பிப்யாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் ஆய்ந்து தெளிந்த சேக்கிழார் இதனைச் சார்பு நூலாக இயற்றியுள்ளார். இது சைவச் சமய நூல். இந்நூல் இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் 4,286 பாடல்களையும் கொண்டது. காண்டங்களின் பெயரை அறிய முடியவில்லை. 63 நாயன்மார்களின் வரலாற்றையும் ஒன்பது தொகையடியார்கள் குறித்தும் இந்நூல் பாடியுள்ளது. அடியவர்களையும் ஈசனையும் மரியாதைப் பன்மையில் கூறும் முதல் நூல்.

‘பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ’ என்று சேக்கிழாரை மீனாட்சி சுந்தரம் பிள்ளை தான் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் புகழ்ந்துள்ளார். உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணம் பாடியுள்ளார்.

“கூடும் அன்பினில் கும்பிடலை அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்”

“பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும் மறவாமை வேண்டும்”

போன்ற புகழ்மிக்க பல தொடர்கள் இடம்பெற்ற நூல்.

3. சீறாப்புராணம்

சீறாப் புராணத்தை உமறுப் புலவர் (கி.பி.1642 - 1703) என்பவர் இயற்றினார். இவர் பிறந்த ஊர் கீழக்கரை என்றும், நாகலாபுரம் என்றும் இரு வேறு கருத்துகள் உண்டு. உமறுப் புலவரின் ஆசான் கடிகை முத்துப் புலவர் ஆவார். உமறுப் புலவர் மார்க்க மேதை செய்கு

சதக்கத்துல்லா அப்பாவிடம் காப்பியம் இயற்றக் கருப்பொருள் பெற்றார். வடநாட்டு புலவர் வாலை வாருதியை எட்டையபுரம் அவைக்களத்தில் தன் புலமையால் வென்றார். செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின்படி, உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதினார். நூல் முடிவுறும் முன்னரே சீதக்காதி மறைந்தார். பின் அபுல் காசிம் என்ற வள்ளலின் உதவியால் சீறாப்புராணம் நிறைவு பெற்றது. உமறுப்புலவர் முதுமொழிமாலை என்ற நூலையும் படைத்துள்ளார்.

நூல் அறிமுகம்

இது இசுலாமியச் சமயக் காப்பியம். முகமது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல். 'சீறத்' என்ற அரபுச் சொல்லுக்கு வாழ்க்கை வரலாறு என்று பொருள். இந்நூல் இறைதூதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு தமிழ்மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட ஒரு காவியமாகும். மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும் 5,027 பாடல்களையும் கொண்டது. முதல் காண்டம் விலாதத்துக் காண்டம். விலாதத் என்ற அரபுச் சொல்லுக்குப் பிறப்பு என்பது பொருள். இரண்டாவது காண்டமாகிய நுபுவத்துக் காண்டம் தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறது. ஜிபுறில் மூலம் இஸ்லாம் மார்க்கத்தை அறிந்ததையும் பரப்பியதையும் கூறுவது மூன்றாவது ஹிஜ்ரத்துக் காண்டம். ஹிஜ்ரத் என்பதற்கு இடம்பெயர்தல் என்பது பொருள். நபிகள் நாயகம் அவர்கள் மக்காவை விட்டு மதீனா சென்றதைக் கூறுவது.

"பூதலத்து உறைந்த பல்லுயிரின் கருவினும்
கருவாய் பெரும் தவம் புரிந்த
கருத்தனை பொருந்துதல் கருத்தே"

போன்ற பல தொடர்கள் இடம்பெற்ற இந்நூல், 'சிந்தை அள்ளும் சீறா' எனப் போற்றப்படுகிறது.

4. இயேசு காவியம்

ஆசிரியர் கவியரசு கண்ணதாசன். இவரது இயற்பெயர் முத்தையா. இவர் தமிழ்நாட்டில் உள்ள காரைக்குடி அருகே சிறுகூடல்பட்டி என்ற ஊரில் சாத்தப்ப செட்டியார், விசாலாட்சி ஆச்சி இணையாருக்கு எட்டாவது மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியைச் சிறுகூடல்பட்டியிலும், அமராவதிபுதூர் உயர்நிலை பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படித்தார். 1943ஆம் ஆண்டில் திருவொற்றியூர் ஏஜாக்ஸ் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார். ஒரு பத்திரிகை ஆசிரியர் பணிக்குச் சென்றபோது அவர் வைத்துக் கொண்ட புனைபெயர் கண்ணதாசன். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், கட்டுரைகள் பல எழுதியவர். சண்டமாருதம், திருமகள், திரை ஒலி, தென்றல், முல்லை, கண்ணதாசன் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். தமிழக அரசின் "அரசவைக் கவிஞராக" இருந்தவர். இவர் சாகித்ய அகாதமி விருது (1980) பெற்றவர்.

நூல் அறிமுகம்

இயேசு காவியம் ஒரு கிறித்தவக் காப்பியம். திருச்சியில் அமைந்துள்ள கலைக்காவிரி என்ற அமைப்பே கண்ணதாசனைக் கொண்டு இயேசு காவியத்தைப் படைத்தளித்தது. குற்றாலத்திலும், திருச்சியிலும் பல நாட்கள் அவர் தங்கியிருந்து, கிறிஸ்தவ இறையியலறிஞர்கள்

பலர் உடனிருந்து துணை செய்ய, இக்காவியத்தை இயற்றினார். இயேசு கிறிஸ்துவின் வரலாற்றை 400 பக்கங்களில் விரிவாகக் கூறும் இந்நூல் ஐந்து பாகங்களையும் 149 தலைப்புகளையும் கொண்டது. ஆசிரியப்பாக்களாலும் விருத்தப்பாக்களாலும் ஆன நூலாகத் திகழ்கிறது.

சூசையப்பருக்கும் மரியாளுக்கும் இயேசு பிறப்பதிலிருந்து இக்காப்பியம் தொடங்குகிறது. ஏரோது மன்னன் குழந்தையைக் கொல்ல ஆணையிட்டதைத் தொடர்ந்து இக்குடும்பம் எகிப்துக்குச் செல்கிறது. பெத்லஹேமில் இரண்டரை வயதுக் குழந்தைகள் அனைத்தையும் கொல்கிறான் ஏரோது. இருப்பினும் மன்னன் மாண்டுபோகிறான். அதன்பிறகு இயேசுவின் குடும்பம் கலிலேயா நாட்டின் நாசரேத் நகரில் குடிபுகுகிறது.

இயேசு 12 ஆவது வயதில் தந்தையின் தச்சுத் தொழிலில் உதவுகிறார். நாசரேத்தை விட்டு ஜெருசலேம் சொல்லும் வழியில் இயேசுவைத் தவறவிட்டு, பெற்றோர் தவிக்கின்றனர். இயேசு அங்குள்ள தேவாலயத்தில் வேதம் படித்து வித்தகராகிறார். மக்களுக்கு ஏராளமான போதனைகளை வழங்குகிறார். இயேசுவைப் பரிசுத்த ஆவியானது பாலைவனத்துக்கு அழைத்துச் செல்கிறது. அங்கு 40 நாள் உண்ணாமலும் உறங்காமலும் விரதம் இருக்கிறார். பின்னர் மக்களின் துன்பங்கள் போக்க, பல அற்புதங்களை நிகழ்த்துகிறார். அவர் பின்னால் திரண்ட சீடர்களில் பன்னிருவரை மட்டும் தேர்ந்தெடுத்து மெய்வண்ணம் போதித்தார். கலிலேயாவை ஆண்ட இரண்டாவது அரசனும் கொடுங்கோலாட்சி நடத்த, அவனை நல்வழிப்படுத்த முனைகிறார் இயேசுவின் நண்பர் அருளப்பர். அவரும் கொல்லப்படுகிறார். யூதாஸ் என்ற சீடன் அற்பக் காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறான். பின்னர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தது, மூன்றாம் நாள் அவர் உயிர்த்தெழுந்தது போன்ற செய்திகள் தொகுத்துக் கூறப்படுகின்றன.

“எளிய மனத்தோர் பேறு பெற்றார் என
எடுத்ததும் அவர் சொன்னார்”

“நாதன் முன்னம் மண்டியிட்டான் அவன்
நலமே வாழ்க குருவே என்றனன்

தூது சொல்ல முத்தமிட்டான் அவன்
தூய மைந்தன் அவனிடம் செல்கிறார்!
மோதுகின்ற அன்புடை நண்பனே
முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்கவோ
காதலோடு என் முனம் வந்துள்ளாய்
கடவுள் தம்மை உனக்கென வேண்டுவேன்”

என்பது போன்ற விறுவிறுப்பு குறையாத பல தொடர்கள் இடம்பெற்ற நூல்.

5. பக்தி இலக்கியமும் பகுத்தறிவு இலக்கியமும்

பக்தி இலக்கியமும் (பன்னிரு திருமுறை, நாலாயிர திவ்ய பிரபந்தம்) பகுத்தறிவு இலக்கியமும் (சித்தர் இலக்கியங்கள், புலவர் குழந்தையின் இராவண காவியம்).

அ. பக்தி இலக்கியம்

தோற்றப் பின்னணி

சங்கக் காலத்திற்குப் பின் புறச் சமயங்களான சமணமும் பௌத்தமும் மக்கள் செல்வாக்கையும் ஆட்சி அதிகாரத்தையும் ஒருங்கே பெற்றன. களப்பிரர்களும் பல்லவ மன்னர்கள் சிலரும் பாண்டிய மன்னருள் சிலரும் சமணத்தை ஆதரித்தனர். இதனால் ஏறக்குறைய 400 ஆண்டு காலங்கள் சைவமும் வைணவமும் செல்வாக்கு இழந்து இருந்தன. பல்லவர்கள் காலம் பெரும்பாலும் இச்சமயங்களின் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றிப் பக்தியை மக்கள் இயக்கமாகப் பரப்பினர். அதற்காக இறைவனைப் புகழும் தோத்திரப் பாடல்களை இயற்றினர். பல்லவ மன்னர்கள் சிலர் சிவனுக்கும் திருமாலுக்கும் கற்றளிகளை (கற்கோயில்) எழுப்பினர். கோவிலில் மக்களை இருக்கச் செய்ய, இசையோடு கூடிய பாடல்களும் அதற்கான இசைக்கருவிகளும் நன்கு வளர்ச்சி அடைந்தன. இசைப் பாடல்களைக் கண்முன் நடித்துக்காட்ட நடன மங்கையர் நடனம் ஆடினர். இதனால் கோயில்களில் முத்தமிழும் வளர்ந்தன. இப்பக்தி இயக்கத்தின் அடிப்படையில்தான் பக்தி இலக்கியங்கள் தோன்றின.

சமணத்திலும் பௌத்தத்திலும் கடவுள் என்ற ஒரு கோட்பாடு இல்லை ஆதலால் அவற்றில் பக்திக்கு இடம் இல்லாமல் போனது. ஆகவே பக்தி இலக்கியமும் அச்சமயங்களில் தோன்றவில்லை. எனவே பக்தி இலக்கியம் என்றாலே அது சைவ, வைணவ இலக்கியங்களை மட்டுமே குறிக்கின்றது. பன்னிரு திருமுறைகள் சைவப் பெரியோர்கள் பாடிய பாடல்கள் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இதில் 12 பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளைத் திருமுறைகள் என்று அழைப்பர். இவை நாயன்மார் பாடல் எனவும் பெயர் பெறுகிறது. சிவபெருமானை முழுமுதல் நாயகனாக ஏற்றுக் கொண்டவர்கள் நாயன்மார்கள் ஆவர்.

i). பன்னிரு திருமுறைகள்

பன்னிரு திருமுறையில் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் 1,2,3 ஆம் திருமுறைகளாகும். இவற்றைச் சம்பந்தர் தேவாரம் என்பர். திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் 4,5,6 ஆம் திருமுறைகள் ஆகும். இவற்றை நாவுக்கரசர் தேவாரம் என்பர். சுந்தரர் பாடிய பாடல்கள் ஏழாம் திருமுறை ஆகும். இதனைச் சுந்தரர் தேவாரம் என்பர். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன. திருமாளிகைத் தேவர் முதலான ஒன்பது பேர் பாடிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறையாக அமைந்துள்ளது. திருமூலர் இயற்றிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாக அமைந்துள்ளது. திரு ஆலவாய் உடையார் முதலிய 12 பேர் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையாக அமைந்துள்ளது. சைவப் பிரபந்த மாலை, சைவப் பிரபந்தத் திரட்டு என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்துள்ளது.

திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பியாவார். இவர் தொகுத்தவை முதல் 11 திருமுறைகள் மட்டுமே என்பர். இவருக்குப் பின் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது பெரியபுராணம் ஆகும். திருமுறைகளைத் தொகுப்பித்தவர் முதலாம் ராஜராஜ சோழன் ஆவார். இதில் கருத்து வேறுபாடு உண்டு. ராஜராஜ சோழனுக்குத் திருமுறை கண்ட சோழன் என்ற பெயர் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்று அழைக்கப்படுகிறது. அதற்கு மூவர் தமிழ் என்ற பெயரும் உண்டு. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் மூவர் முதலிகள் எனப்படுகின்றனர். முதல் இருவரும் பாடியவை அனைத்தும் இசைப் பாடல்கள் ஆகும். திருமுறைகளில் இசைப் பாடல்கள் மிகுதியாக உள்ளன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரையும் சமயக்குரவர்கள் என்பர். குரவர்கள் என்பதற்குப் பெரியோர்கள் என்று பொருள். திருமுறைகளை மொத்தம் 27 பேர் பாடியுள்ளனர். திருமுறைகளைச் சைவர்கள் தமிழ் வேதமாகப் போற்றுகின்றனர். பக்தி நூல்களுக்கு உரை காணாது பாடல்களை மட்டுமே போற்றிப் பாடுபவர்கள் சைவர்கள்.

"*காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி*"

"*என் கடன் பணி செய்து கிடப்பதே*"

"*தமிழோடு இசைப் பாடல் மறந்தறியேன்*"

"*ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே*
அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்காதாரே"

"*பித்தா பிறை சூடிப் பெருமானே அருளாளா*"

"*நமச்சிவாய வாழ்க; நாதன் தாள் வாழ்க*"

"*வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி*"

"*ஒன்றே குலம் ஒருவனே தேவன்*"

"*யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*"

போன்ற புகழ்பெற்ற அடிகள் பலவும் இடம்பெற்ற நூல் பன்னிரு திருமுறைகள் ஆகும்.

ii) நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்யப் பிரபந்தம் ஆகும். திருமாலின் திருவடிகளில் ஆழ்ந்தவர்கள் அல்லது திருமாலின் கல்யாணக் குணங்களில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள் எனப்படுகின்றனர். ஆழ்வார்கள் மொத்தம் 12 பேர். ஆண்டாள் மட்டுமே பெண்பால் ஆழ்வார். ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்து அதற்கு நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்று பெயரிட்டவர் நாதமுனிகள் ஆவார். நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு ஆன்ற தமிழ்மறை, திராவிடச் சாகரம் என்று வேறு பெயர்களும் உண்டு. 12

ஆழ்வார்களும் பாடிய 3076 பாடல்களும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, முதல் ஆயிரம், மூத்த திருமொழி, திருவாய்மொழி, இயற்பா.

இனி ஆழ்வார்களும் அவர்கள் பாடிய பாடல் எண்ணிக்கையும் வருமாறு:

பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி - 100

பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 100

பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி - 100

திருமழிசை ஆழ்வார் (216)

நான்காம் திருவந்தாதி என்ற நான்முகன் அந்தாதி - 96

திருச்சந்த விருத்தம் - 120

நம்மாழ்வார் (1,296)

திருவிருத்தம் - 100

திருவாசிரியம் - 7

பெரிய திருவந்தாதி - 87

திருவாய்மொழி - 1,102

மதுரகவியாழ்வார் (11)

கண்ணினும் சிறு தாம்பு - 11

பெரியாழ்வார் (473)

திருப்பல்லாண்டு - 12

திருமொழி - 461

ஆண்டாள் (173)

திருப்பாவை - 30

திருமொழி - 143

திருமங்கை ஆழ்வார் (1,137)

சிறிய திருமடல் - 1

பெரிய திருமடல் - 1

திருநெடுந் தாண்டகம் - 30

திருக்குருந்தாண்டகம் - 20

பெரிய திருமொழி - 1084

திருஎழுக்கூற்றிருக்கை - 1

தொண்டரடிப் பொடி ஆழ்வார் (55)

திருமாலை - 45

திருப்பள்ளி எழுச்சி - 10

திருப்பாண் ஆழ்வார் (10)

அமலனாதிபிரான் - 10

குலசேகர ஆழ்வார் (105)

பெருமாள் திருவந்தாதி - 105

பின்வந்த வைணவப் பெரியோர் பெரிய திருமடலில் உள்ள 78 கண்ணிகளையும் சிறிய திருமடலில் உள்ள 40 கண்ணிகளையும் தனித்தனிப் பாடலாகக் கொண்டனர். இதனால், ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் மொத்த எண்ணிக்கை 3892 (3774 + 78 + 40)

என்றானது. இதனுடன் இராமானுசர் நூற்றந்தாதியில் உள்ள 108 பாடல்களையும் சேர்த்து 4,000 பாடலாகக் கொண்டனர்.

நம்மாழ்வார் பாடியது - திருவாய்மொழி
பெரியாழ்வாரும் ஆண்டாளும் பாடியது - திருமொழி
திருமங்கையாழ்வார் பாடியது - பெரிய திருமொழி
குலசேகர ஆழ்வார் பாடியது - பெருமாள் திருமொழி.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் முதல் ஆழ்வார்கள் எனப்படுவர். ஆழ்வார்கள் அனைவரும் 6 முதல் 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

வைணவ உரைகள்

திருவாய்மொழிக்கு முதன்முதலாக உரை எழுதியவர் ஆளவந்தான் பிள்ளை ஆவார். திருவாய்மொழிக்கு 6,000 படி உரை கண்டவர் திருக்குருகைப் பெருமாள் பிள்ளை. 9,000 படி உரை கண்டவர் நஞ்சீயர் 9,000 படி உரைகண்டவர் நம்பிள்ளை. 12,000 படி உரை கண்டவர் வாதிகேசரி அழகிய மணவாளர். 36,000 படி உரை கண்டவர் வடக்கு வீதிப் பிள்ளை. ஒற்று நீக்கி 32 எழுத்துகளைக் கொண்டது ஒரு படி எனப்படும். படிக்குக் கிரந்தம் என்ற வேறு பெயரும் உண்டு. வடக்கு வீதிப்பிள்ளையின் உரைக்கு ஈடு என்ற பெயரும் உண்டு. ஈடு என்றால் தகுதியானது, இணையானது என்று பொருள், பக்தி நூலுக்கு உரை கண்டு போற்றியவர்கள் வைணவர்கள்.

“செவிக்கு இன்பமாவது செங்கண்மாலே”

“பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண் தோள் மணிவண்ணா”

“நாராயணனே நமக்கே பறை தருவான்”

“படியாய்க் கிடந்து உன் பவள வாய் காண்பேனே”

“ஊர் இலேன் காணி இல்லேன் உறவுமற்று ஒருவர் இல்லேன்
பாரிலே உன் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி”

“தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்”

“அற்றது பற்று எனில் உற்றது வீடு”

“அண்டர் கோன் அணி அரங்கன் என்அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே”

என்பன போன்ற பக்திச்சுவை நிறைந்த பாடல்கள் பலவற்றை இத்தொகுப்பில் காணலாம்.

ஆ. பகுத்தறிவு இலக்கியம்

தோற்றப் பின்னணி

பகுத்து ஆராய்ந்து அறியும் பகுத்தறிவின் அடிப்படையில் எழுந்த இலக்கியங்களைப் பகுத்தறிவு இலக்கியம் என்பர். மூடநம்பிக்கையும் பகுத்தறிவும் எதிர் எதிரானவை. காரணக் காரியத்தைச் சிந்திக்காமல் ஒன்றை அப்படியே ஏற்றுக் கொள்வதும் கடைப்பிடிப்பதும் மூடத்தனம் ஆகும். ஒன்றைப் பகுத்தாய்ந்து காரணக் காரியங்களைக் கண்டறிந்து அதற்கேற்பச் செயல்படுவது பகுத்தறிவு. சான்றாக உழைப்பின் பயன் உழைப்பவனுக்கே செல்கிறதா? அல்லது வெறும் உபதேசத்திற்குச் செல்கிறதா? என்று பகுத்தாய்ந்து அதற்கேற்பச் செயல்படுவது பகுத்தறிவாகும். சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும் அதன் மூலகாரணங்களையும் கண்டறிந்து அதனைச் சீர்திருத்த முயல்வது பகுத்தறிவின் வெளிப்பாடு ஆகும். அதாவது பிறப்பால் உயர்வுதாழ்வு, சாதியக் கட்டமைப்பு, பாலின வேறுபாடு, ஆண்டான் அடிமைத்தனம், மூடநம்பிக்கை, சுரண்டல் போன்றவற்றுக்கு எதிரானது பகுத்தறிவு. வெற்றிடத்திலிருந்து (சூனியம்) எதுவும் தோன்றாது. ஒன்றின் மாற்றத்தால்தான் மற்றொன்று தோன்றுகிறது. அவ்வகையில் பகுத்தறிவு இலக்கியங்களும் திடீரென்று தோன்றிவிடவில்லை. நீண்ட நெடிய மாற்றங்களுக்குப் பிறகே தோன்றியது.

வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டே தமிழரிடையே எண்ணறிவு, எழுத்தறிவு, வானியல் அறிவு, பல்துறைசார் அறிவியல் அறிவு, ஆகியன மிக்கிருந்தன. அதற்கு அடிப்படையாக அமைந்தது ஆசிவகச் சிந்தனையாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆசிவகர்கள் என்னும் அறிஞர்கள் இவ்வாறு பகுத்தறிவாளர்களாக இருந்ததோடு சமதர்மச் சமூகத்தையும் பேணிவந்தனர். அத்துடன் கல்வி - மருத்துவச் சேவைகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். சங்க இலக்கியங்களில் ஆசிவகத்தின் தாக்கம் மிகுதியாக இருந்தமையைக் காணலாம். இன்றும் நாட்டார் வழக்காறுகளில் ஆசிவக எச்சங்கள் பெரிதும் காணப்படுகின்றன.

சங்க இலக்கியத்திலேயே பகுத்தறிவுக்கான கூறுகள் ஏராளமாக உள்ளன.

> *“வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்*
> *கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*
> *மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே” (புறம். 183)*

என்பது கல்விக்கு முதன்மை கொடுத்துப் பிறப்பாலும் பிறந்த இடத்தாலும் (குறிஞ்சி முதல் நெய்தல் ஈறாக) உண்டாகும் ஏற்றத்தாழ்வைக் களைய முற்படுகிறது. ”உண்பது நாழி உடுப்பவை இரண்டே” (புறம். 189) என்ற பாடல் எல்லாருக்கும் எல்லாம் என்பதை வலியுறுத்துகிறது.

சமண மதமும் புத்த மதமும் கடவுள் கொள்கை, வேதம், யாகம், சாதிமுறைமை ஆகியவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தவையாகும். கணிதம் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கியதோடு, கல்வி மற்றும் மருத்துவச் சேவையிலும் அவை ஆர்வம் காட்டின. அவற்றுள் பௌத்தம் கூடுதலாகப் பாலின வேறுபாட்டையும் நீக்க முயன்றது. ஆணுக்கு இணையாகப் பெண் துறவையும் ஏற்றது.

இப்பகுத்தறிவு சிந்தனை சங்கம் மருவிய காலத்து அற இலக்கியங்களிலும் தொடர்ந்தது. “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று திருக்குறள் வலியுறுத்துகிறது. அந்தணன் ஒழுக்கம் குறித்துப் பேசவந்த வள்ளுவர், கற்ற வேதத்தை மறந்துவிட்டாலும் தவறில்லை எனக் கூறிவிட்டு, ஆனால் “பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்” (குறள்.134) எனக் கூறுகிறார். “அந்தணரின் நல்ல பிறப்பில்லை” என்று நான்மணிக்கடிகை கூற, “பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகுதல்” என்று கூறுகிறது திரிகடுகம் (திரி.42). “நல்ல குலம் என்றும் தீய குலம் என்றும் சொல் அளவில் அல்லால் பொருள் இல்லை” (நாலடி.195) என்கிறது நாலடியார். இவ்வாறு பகுத்தறியும் சிந்தனைகள் அறத்தின் ஊடாகப் பயணிப்பதைக் காணலாம்.

தொடர்ந்துவரும் காப்பியக் காலத்தில் வேத மறுப்பு, பெண் கல்வி, பெண்மை போற்றல், பசிப்பிணி அறுத்தல், சிறை ஒழிப்பு, சமத்துவம் போன்ற சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளைக் காப்பிய இலக்கியங்கள் கதைப் போக்கில் கூறிச் செல்கின்றன.

பக்தி இலக்கியக் காலத்திலும் மதக்கருத்துகள் ஒருபுறம் இருந்தாலும் பகுத்தறிவுச் சிந்தனைகளும் போதிய அளவு இருப்பதை வெளிப்படையாகக் காணலாம். “சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?” என்று திருநாவுக்கரசர் பக்தியின் ஊடாகப் பகுத்தறிவு சிந்தனையை விதைத்துள்ளார். சைவர்களின் முக்கியச் சாத்திர நூல்களில் ஒன்றான திருமந்திரம்,

‘‘ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன் மின்’’

‘‘படமாடக் கோயில் பகவர்க்கு ஒன்று ஈயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பருக்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே’’

என்று கூறுகிறது. எனவே, பகுத்தறிவுச் சிந்தனையானது சாத்திர நூல்களிலும் தொடர்வதைக் காண முடிகிறது. இவ்வாறு காலந்தோறும் தொடர்ந்து வந்த பகுத்தறிவுச் சிந்தனை, சித்தர் இலக்கியத்தில் கூடுதல் ஏற்றம் கண்டது.

i) சித்தர் இலக்கியம்

மேற்கூறிய அனைவரும் மெத்தப் படித்த புலவர் பெருமக்கள். இலக்கணச் செங்கோலுக்குக் கீழ்ப்படிந்து பாக்களைப் புனைந்தனர். ஆதலால் இவை கற்றறிந்தோர்க்கு உரியவையாக இருந்தன. இக்கருத்துகள் மக்களிடம் அதிகமாக ஊடாடவில்லை. அந்தக் குறைபாட்டைச் சித்தர்கள் போக்கினர். உடல், ஆன்மா ஆகியவற்றை அறிவியல்பூர்வமாக ஆழ்ந்த ஆய்வுக்கு உட்படுத்திய இவர்கள், பல்வேறு உண்மைகளைக் கண்டு கூறினர். உண்மைத் துறவிகளாக விளங்கிய இவர்கள் பித்தர்களைப் போலச் சுற்றித்திரிந்தவர்கள். மக்களை நேரில் கண்டு பாடியவர்கள். பேச்சுத் தமிழ், தேவைக்கேற்பப் பிறமொழிக் கலப்பு, எளிய சந்தம், இலக்கணத்தை மீறிய பாடல்கள் எனத் தனித்துவத்தோடும் பயன்பாட்டு நோக்கிலும் பாடியதால் அவை மக்களிடம் எளிதாகச் சென்று சேர்ந்தன. அவ்வகையில், சித்தர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகள் சிலவற்றைக் காண்போம்.

‘‘கோயில் ஆவது ஏதடா குளங்கள் ஆவது ஏதடா

கோயிலும் குளங்களும் கும்பிடும் குலமாதரே
கோயிலும் உம்உ(ள்)ளே குளங்களும் உம்உ(ள்)ளே"

"*நட்டகல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே*
சுற்றிவந்து மொணமொண என்று சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்டகல்லும் பேசுமோ?"

"*ரிக்கு நாலு வேதமும் எழுத்தை அற ஓதினும்*
பெருக்க நீறு பூசினும் பிதற்றினும் பிரான் இரான்"
என்று சடங்குகளை எதிர்க்கின்றனர்.

"*பறைச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா?*
இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ?"
என்று சாதிய ஏற்றத்தாழ்வை வன்மையாக மறுக்கிறார்கள்.

"*எங்கள் தேவர் உங்கள் தேவர் என்று இரண்டு தேவரோ?*
இங்கும் அங்குமாய் இரண்டு தேவர் இருப்பாரோ?"

"*தேடுகின்ற புராணம் எல்லாம் பொய்யே என்றேன்*
டுகின்ற தீர்த்தம் எல்லாம் அசுத்தம் என்றேன்"

என்றெல்லாம் சித்தர்கள் பகுத்தறிவு விளக்கை நன்கு ஒளிரச்செய்தனர். அவர்கள் வரிசையில் இறுதியாக வந்த இராமலிங்க வள்ளலார்,

"*நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா*
நவின்ற கலை சரிதம் எல்லாம்
பிள்ளை விளையாட்டே"

"*சாதியும் மதமும் சமயமும் பொய்யென*
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி"

"*சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே*
சாத்திரச் சந்தடியிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்து அலைந்து நீர் அழிதல் அழகுஅ(ல்)லவே"

"*கலை உரைத்த கற்பனையே*
நிலை எனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கம் எல்லாம்
மண்மூடிப் போக"

என்று பலவாறு மக்களிடம் எடுத்துரைத்துத் தம் கருத்தைப் பரப்பினார். பின்வந்த பாரதியாரிடம் தேசபக்தி, தமிழ்ப்பற்று என்ற இரண்டின் ஊடாகப் பகுத்தறிவுச் சிந்தனை மிளிர்கிறது.

"*சாதிகள் இல்லையடி பாப்பா; குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்*",
"*ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே*",

"தையலை உயர்வு செய்"

எனப் பல்வேறு தொடர்களையும் சான்று கூறலாம்.

இத்தகைய சூழலில்தான் வைகுண்டசாமி, ஸ்ரீ நாராயணகுரு, அயோத்திதாசர், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. போன்றோர் தோன்றிப் பகுத்தறிவை மக்களிடம் வெகுவாகப் பரப்பினர். அன்றைய சென்னை மாகாணத்தில் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' அதாவது நீதிக் கட்சி (Justice Party) என்னும் பெயரால் அமைந்த பேரியக்கம் பின்னர் அரசியல் இயக்கமானது. இது எளிய மக்களிடம் பகுத்தறிவுச் சிந்தனைகளை வளர்த்ததோடு கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் இடஒதுக்கிடு வழங்கி, பெரும் மற்றத்தை ஏற்படுத்தியது.

அக்கட்சியில் உயர் பொறுப்பில் இருந்த பெரியார் ஈ.வெ.ரா, 1925 இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். பகுத்தறிவுப் பகலவனாக விளங்கிய பெரியாரின் கொள்கைகளைப் பரப்ப அவருடன் அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர், க. நெடுஞ்செழியன் க. அன்பழகன் போன்றோர் துணைநின்றனர். பகுத்தறிவு, சமத்துவம், சமூக முன்னேற்றம், சாதி மறுப்பு, பெண் கல்வி, பெண்ணுக்குச் சொத்துரிமை, சீர்திருத்தத் திருமணம், கைம்பெண் மறுமணம், தேவதாசிமுறை ஒழிப்பு, இட ஒதுக்கீடு, அதிகாரப் பகிர்வு, அனைவருக்கும் இலவசக் கல்வி, தொழில்துறை மேம்பாடு, அனைவருக்குமான பொருளாதார மேம்பாடு, கடவுள் மறுப்பு போன்ற பகுத்தறிவுக் கொள்கைகளை ஏற்றனர்.

இவர்கள் தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் பயணம் மேற்கொண்டு, சொற்பொழிவுகள் ஆற்றினர். இதனால், மேடைத்தமிழ் என்னும் புதிய பரிமாணம் தமிழுக்குக் கிடத்தது. இவர்களும் எம்.ஆர்.ராதா போன்றோரும் எழுதி, இயக்கி, நடித்த மேடை நாடகங்கள் பகுத்தறிவைப் பரப்பியதோடு மூடநம்பிக்கைகளையும் கடுமையாகச் சாடின. இதனால், நாடகத்தமிழ் இலக்கியமும் பெரும் வளர்ச்சி கண்டது.

சுயமரியாதைப் பேரியக்கத்தைச் சார்ந்த பலர் திரை உலகிலும் கால்பதித்துப் பகுத்தறிவு இயக்கத் திரைப்படங்கள் என்னும் புதிய படைப்புத் தோற்றத்திற்கு வித்திட்டனர். பெரியார் தொடங்கிய 'பகுத்தறிவு', 'உண்மை', 'விடுதலை' ஆகிய இதழ்களுடன் 'நாத்திகம்', 'திராவிடம்' போன்ற இதழ்களும் பகுத்தறிவுக் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பின. பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட பாரதிதாசன், கவிமணி, சுரதா, முடியரசன், வாணிதாசன் போன்றோர் பகுத்தறிவு இலக்கியங்களை ஏராளமாகப் படைத்தனர். இவ்வாறாக இவ் இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி காரணமாகத் துறைதோறும் துறைதோறும் தமிழன்னைக்கு அணிகலண்கள் அணிவிக்கப்பட்டு அழகுடன் மிளிர்ந்தாள். அந்த வகையில்தான் புலவர் குழந்தை அவர்கள் இராவண காவியம் என்னும் ஒப்பற்ற இலக்கியத்தைப் படைத்தார்.

ii) இராவண காவியம்

இதன் ஆசிரியர் புலவர் குழந்தை. ஈரோடு நகருக்கு அருகில் உள்ள ஓலவலசு என்ற சிற்றூரில் சின்னம்மை, முத்துசாமி இணையரின் மகனாக 1906 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் நாள் பிறந்தார். பவானி அரசு மேநிலைப் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணியாற்றியவர். கவி பாடும் வேட்கையில் இசைக்கேற்பப் பாடத் தொடங்கினார்.

பின்னாளில் மரபுக் கவிதைகள் புனையும் ஆற்றல் பெற்றார். சிறந்த பேச்சாளர், கவிவாணர். அடிப்படையில் மொழியுணர்வாளர். 1938, 1948, 1965 ஆகிய ஆண்டுகளில் இந்தி ஆதிக்கத்திற்கு எதிராகக் களமாடியவர்.

'வேளாண்' என்ற இதழை 1946 முதல் 1958 வரை தொடர்ந்து நடத்தினார். 1946 ஆம் ஆண்டு இராவண காவியம் வெளியிட்டார். தொல்காப்பியம், பொருளதிகார உரை, தொல்காப்பியர் தமிழர், திருக்குறளும் பரிமேலழகரும், பூவா முல்லை, கொங்குநாடு, தமிழக வரலாறு, கொங்குநாடும் தமிழகமும், அருந்தமிழ் விருந்து, அருந்தமிழ் அமிழ்து, தீரன் சின்னமலை, யாப்பதிகாரம், தொடையதிகாரம், நெருஞ்சிப் பழம், திருநணாச் சிலேடை வெண்பா, காமஞ்சரி (கவிதை நாடகம்), குழந்தைப் பாடல்கள் என்ற கவிதைத் தொகுப்பு ஆகியன இவரது படைப்புகள். 1972 செப்டம்பர் 22 ஆம் நாள் இவர் இயற்கை எய்தினார்.

நூல் அறிமுகம்

கம்பராமாயணத்தில் முரண் பாத்திரமாக விளங்கும் இராவணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு உருவான காவியம் இராவணகாவியம். இந்நூல் உருவான காலத்தில் சுயமரியாதை இயக்கக் கொள்கை பரவி இருந்தது. இந்நூல் 5 காண்டங்களையும் 57 படலங்களையும் 3,100 பாடல்களையும் கொண்டுள்ளது. ஐந்து காண்டங்களாவன: தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம் ஆகியவை.

இது, இராமாயணத்திற்கு எதிராகப் பாடப்பட்ட நூல். இதன் கதைத் தலைவன் இராவணன். அவனது ஏற்றத்தைப் பாடும் நூல். எதிர்நிலைத் தலைவன் (முரண் பாத்திரம்) இராமன். இதில் வரும் இராவணன், தமிழ் மக்களின் தலைவன் ஆவான். இந்நூலுக்குப் பாரதிதாசன் சிறப்புப் பாயிரம் எழுதியுள்ளார். சி.என்.அண்ணாதுரை முன்னுரை எழுதியுள்ளார்.

"தான் நிகர்த்த தமிழர் குலப்பகை
யான ஆரியராமன் அடியினை
மானமின்றி வருடுதல் என்கொலோ
பூனைக் காலை புலி இனம் புல்லுமோ"

"ஆரியன் ராமன் படையோடு வந்தே
அகழியின் புறத்து விட்டுள்ளானாம்
பூரியன் தன்னைப் பொசுக்கல் ஏற்பு எனினும்
பூவை கேட்டது பிழையாமல்
சீரிலான் இடம் சென்று அவன் கொடுமையும் நம்
திறமையும் பொறுமையும் உரைத்து
நேரினில் வந்து பணிந்திடச் சொல்லும்
நெறியிலான் மறுத்திடின் மீள்வாய்"

என்பன போன்ற பாடல்கள் பல அமைந்த நூல்.

* * *

அலகு - 2 சங்க இலக்கியம்

சங்கக் காலத்துப் புலவர்களால் பாடப்பட்ட பாடல்கள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுப் பொருள் அடிப்படையில் அகம், புறம் என இரண்டாகத் தொகுக்கப்பட்டன. அகப்பாடல்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தமையால் அடியளவு அடிப்படையில் அவை மூன்றாகப் பிரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன. 4 - 8 அடிகளைக் கொண்ட பாடல்கள் குறுந்தொகை என்றும் 9 - 12 அடிகளைக் கொண்ட பாடல்கள் நற்றிணை என்றும் 13 - 31 அடிகளைப் பாடல்கள் அகநானூறு என்றும் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்டுள்ளன. ஐங்குறுநூறு, கலித்தொகை என்ற இரு நூல்களும் திணைக்கு ஒருவர் எனத் திட்டமிட்டுக்கொண்டு எழுதப்பட்ட பாடல்களின் தொகையாக உள்ளன.

அதேபோலப் பதிற்றுப் பத்தும், பத்துப் பாடல்களுக்கு ஒருவர் என எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். புறநானூறு மேற்குறிப்பிட்ட பொருளடிப்படையில் பிரிக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பாக உள்ளது. பரிபாடல் அகமும் புறமும் கலந்த பாடல்கள் அடங்கிய தொகையாக உள்ளது. 364 புலவர்கள் ஒட்டுமொத்தச் சங்க இலக்கியப் பாடல்களையும் பாடியுள்ளதாகப் பேராசிரியர் சஞ்சீவி குறிப்பிடுவார். பாடிய புலவர் பெயர் அறியப்படா பாடல்கள் மொத்தம் 102 உள்ளனன.

2.1. எட்டுத்தொகை

2.1.1. நற்றிணை

(இந்நூல் குறித்த செய்திகளை அலகு 1 சங்க இலக்கியம் பகுதியில் காண்க).

திணை: குறிஞ்சி

காதல் வாழ்வுக்கு அடிப்படையாக அமைவது ஒருவர்பால் மற்றொருவர் கொண்டுள்ள ஆழ்ந்த நட்புணர்வும் நம்பிக்கையுமாகும். உலகில் எவர் குறை கூறினும் அன்பால் இணைந்த இரு உள்ளங்களும் சற்றும் குழப்பம் கொள்ளாமல் தெளிவுடன் இருக்கும். குறிஞ்சி பாடுவதில் வல்லவரான கபிலர் இப் பாடலில் அத்தகைய அன்போடு கூடிய உணர்வின் ஆழத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். ஒரு சில நாள் பிரிதலுக்கே எனது நெற்றியில் பசலை பாய்வதைக் கண்டு பொறுக்க இயலாத அன்பு உள்ளம் கொண்டவர் எம் காதலர். அவர் எப்படி என்னை நிரந்தரமாகப் பிரியத்துணிவார்? என்ற தலைவியின் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாமல் தோழியை அமைதிகொள்ளச் செய்தது உண்மைக் காதலே அன்றி வேறென்ன?

நின்ற சொல்லர்; நீடுதோன்று இனியர்
என்றும் என் தோள் பிரிபு அறியலரே
தாமரை தண் தாது ஊதி, மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீம் தேன் போல

புரைய மன்ற, புரையோர் கேண்மை;
நீர் இன்று அமையா உலகம் போலத்
தம் இன்று அமையா நம் நயந்தருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே! - கபிலர்

துறை: இது, பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது. அதாவது, தலைவன் பிரியக்கருதியது அறிந்த தோழி அதனைத் தலைவியிடம் கூறலும், அதற்குத் தலைவி, இன்றியமையாத என்னை, வருந்தும்படி விட்டுப் பிரிகின்ற அத்தகைய குணக்குறைபாடு இல்லாதவர் எம் தலைவர் எனப் புகழ்ந்து கூறுவது.

அருஞ்சொற்பொருள்: தாது - மகரந்தம், மீமிசை - மேலே; மிகுந்த உயரத்தில், சாந்து - சந்தன மரம், புரையோர் - உயர்ந்தோர், நுதல் - நெற்றி, பசத்தல் - பசலைபாய்தல் (தலைவியின் நெற்றியிலுள்ள ஒளி தலைவனைப் பிரிதலால் மழுங்கித் தோன்றுதல்; இதனை மாமை எனவும் பொன் எனவும் உரைப்பர்), நயந்து - விருப்பம் கொண்டு செய்பு அறியலர் - செயலைச் செய்யார்.

2.1.2. குறுந்தொகை

(இந்நூல் குறித்த செய்திகளை அலகு 1 சங்க இலக்கியம் பகுதியில் காண்க).

திணை: குறிஞ்சி

தலைவனது நாட்டில் எங்கோ பூத்த குறிஞ்சிப் பூக்களின் தேனை, உயர்ந்து வளர்ந்த சந்தன மரத்தில் கொண்டு சேர்க்கும் வண்டுகளின் செயலை, எங்கெங்கோ பிறந்து ஒன்றாக இணைந்த காதலர்க்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார் தேவகுலத்தார். தலைவியின் மறுமொழி தோழிக்கானது மட்டுமா? மறைந்திருந்து கேட்கும் தலவனுக்கும் சேர்த்துத்தானே! மொத்தத்தில் இப்பாடல் இயற்கை இன்பம், கவி இன்பம், காதல் இன்பம் ஆகியவற்றை ஒருங்கே தருவதாக அமைகிறது.

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே; சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக் கொண்டு,
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. (03) – *தேவகுலத்தார்*

துறை: தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டி, தோழி இயற் பழித்தவழி, தலைமகள் இயற்பட மொழிந்தது. அதாவது, தலைவியைக் கூடி ஒழுகும் தலைவன் வேலிப் புறத்தே நின்றதை அறிந்த தோழி, அவன் வரைந்து கொள்ள (திருமணம் புரிந்துகொள்ள) வேண்டுமென்னும் கருத்தை வலியுறுத்த எண்ணுகிறாள். எனவே, அவன் செவியில் படும்படியாக, தலைவியைப் பார்த்துத் தலைவனது நட்பைப் பழித்துக் கூறுகிறாள். அப்போது, தலைவியானவள் அவளது கருத்தை மறுக்கும் நோக்கில், அந்நட்பு மிகச் சிறப்புடையது என்று அவளுக்கு உணர்த்துகிறாள்.

அருஞ்சொற்பொருள்: உயர்ந்தன்று - உயர்ந்தது, நீர் - கடல், ஆர் - அருமை; நிறைவு, அளவின்று - அளவற்றது, கருங்கோல் - கரிய நிறமுடைய கொம்பு, நாடன் - குறிஞ்சி நிலத் தலைவனைக் குறிக்கும் பொதுப் பெயர்களில் ஒன்று.

2.1.3. ஐங்குறுநூறு

(இந்நூல் குறித்த செய்திகளை அலகு 1 சங்க இலக்கியம் பகுதியில் காண்க).

வேட்கைப் பத்து

திணை: மருதம்

'தலைவன் பிரிந்த நிலையிலும் தலைவி தொடர்ந்து இல்லறக் கடமைகளை வழுவாமல் ஆற்றி வருகிறாள். தோழிகளான நாங்களோ நீ நீண்ட நாள் நலமுடன் வாழ வேண்டும் என்று வேண்டினோம் அவள் நலத்துக்காக!' எனச் சொல்வதன் வழி, தவறு செய்த தலைவனை நாணித் தலைகுனிய வைக்கிறாள் தோழி. தோழியின் சொல்திறனைப் பாராட்டுவது ஒருபுறம் இருக்கட்டும், 'இன்னா செய்தாரை ஒறுத்தல்' என்பது இதுதானோ!

வாழி ஆதன் வாழி அவினி
நெல்பல பொலிக, பொன்பெரிது சிறக்க!
என வேட்டோளே யாயே, யாமே
நனையக் காஞ்சி சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க என வேட்டேமே. (01) – *ஓரம்போகியார்*

துறை: புறத்து ஒழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைவியோடு கூடி ஒழுகும் தலைமகன், தோழியோடு சொல்லாடி, 'யான் அவ்வாறு ஒழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றானுக்கு அவள் சொல்லியது. அதாவது, பரத்தையரோடு நெடுநாள் தங்கிய தலைவன் தன் பிழை உணர்ந்து தலைவியிடம் மீண்டும் வந்து சேர்ந்தான். அப்போது தோழியை நோக்கி, 'யான் உங்களைப் பிரிந்து வாழ்ந்த நாட்களில் நீங்கள் யாது எண்ணியிருந்தீர்கள்?' என வினவினான். அதற்கு விடையாகத் தோழி இவ்வாறு பதில் சொல்கிறாள்.

அருஞ்சொற்பொருள்: ஆதன் அவினி - ஒரு சேர அரசன், வேட்டோளே - வேண்டினாள், நனை - அரும்புகள், சினை - முட்டைகள், யாணர் - புதிய வருவாய், ஊரன் - மருத நிலத் தலைவனைக் குறிக்கும் பொதுப் பெயர்களில் ஒன்று.

2.1.4. கலித்தொகை

(இந்நூல் குறித்த செய்திகளை அலகு 1 சங்க இலக்கியம் பகுதியில் காண்க).

திணை: குறிஞ்சி

குறும்புக்கார ஆண்கள் தாங்கள் விரும்பும் பெண்களின் வீட்டிற்குத் திடீரெனச் செல்வதும் தலைமகளைச் செய்வதறியாது திகைக்க வைத்து இரசிப்பதும் இயல்பான விளையாட்டு. அவ்வாறு தான் விரும்பும் பெண்ணின் வீட்டுக்குச் சென்ற தலைவன் அங்குச் செய்த குறும்பும் அதைச் சாதுர்யமாகச் சமாளித்த தலைவி, அதன்மூலம் தன்னையும் அவனையும் காத்துக் கொண்டதும் 'பார்த்தாயா! நீ என் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய்! இல்லையென்றால் என்னைக் காட்டிக் கொடுத்திருப்பாய் அல்லவா?' என்று அவன் கண்களாலேயே குறும்பாகக் கேட்பதும் தலைவி அதை நாணத்தோடு ஏற்றுக் கொள்வதும் ஆ! என்னே அழகிய காதல் காட்சி! 'கள்வன் மகன்' என்னே அழகிய சொல்லாட்சி!

சுடர்த்தொடீஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டு ஓடி,

நோ தக்க செய்யும் சிறு பட்டி, மேல் ஓர் நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே!

உண்ணு நீர் வேட்டேன்' என வந்தாற்கு, அன்னை,
'அடர் பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்!
உண்ணு நீர் ஊட்டி வா' என்றாள்; என, யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை
வளை முன்கை பற்றி நலிய, தெருமந்திட்டு,

'அன்னாய்! இவனொருவன் செய்தது காண்' என்றேனா,
அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்,
'உண்ணு நீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகைக் கூட்டம்

செய்தான், அக் கள்வன் மகன் (51) - *கபிலர்*

துறை: 'புகாஅக் காலைப் புக்கு எதிர்ப்பட்டுழி, பகாஅ விருந்தின் பகுதிக்கண் தலைவி, தோழிக்குக் கூறியது. அதாவது, தலைவன், தான் புகுதற்குத் தகுதி இல்லாத காலத்தில் தலைவியின் வீட்டிற்குச் சென்று தலைவியை எதிர்ப்பட்டபோது, அவரால் விலக்கப்பட்ட விருந்தினனாக ஆகியபோதும், கூற்று நிகழும். அத்தகையதொரு சுவையான நிகழ்ச்சியைத் தலைவி தோழிக்குக் கூறியது.

அருஞ்சொற்பொருள்: சுடர்த்தொடி - ஒளிவீசும் வளையல்கள், அடைச்சிய - சூட்டிய, பரிந்து - அறுத்து, சிறுபட்டி - காவலின்றி வளர்ந்தவன் (குறும்புக்காரச் சிறுவன்), சிரகம் - நீர் உண்ணும் கலம், நலிய - வருந்துமாறு, தெருமந்திட்டு - மருண்டு, புறம்பு - முதுகு, நீவ - தடவிக் கொடுக்க.

2.1.5. புறநானூறு

(இந்நூல் குறித்த செய்திகளை அலகு 1 சங்க இலக்கியம் பகுதியில் காண்க).

'ஆடவரது (ஆண்கள்) ஒழுக்கமே உலக மேம்பாட்டிற்கு அடிப்படை' என்ற கருத்தமைய அவ்வையார் இச் செய்யுளைப் புனைந்திருக்கிறார். இன்றும் நம்மவர் சொல்லத் தயங்கும் இத்தகைய புரட்சிகரமான கருத்தை அன்றே சொல்ல, அவ்வையைத் தவிர யாரால் முடியும்?

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. (187) - *ஔவையார்*

திணையும் துறையும்: பொதுவியல் திணை, பொருண்மொழிக் காஞ்சித் துறை.

அருஞ்சொற்பொருள்: நாடா கொன்றோ - நாடாக இருந்தாலும், அவல் - பள்ளம், மிசை - மேடு, நல்லவர் - நற்பண்பும் நற்செயலும் உடையார்.

ஆண்டான் ஆயினும் எளியவன் ஆயினும் அடிப்படைத் தேவைகள் ஒன்றே. எனவே, ஈட்டிய செல்வத்தை 'பகுத்துண்டு' வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது இப் பாடல்.

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமா பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி: உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே. (189)

- மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

திணையும் துறையும்: பொதுவியல் திணை, பொருண்மொழிக் காஞ்சித் துறை.

அருஞ்சொற்பொருள்: வளாகம் - உலகம், நடுநாள் - இடை யாமம் (நள்ளிரவு), கடுமா - கொடிய விலங்கு, கல்லா - கல்வியில்லாத, நாழி - கால அளவை, ஓர் ஒக்கும் - பொதுவானது, ஈதல் - கொடுத்தல், துய்ப்பேம் - நுகர்வோம், தப்புந - தவறுவன.

2.2. பத்துப்பாட்டு

2.2.1. முல்லைப்பாட்டு

(இந்நூல் குறித்த செய்திகளை அலகு 1 சங்க இலக்கியம் பகுதியில் காண்க).

கடமை பெரிது! - இது அவன். காதல் பெரிது! - இது அவள். ஏனெனில், 'வினையே ஆடவர்க்கு உயிர்' அந்நாளில்! சரி, வினை முடிந்தது இனி? விரட்டும் கைகளும் தாவும் குதிரைகளும் விரைதோடும் தேரும் பதில் சொல்லும்! 'இலக்கியத்தின் நோக்கம் இனிய முடிவை நோக்கி இருத்தலே' என்னும் படைப்பு நோக்கத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தும் சிறந்த நெடும்பாடல் இது.

முதுபெண்டிர் விரிச்சி கேட்டல்

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்

தலைவியைத் தேற்றுதல்

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர

இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது நீநின்

பருவரல் எவ்வம் களைமா யோய் எனக்
காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து
பூப்போல் உண்கண் புலம்பு முத்து உறைப்பக்

பாசறையின் இயல்பு

கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண் நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியின் பரந்த பாடி

யானைப் பாகரின் செயல்

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற

தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்து யாத்த
வயல்விளை இன்குளகு உண்ணாது நுதல்துடைத்து
அயில் நுனை மருப்பின் தம் கையிடைக் கொண்டெனக்
கவைமுள் கருவியின் வடமொழி பயிற்றிக்

கல்லா இளைஞர் கவளம் கைப்பக்

வீரர்களின் படைவீடுகள்

கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப நல்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
கூடம் குத்திக் கயிறுவாங்கு இருக்கைப்

பூந்தலைக் குந்தம் குத்திக் கிடுகு நிரைத்து
வாங்குவில் அரணம் அரண மாக

அரசனின் பாசறை

வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி அகநேர்பு

பெண்கள் விளக்கேந்தி நிற்றல்

குறுந்தொடி முன்கைக் கூந்தல் அம் சிறுபுறத்து
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட

மெய்க்காப்பாளர்களின் காவல்

நெடுநா ஒண்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக்கு அசைவந் தாங்கு
துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெருமூ தாளர் ஏமம் சூழப்

நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தல்

பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெரீஇய செல்வோய் நின்
குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப

அரசன் படுக்கையில் சிந்தனையில் ஆழ்தல்

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து

வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் நல் இல்
திருமணி விளக்கங் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்

படம்புகு மிலேச்சர் உழையர் ஆக
மண்டு அமர் நசையொடு கண்படை பெறாஅது

அரசனது சிந்தனை

எடுத்தெறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்

*தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்
சோறுவாய்த்து தொழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து
உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்
ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து*

பாசறையில் வெற்றி முழக்கம்

*பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன் விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசு இருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை*

தலைவன் பிரிவும் தலைவி துயரும்

*இன்துயில் வதியுநன் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்
மேவுறு மஞ்ஞையின் நடுங்கி இழைநெகிழ்ந்து
பாவை விளக்கின் பரூஉச்சுடர் அழல
இடஞ்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்கு இறைச் சொரிதரும் மாத்திரள் அருவி
இன்பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின வென்றுபிறர்*

வெற்றியுடன் அரசன் மீண்டு வருதல்

*வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெரும் தானையொடு
விசயம் வெல்கொடி உயரி வலனேர்பு
வயிறும் வளையும் ஆர்ப்ப அயிர*

மழையினால் செழித்த முல்லை நிலத்தைக் காணுதல்

*செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தோடுஆர் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப்பு இரலையொடு மடமான் உகள
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களில்*

அரசனது தேரின் வருகை

முதிர்காய் வள்ளியம் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

- காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது.

அருஞ்சொற் பொருள்: நனந்தலை - அகன்ற இடம், நேமி - சக்கரப் படை, கோடு - குவடு என்பதன் திரிபு; மலை, எழிலி - மேகம், வீ - மலர், விரிச்சி - நற்சொல், சிறு தாம்பு - சிறு கயிறு, அலமரல் - சுழற்சி, சுவல் - தோள், கோவலர் - இடையர், பருவரல் எவ்வம் - மன வருத்தம், புறவு - காடு, பிடவம் - ஒருவகை மலர், புழை - சிறு வாயில், அருப்பம் - அரண், புரிசை - மதில், புணரி - கடல், பாடி - பாசறை, கவலை - நாற்சந்தி; வழி, குளகு - அதிமதுரத் கொத்து, அயில் - கூரிய, கல் - காவிக் கல், முக்கோல் - துறவியர் கையில் கொள்ளும் கோல், தூணி - அம்பராத் தூணி (அம்புகளை வைத்து முதுகில் கட்டிக்கொள்ளும் புட்டில், குந்தம் - எறிகோல், நாப்பண் - நடுவில், நெய் உமிழ் சுரை - நெய்யற்ற விளக்கில் நெய் வார்ப்பதற்குப் பயன்படும் குழாயோடு அமைந்த குடுவை, அதிரல் - புனலிப் பூ என்னும் ஒரு வகைப் பூ, சிதர் - மழைத் தூறல், பெரு மூதாளர் - மிகவும் முதிர்ந்த வயதுடையோர், மத்திகை - குதிரைச் சவுக்கு, மெய்ப் பை - சட்டை, யவனர் - சோனகர் மற்றும் கிரேக்கர் போன்ற பிறநாட்டார், கண்படை - உறக்கம், எஃகம் - வேல், துமிய - வெட்டுப்பட்டு, உயங்கும் - வருந்தும், கடகம் - கங்கணம் (ஆண்கள் கையில் அணியும் ஒருவகை அணிகலன்), மையல் - மயக்கம், ஒய்யென - விரைவாக, அழல - எரிய, வயிர் - ஊது கொம்பு, காயா - ஒரு வகைப் பூ, தோடு - இதழ், திரிமருப்பு - முறுக்குண்ட கொம்பு, இரலை - மான், உகளுதல் - துள்ளுதல்.

* * *

அலகு - 3 அற இலக்கியம்

தமிழக வரலாற்றில் சங்ககாலத்தை அடுத்துவருவது அற இலக்கியக் காலமாகும். சுமார் 400 ஆண்டுகாலம் நிலைபெற்றிருந்த இக் காலம் குறித்த செய்திகள் தெளிவாக இல்லாததால், வரலாற்று ஆய்வாளர்களால் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக் காலகட்டத்தில் தோன்றிய நூல்களுள் பெரும்பாலானவை, தனிமனித - சமூக அறம் பற்றி கூறுபவை.

அறத்திற்கான வரையறை, அதனைப் பின்பற்றுவதன் தேவைகள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றைக் காரண - காரியங்களோடு விளக்கிச் சமூக நல்லிணக்கம், பொதுமை மனப்பன்மை முதலியவற்றை உருவாக்கும் உயரிய பணியினை அற இலக்கியங்கள் மேற்கொண்டுள்ளன. பிற்காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் காணலாகும் அறக்கருத்துகளுக்கும் இவையே மூல வித்துகள் எனலாம். ஆகவே இவை தமிழ் இலக்கியங்கள் மற்றும் தமிழரின் பெரும் சொத்தாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுப்பில் அற இலக்கியங்கள் பொதிந்துள்ளன.

3.1. திருக்குறள்

(இந்நூல் குறித்த விரிவான செய்திகளை அலகு 1 அற இலக்கியங்கள் பகுதியில் காண்க).

அறன் வலியுறுத்தல்

‘அறம்’ என்றால் என்ன என்பது குறித்த கருத்து மாறுபாடுகள் ஏராளம் உள்ளன. இச் சூழலில், அதற்கான கோட்பாட்டினைப் பல்வேறு கோணங்களில் நின்று நோக்கிக் கூறுகிறார் திருவள்ளுவர்.

சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 1

அறத்தினூஉங்கு ஆக்கம் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 2

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 3

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. 4

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். 5

அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 6

அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. 7

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். 8

அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. 9

செயற்பாலது ஓரும் அறனே; ஒருவருக்கு
உயிர்பாலது ஓரும் பழி. 10

- திருவள்ளுவர்

அருஞ்சொற்பொருள்: ஒல்லும் - இயலக்கூடிய, ஓவாதே - தொய்வின்றி, ஆகுல - மற்ற செயல்கள், நீர - வெறும் சடங்கு, அழுக்காறு - பொறாமை, வெகுளி - சினம் (கோபம்), இழுக்கா - இல்லாமல், பொன்றுங்கால் - முடிவுக் காலத்தில், சிவிகை - பல்லக்கு, பொறுத்தான் - (பல்லக்கைச்) சுமப்பவன், ஊர்ந்தான் - (பல்லக்கில்) பயணிப்பவன், வீழ்நாள் - (அறம் செய்யத் தவறிய) நாள்.

3.2. நாலடியார்

(இந்நூல் குறித்த விரிவான செய்திகளை அலகு 1 அற இலக்கியங்கள் பகுதியில் காண்க).

கல்வி

அழகு என்றால் என்ன? அதனைப் பெறும் வழிதான் என்ன? சுங்கச் சொல்லி விளங்க வைக்கிறது இப்பாடல்.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டு அழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு. (131)

- சமணப் புலவர்கள்

அருஞ்சொற்பொருள்: குஞ்சி - கூந்தல், கொடுந்தானை - முந்தானை, கோடு - அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய முந்தானையின் நுனிப்பகுதி.

3.3. நான்மணிக் கடிகை

(இந்நூல் குறித்த விரிவான செய்திகளை அலகு 1 அற இலக்கியங்கள் பகுதியில் காண்க).

எதற்கு எது அணிகலன்? எனக்கு எது அணிகலன்? இக்கேள்விக்ளுக்கான விடை, இப்பாடலில் உள்ளது.

நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்
குளத்துக்கு அணி என்ப தாமரை; பெண்மை
நலத்துக்கு அணி என்ப நாணம்; தனக்கு அணியாம்
தான்செல் உலகத்து அறம். (11)

- விளம்பிநாகனார்

அருஞ்சொற் பொருள்: அறம் - நற்செயல்கள், அணி - அழகு, நிலத்துக்கு - வயலுக்கு.

3.4. பழமொழி நானூறு

(இந்நூல் குறித்த விரிவான செய்திகளை அலகு 1 அற இலக்கியங்கள் பகுதியில் காண்க).

உன்னையே நீ அறிவாய்! உன் விதி/உயர்வு உன் கையில்! என்பன போன்ற இன்றைய தன்னம்பிக்கைப் பயிற்சியாளர்களும் உளவியல் அறிஞர்களும் கூறும் கருத்தினை, அன்றே நம் புலவர் பாங்குறப் பேசியிருப்பது, வியந்து போற்றுதற்குரியது.

தம்நடை நோக்கார் தமர் வந்த வாறு அறியார்
செந்நடை சேராச் சிறியார்போல் ஆகாது
நின் நடை யானே நட அத்தா நின்நடை
நின் இன்று அறிகிற்பார் இல். *(288)*

- முன்றுறை அரையனார்

அருஞ்சொற்பொருள்: சிறியார் - சிறுமைக் குணம் உடையவர், அத்தன் - தலைவன், தமர் - சுற்றத்தார், செந்நடை - சிறந்த நடை.

3.5. இனியவை நாற்பது

(இந்நூல் குறித்த விரிவான செய்திகளை அலகு 1 அற இலக்கியங்கள் பகுதியில் காண்க).

அறிவு, அனுபவம், நல்லொழுக்கம் ஆகியவை இனிமை பயப்பன. ஆழ்ந்த விளக்கம் இப்பாடலில்!

இளமையை மூப்பு என்று உணர்தல் இனிதே
கிளைஞர்மாட்டு அச்சு இன்மை கேட்டல் இனிதே
தடமென் பணைத்தோள் தளிர் இயலாரை
விடம் என்று உணர்தல் இனிது.

- பூதஞ்சேந்தனார்

அருஞ்சொற் பொருள்: கிளைஞர் - உறவினர், விடம் - நஞ்சு, பணை - மூங்கில், தளிர், இயலார் - விலைமாதர்.

* * *

அலகு - 4 காப்பிய இலக்கியம்

4.1. சிலப்பதிகாரம்

(இக் காப்பியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

வழக்குரை காதை

இழந்த பொருளை மீட்கவேண்டுமானால், முதலீட்டுக்குப் பொருள் வேண்டும். எனவே, தன் மனைவி கண்ணகியின் காற்சிலம்பை விற்க, கோவலன் மதுரைக் கடைத்தெருவிற்குப் போகிறான். அங்கு ஆராயாமல் வழங்கப்பட்ட அரசனது தவறான தீர்ப்பின் காரணமாக அவன் கொல்லப்படுகிறான். வெகுண்டெழுந்த கண்ணகி ஒருகாற் சிலம்புடன் பாண்டிய மன்னனின் அரண்மனை செல்கிறாள். அவள் உணர்ச்சி பொங்க வழக்குரைத்து வெல்வதும் தோற்ற பாண்டிய மன்னன் உயிர் நீப்பதும் இக்காதை கூறும் செய்திகள் ஆகும்.

பூ ஒன்று புயலானது! ஆம், கடும் இக்கட்டான நேரத்திலும் எதிர்த் தரப்பின் வாதத்தை முன்னரே சிந்தித்து, தேர்ந்த வழக்குரைஞர் போல் சான்றாதாரத்துடன் சென்று, கோபத்திலும் நிதானம் இழந்துவிடாமல் சொல்லாடி, வழக்கில் வென்று, கோவலனைக் குற்றப் பழியிலிருந்து காக்கிறாள் இளம்பெண் கண்ணகி.

அரசியின் தீக்கனவு

ஆங்குக்
"குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்
கடைமணி யின்குரல் காண்பென்காண் எல்லா!
திசை இரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்
கதிரை இருள்விழுங்கக் காண்பென்காண் எல்லா!

விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழும்
கடுங்கதிர் மீன்இவை காண்பென்காண் எல்லா!"

சில அறிகுறிகள்

செங்கோலும், வெண்குடையும்,
செறி நிலத்து மறிந்து வீழ்தரும்;

நம் கோன் - தன் கொற்ற வாயில்
மணி நடுங்க, நடுங்கும் உள்ளம்;
இரவு வில் இடும்; பகல் மீன் விழும்;
இரு - நான்கு திசையும் அதிர்ந்திடும்;
வருவது ஓர் துன்பம் உண்டு;

மன்னவற்கு யாம் உரைத்தும்' என

அரசியின் வருகை

ஆடி ஏந்தினர், கலன் ஏந்தினர்,

அவிர்ந்து விளங்கும் அணி இழையினர்;
கோடி ஏந்தினர், பட்டு ஏந்தினர்,
கொழுந் திரையலின் செப்பு ஏந்தினர்,

வண்ணம் ஏந்தினர், சுண்ணம் ஏந்தினர்,
மான்மதத்தின் சாந்து ஏந்தினர்,
கண்ணி ஏந்தினர், பிணையல் ஏந்தினர்,
கவரி ஏந்தினர், தூபம் ஏந்தினர்:
கூனும், குறளும், ஊமும், கூடிய

குறுந் தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர;
நரை விரைஇய நறுங் கூந்தலர்,
உரை விரைஇய பலர் வாழ்த்திட
'ஈண்டு நீர் வையம் காக்கும்
பாண்டியன் பெருந்தேவி! வாழ்க' என,

ஆயமும் காவலும் சென்று
அடியீடு பரசி ஏத்த;
கோப்பெருந்தேவி சென்று தன்
தீக் கனாத் திறம் உரைப்ப -
அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்,

திரு வீழ் மார்பின் தென்னவர் கோவே - இப்பால்,

கண்ணகி வருகை

'வாயிலோயே! வாயிலோயே!
அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து,
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!
'இணை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்,

கணவனை இழந்தாள், கடைஅகத்தாள்' என்று
அறிவிப்பாயே! அறிவிப்பாயே!' என -

வயில்காவலன் மன்னனுக்கு அறிவித்தல்

வாயிலோன், 'வாழி! எம் கொற்கை வேந்தே, வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ, வாழி!
செழிய, வாழி! தென்னவ, வாழி!

பழியொடு படராப் பஞ்சவ, வாழி!
அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந் துணிப்
பிடர்த் தலைப் பீடம் ஏறிய மடக்கொடி,
வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை, அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை

ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேர் உரம் கிழித்த பெண்ணும், அல்லள்;
செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொன் தொழில் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்;

கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே;
கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே' என -
'வருக, மற்று அவள் தருக, ஈங்கு' என -
வாயில் வந்து, கோயில் காட்ட,
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி -

அரசன் கண்ணகியை யாரென வினவுதல்

'நீர் வார் கண்ணை, எம் முன் வந்தோய்!
யாரையோ, நீ? மடக்கொடியோய்!' என -

கண்ணகி விடையிறுத்தல்

'தேரா மன்னா! செப்புவது உடையேன்;
எள் அறு சிறப்பின் இமையவர் வியப்ப,
புள் உறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,

வாயில் கடை மணி நடு நா நடுங்க,
ஆவின் கடை மணி உகு நீர் நெஞ்சு சுட, தான் தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என் பதியே; அவ் ஊர்,
ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்குடி

மாசாத்து வாணிகன் மகனை ஆகி,
வாழ்தல் வேண்டி, ஊழ்வினை துரப்ப,
சூழ் கழல் மன்னா! நின் நகர்ப் புகுந்து, ஈங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;

கண்ணகி என்பது என் பெயரே' என -

இருவருக்கும் இடையிலான சொற்போர்

'பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங் கோல் அன்று;
வெள் வேல் கொற்றம் - காண்' என - ஒள் - இழை,
'நல் திறம் படராக் கொற்கை வேந்தே!

என் கால் பொன் சிலம்பு மணி உடை அரியே' என -
'தேமொழி! உரைத்தது செவ்வை நல் மொழி;
யாம் உடைச் சிலம்பு முத்து உடை அரியே;

தருக' எனத் தந்து, தான் முன் வைப்ப -

கண்ணகி சிலம்பை உடைத்து சான்று காட்டுதல்
கண்ணகி அணி மணிக் கால் சிலம்பு உடைப்ப,

மன்னவன் வாய்முதல் தெறித்தது, மணியே - மணி கண்டு,

பாண்டியன் உயிர் துறத்தல்
தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,
'பொன் செய் கொல்லன் - தன் சொல் கேட்ட
யனோ அரசன்? யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென் புலம் காவல்

என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்! என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே - தென்னவன்

அரசியும் உயிர் நீத்தல்
கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கி,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று
இணை அடி தொழுது வீழ்ந்தனளே, மடமொழி.

அருஞ்சொற்பொருள்: எல்லா - தோழி, கடைமணி - முறை/குறை வேண்டி வருவோர் ஒலித்து அறிவிக்கும் பொருட்டு அரண்மனை வாயிலில் கட்டப்பட்டுள்ள பெரிய மணி (ஆராய்ச்சி மணி), கதிர் - சூரியன், அறிவு அறை போதல் - தக்க சமயத்தில் உதவாமல் போன அறிவு, இறை முறை - செங்கோண்மை, பசுந்துணி - வெட்டப்பட்ட துண்டம் - பிடர்தலை - பிடரியோடு கூடிய மகிடாசுரன் தலை, இறைவன் - சிவபெருமான், அணங்கு - காளி, கானகம் - உகந்த காளி - பாலை நிலத் தெய்வம் (கொற்றவை), செற்றனள் - உட்பகை கொண்டவள், செயிர்த்தல் - சினத்தல், தேரா மன்னா - ஆராய்ந்தறியும் அறிவு இல்லாத அரசனே, புள் - பறவை (இங்கு புறாவைக் குறிக்கும்), புன்கண் - துன்பம், ஏசாச் சிறப்பு - பழி கூறப்படாத பழஞ் சிறப்பு.

4.2. மணிமேகலை

(இக் காப்பியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

பாத்திரம் பெற்ற காதை

மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவத் தீவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட மணிமேகலை, அங்குக் கோமுகி என்னும் பொய்கையிலிருந்து எழுந்த 'அமுதசுரபி' என்னும் பசிப்பிணி போக்கும் பாத்திரத்தைப் பெற்ற செய்தியைக் கூறுவது இக் காதையாகும். 'தன்சுகத்தை மட்டும் முன்னிலைப்படுத்தி வாழ்வதால், கிடைக்கும் இன்பத்தையும் மகிழ்ச்சியையும்விட அனைத்து உயிர்களையும் இன்புறச் செய்யும் சேவையே கூடுதல் இன்பம் தருவது' என்பதை உணர்த்தும் பகுதி. காதல் உணர்வோ ஒருபுறம்

மனக்குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இந்நிலையில், சமூகசேவைக்கான அரிய வாய்ப்பு கிடைக்கிறது. உடனே, அனைத்தையும் மறந்துவிட்டு உற்சாகத்துடன் களமிறங்குகிறாள் இப் பதின்பருவ நங்கை.

தீவதிலகை என்னும் தெய்வப் பெண் மணிமேகலையை யார் எனக் கேட்டல்

மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணல் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மலர்ப் பொய்கையும் தாழ்ந்தனள் நோக்கிக்
காவதம் திரியக் கடவுள் கோலத்துத்

தீவ திலகை செவ்வனந் தோன்றிக்
கலம்கவிழ் மகளிரின் வந்துஈங்கு எய்திய
இலங்குதொடி நல்லாய் யார்நீ என்றலும்,

மணிமேகலை தன் வரலாறு உரைத்தல்

எப்பிறப் பகத்துள் யார்நீ என்றது
பொன்கொடி அன்னாய் பொருந்திக் கேளாய்

போய பிறவியில் பூமியங் கிழவன்
இராகுலன் மனையான் இலக்குமி என்பேர்
ஆய பிறவியில் ஆடலங் கணிகை
மாதவி ஈன்ற மணிமே கலையான்
என்பெயர்த் தெய்வம் ஈங்குஎனைக் கொணர இம்

மன்பெரும் பீடிகை என்பிறப்பு உணர்ந்தேன்
ஈங்குஎன் வரவுஇது ஈங்கு எய்திய பயன்இது
பூங்கொடி அன்னாய் யார்நீ என்றலும்,

தீவதிலகை தன்னைக் குறித்துக் கூறுதல்

ஆயிழை தன்பிறப்பு அறிந்தமை அறிந்த
தீவ திலகை செவ்வனம் உரைக்கும்

ஈங்குஇதன் அயலகத்து இரத்தின தீவத்து
ஓங்குஉயர் சமந்தத்து உச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடிஇணை ஆகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குஉளது ஆதலின்

தொழுதுவலம் கொண்டு வந்தேன் ஈங்குப்
பழுதுஇல் காட்சிஇந் நன்மணிப் பீடிகை
தேவர்கோன் ஏவலின் காவல் பூண்டேன்
தீவ திலகை என்பெயர் இதுகேள்:

தீவதிலகை, புத்த பீடிகை மற்றும் அமுதசுரபியின் பெருமைகள் கூறல்

தருமத் தலைவன் தலைமையின் உரைத்த

பெருமைசால் நல்அறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதன் பின்னர்ப்
பண்டைப் பிறவியர் ஆகுவர் பைந்தொடி
அரியர் உலகத்து ஆகுஅவர்க்கு அறமொழி
உரியது உலகத்து ஒருதலை யாக

ஆங்ஙனம் ஆகிய அணியிழை இதுகேள்

ஈங்குஇப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி
இருதுஇள வேனிலில் எரிகதிர் இடபத்து

ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்

அந்நாள் இந்நாள் அப்பொழுது இப்பொழுது
நின்ஆங்கு வருவது போலும் நேர்இழை

ஆங்குஅதின் பெய்த ஆர்உயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
தான்தொலைவு இல்லாத் தகைமையது ஆகும்

நறுமலர்க் கோதை நின்ஊர் ஆங்கண்
அறவணன் தன்பால் கேட்குவை இதன்திறம்
என்றுஅவள் உரைத்தலும், - இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடும் கூடிக்

கோமுகி வலம்செய்து கொள்கையின் நிற்றலும்

அமுதசுரபி பாத்திரம் மணிமேகலை கைக்குக் கிடைத்தல்

எழுந்துவலம் புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழுந்தகை மரபின் பாத்திரம் புகுதலும்.
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை இன்றி மனமகிழ் எய்தி

புத்த தேவனைப் போற்றித் துதித்தல்

மாரனை வெல்லும் வீர நின்அடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்அடி
பிறர்க்குஅறம் முயலும் பெரியோய் நின்அடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்அடி
எண்பிறக்கு ஒழிய இறந்தோய் நின்அடி

கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய் நின்அடி
தீமொழிக்கு அடைத்த செவியோய் நின்அடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்அடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்அடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்அடி

வணங்குதல் அல்லது வாழ்த்தல்என் நாவிற்கு
அடங்காது என்ற ஆயிழை முன்னர்,
போதி நீழல் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தித்
தீவ திலகை சேயிழைக்கும் உரைக்கும்

பசிக்கொடுமையின் விளைவுகள்

குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவிஅது தீர்த்தோர்

இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது

விசுவாமித்திரன் உற்ற பசி

புல்மரம் புகையப் புகைஅழல் பொங்கி
மன்உயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசுதலை நீங்கிய அருமறை அந்தணன்
இருநில மருங்கின் யாங்கணும் திரிவோன்

அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாய்ஊன் தின்னுதல் உறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளம் தருதலின் மன்உயிர் ஓங்கிப்

பிழையா விளையுளும் பெருகியது அன்றோ

பசிப்பிணி போக்குவோரின் சிறப்புகள்

ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்

உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக்
கயக்குஅறு நல்அறம் கண்டனை என்றலும்,

மணிமேகலை மகிழ்வுடன் இசைதல்

விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்
திட்டி விடம்உணச் செல்உயிர் போவுழி

உயிரொடு வேவேன் உணர்வு ஒழி காலத்து
வெயில்விளங்கு அமையத்து விளங்கித் தோன்றிய
சாது சக்கரன் தனையான் ஊட்டிய
காலம் போல்வதுஓர் கனாமயக்கு உற்றேன்
ஆங்குஅதன் பயனே ஆர்உயிர் மருந்தாய்

ஈங்குஇப் பாத்திரம் என்கைப் புகுந்தது
நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்தி நல்அறம் விளைந்த அதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சிதர் உடுத்து
வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி

வெயில்என முனியாது புயல்என மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லாது அயர்வோர் பலரால்
ஈன்ற குழவி முகங்கண்டு இரங்கித்
தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே

நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்து
அகன்சுரைப் பெய்த ஆர்உயிர் மருந்துஅவர்
முகம்கண்டு சுரத்தல் காண்டல்வேட் கையேன்என,

தீவதிலகை மணிமேலையை வாழ்த்துதல்

மறந்தேன் அதன்திறம் நீஎடுத்து உரைத்தனை
அறம்கரி யாக அருள்சுரந்து ஊட்டும்

சிறந்தோர்க்கு அல்லது செவ்வனம் சுரவாது
ஆங்ஙனம் ஆயினை அதன்பயன் அறிந்தனை
ஈங்குநின்று எழுவாய் என்றுஅவள் உரைப்ப,

மணிமேகலை இல்லம் திரும்புதல்

தீவ திலகை தன்அடி வணங்கி
மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்திக்

கோமகன் பீடிகை தொழுது வலம்கொண்டு
வான்ஊடு எழுந்து மணிமே கலைதான்
வழுஅறு தெய்வம் வாய்மையின் உரைத்த
எழுநாள் வந்தது என்மகள் வாராள்
வழுவாய் உண்டுஎன மயங்குவோள் முன்னர்

வந்து தோன்றி,
அந்தில் அவர்க்குஓர் அற்புதம் கூறும்

மாதவிக்கு அவரது முற்பிறப்பை உரைத்த மணிமேகலை
இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
அமுத பதிவயிற்று அரிதில் தோன்றித்

தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
அவ்வையர் ஆயினீர் நும்மடி தொழுதேன்
வாய்வ தாக மானிட யாக்கையில்

அறவண அடிகளைக் காண்போமாக
தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்குஈங்கு

அறவண வடிகள் தம்பால் பெறுமின்
செறிதொடி நல்லீர் உம்பிறப்பு ஈங்குஇஃது
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் நீயிரும் தொழும்எனத்
தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்

பழுதுஅறு மாதவன் பாதம் படர்கேம்
எழுகென எழுந்தனள் இளங்கொடி தான்என்.

அருஞ்சொற்பொருள்: காவதம் - ஒரு காத தூரம், தீவதிலகை - ஒரு தெய்வப் பெண் - பீடிகைபீடம், உச்சி மீமிசை - மலையுச்சியில், தேவர் கோன் - இந்திரன், தரும தலைவன் - புத்த தேவன், கோமுகி - பொய்கையின் பெயர், இலஞ்சி - நீர்நிலை, இரு இளவேனில் - சித்திரை, வைகாசி மாதங்கள், மீனத்து இடை - நட்சத்திரங்கள் இருபத்தேழில் இடையில் உள்ள பதினான்காம் நாள் விசாகம் (கார்த்திகையை முதலாகக் கொண்டு கணக்கிடுதல்), அமுதசுரபி - வற்றாது சுரக்கும் உணவுப் பாத்திரம், பைந்தொடி - பசுமையான வளையல்களை அணிந்தவள் (மணிமேகலை), மாரன் - மன்மதன், துறக்கம் - சுவர்க்கம், தீமொழி - குற்றச்சொல், போதி - அரசமரம், விழுப்பம் - மேன்மை, நாண் - நாணம், மாண் - சிறப்பு, புகையழல் - வெம்மை, அருமறை அந்தணன் - விசுவாமித்திரன், உரவோன் - வல்லமை உடையவன், விட்ட பிறப்பு - பழம் பிறப்பு, திட்டிவிடம் - பார்வையால் கொல்லும் தன்மையுடைய பாம்பு, ஆருயிர் மருந்து - உணவு, சிதர் - கந்தல் ஆடை, விஞ்சைப் பாத்திரம் - அமுதசுரபி, கோமகன் - புத்த தேவன் - வழவறு தெய்வம் - மணிமேகலா தெய்வம் - துரகம் - குதிரை, தவ்வை - தமக்கை.

4.3. பெரியபுராணம்

(இக் காப்பியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

'நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய் பரபரமே' என்ற தாயுமானவரின் அழைப்பைக் கதைவடிவில் அழகுற வழங்கியுள்ளார் சேக்கிழார். 'ஆடை அணிகள் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை!'

பூசலார் நாயனார் புராணம்

அன்றினார் புரம் எரித்தார்க்கு ஆலயம் எடுக்க எண்ணி
ஒன்றும் அங்கு உதவாது ஆக உணர்வினால் எடுக்கும் தன்மை
நன்று என மனத்தினாலே நல்ல ஆலயம் தான் செய்த
நின்ற ஊர்ப் பூசலார்தம் நினைவினை உரைக்கல் உற்றார் 1

உலகினில் ஒழுக்கம் என்றும் உயர் பெருந்தொண்டை நாட்டு
நலம்மிகு சிறப்பின் மிக்க நான் மறை விளங்கும் மூதூர்
குல முதல் சீலம் என்றும் குறைவுஇலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி நிகழ் திருநின்ற ஊராம் 2

அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை
தரும் உணர்வான எல்லாம் தம்பிரான் கழல்மேல் சார
வருநெறி மாறா அன்பு வளர்ந்து எழ வளர்ந்து வாய்மைப்
பொருள் பெறு வேதநீதிக் கலை உணர் பொலிவின் மிக்கார் 3

சிவபெருமானுக்குக் கோயில் எழுப்ப பூசலார் நினைத்தலும் மனத்துள்ளே கட்டுதலும்

'அடுப்பது சிவன்பால் அன்பர்க்கு ஆம் பணி செய்தல்' என்றே
கொடுப்பது எவ்வகையும் தேடி அவர் கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்து உறைவதற்கு ஓர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார் இரு நிதி இன்மை எண்ணார் 4

மனத்தினால் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
'எனைத்தும் ஓர் பொருள் பேறு இன்றி என் செய்கேன்' என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ் உறு நிதியம் எல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார் 5

சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம் செய் நலம் பெறு நல் நாள் கொண்டே
ஆதரித்து ஆகமத்தால் அடிநிலை பாரித்து அன்பால்
காதலின் கங்குல் போதும் கண்படாது எடுக்கல் உற்றார் 6

அடிமுதல் உபானம் ஆதி ஆகிய படைகள் எல்லாம்
வடிவு உறும் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து, மான
முடிவு உறு சிகரம் தானும் முன்னிய முழத்தில் கொண்டு,
நெடிது நாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவால் செய்தார் 7

தூபியும் நட்டு மிக்க சுதையும் நல்வினையும் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில் சூழ் மதிலும் போக்கி,
வாவியும் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னும்
தாபரம் சிவனுக்கு ஏற்க விதித்த நாள் சாரும் நாளில் *8*

மன்னவன் கட்டிய கோயிலும் இறைவன் சித்தமும்

காடவர் கோமான் கச்சிக் கல்தளி எடுத்து முற்ற
மாடு எலாம் சிவனுக்கு ஆகப் பெரும் செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியாதாரைத் தாபிக்கும் அந்நாள் முன்நாள்
ஏடு அலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவில் எய்தி *9*

'நின்ற ஊர்ப் பூசல் அன்பன் நெடு நாள் நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்துள் நாளை நாம் புகுவோம் நீ இங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின் கொள்வாய்' என்று,
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்டு அருளப் போந்தார் *10*

தொண்டரை விளக்கத் தூயோன் அருள் செயத் துயிலை நீங்கித்
திண்திறல் மன்னன் 'அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டு நான் வணங்க வேண்டும்' என்று எழும் காதலோடும்
தண் டலைச் சூழல் சூழ்ந்த நின்ற ஊர் வந்து சார்ந்தான் *11*

மன்னவன் பூசலாரைத் தேடிக் கண்டடைதல்

அப்பதி அணைந்து 'பூசல் அன்பர் இங்கு அமைத்த கோயில்
எப்புடையது ?' என்று அங்கண் எய்தினார் தம்மைக் கேட்கச்
'செப்பிய பூசல் கோயில் செய்தது ஒன்று இல்லை' என்றார்;
'மெய்ப் பெரு மறையோர் எல்லாம் வருக' என்று உரைத்தான் வேந்தன் *12*

பூசுரர் எல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண
'மாசு இலாப் பூசலார் தாம் யார்?' என, மறையோர் எல்லாம்
'ஆசு இல் வேதியன் இவ்வூரான்' என்று அவர் அழைக்க ஒட்டான்
ஈசனார் அன்பர் தம்பால் எய்தினான் வெய்ய வேலான் *13*

மன்னவன் கோயிலைக் காட்ட வேண்டலும் பூசலார் மறுமொழியும்

தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது 'நீர் இங்கு
எண் திசை யோரும் ஏத்த எடுத்த ஆலயம் தான் யாது ?' இங்கு
அண்டர் நாயகரைத் தாபித்து அருளும் நாள் இன்று என்று உம்மைக்
கண்டு அடி பணிய வந்தேன்; கண் நுதல் அருள் பெற்று' என்றான் *14*

மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர் தாம் மருண்டு நோக்கி,
'என்னை ஓர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள் செய்தாரேல்
முன்வரு நிதி இலாமை மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம்' என்று சிந்தித்து எடுத்த வாறு எடுத்துச் சொன்னார் *15*

அரசனும் அதனைக் கேட்டு அங்கு அதிசயம் எய்தி 'என்னே!
புரை அறு சிந்தை அன்பர் பெருமை!' என்று அவரைப் போற்றி
விரை செறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசு எறி தானை யோடு மீண்டு தன் மூது ஊர்ப் புக்கான் 16

அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத்து அரனார் தம்மை
நன் பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தினோடும்
பின்பு பூசனைகள் எல்லாம் பெருமையில் பல நாள் பேணிப்
பொன் புனை மன்றுள் ஆடும் பொன் கழல் நீழல் புக்கார் 17

நீண்ட செஞ்சடையினார்க்கு நினைப்பினால் கோயில் ஆக்கிப்
பூண்ட அன்பு இடை அறாத பூசலார் பொன்தாள் போற்றி
ஆண்ட கை வளவர் கோமான் உலகு உய்ய அளித்த செல்வப்
பாண்டிமா தேவியார் தம் பாதங்கள் பரவல் உற்றேன் 18

அருஞ்சொற் பொருள்: மறை - வேதம், மூதூர் - பழைய ஊர், நைவார் - மனம் வருந்துவார், கங்குல் - இரவு, தாபரம் - பூமி, மாசிலா - குற்றமிலா, மருண்டு - வியந்து.

4.4. கம்பராமாயணம்

(இக் காப்பியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

குகப் படலம்

குகன் இராமன்பால் கொண்டிருந்த பெருவிருப்பத்தையும் இராமன் குகன்பால் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பையும் கம்பர் தம் செய்யுள் திறத்தால் அழகுற எடுத்தியம்புகிறார். தொடக்கம் முதல் இறுதிவரை வற்றாமல் சொரியும் குகனது கண்ணீர் 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்?' எனக் கேட்கும்.

குகனின் அறிமுகம்

ஆய காலையின், ஆயிரம் அம்பிக்கு
நாயகன், போர்க் குகன் எனும் நாமத்தான்,
தூய கங்கைத் துறை விடும் தொன்மையான்,
காயும் வில்லினன், கல் திரள் தோளினான். 1

துடியன், நாயினன், தோற் செருப்பு ஆர்த்த பேர் -
அடியன், அல் செறிந்தன்ன நிறத்தினான்,
நெடிய தானை நெருங்கலின், நீர் முகில்
இடியினோடு எழுந்தாலன்ன ஈட்டினான். 2

கொம்பு துத்தரி கோடு அதிர் பேரிகை
பம்பை பம்பு படையினன், பல்லவத்து
அம்பன், அம்பிக்கு நாதன், அழி கவுள்
தும்பி ஈட்டம் புரை கிளை சுற்றத்தான். 3

காழும் இட்ட குறங்கினன், கங்கையின்
ஆழும் இட்ட நெடுமையினான், அரை
தாழ விட்ட செந் தோலன், தயங்குறச்
சூழ விட்ட தொடு புலி வாலினான். 4

பல் தொடுத்தன்ன பல் சூழ் கவடியன்,
கல் தொடுத்தன்ன போலும் கழலினான்,
அல் தொடுத்தன்ன குஞ்சியன், ஆளியின்
நெற்றொடு ஒத்து நெரிந்த புருவத்தான். 5

பெண்ணை வன் செறும்பின் பிறங்கிச் செறி
வண்ண வன் மயிர் வார்ந்து உயர் முன் கையன்,
கண் அகன் தட மார்பு எனும் கல்லினன்,
எண்ணெய் உண்ட இருள் புரை மேனியான். 6

கச்சொடு ஆர்த்த கறைக் கதிர் வாளினன்,
நச்சு அராவின் நடுக்குறு நோக்கினன்,
பிச்சாரம் அன்ன பேச்சினன், இந்திரன்
வச்சிராயுதம் போலும் மருங்கினான். 7

ஊற்றமே மிக ஊனொடு மீன் நுகர்
நாற்றம் மேய நகை இல் முகத்தினான்,
சீற்றம் இன்றியும் தீ எழ நோக்குவான்,
கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினான். 8

சிருங்கிபேரம் எனத் திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகர் உறை வாழ்க்கையன்,
ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தன், -
இருந்த வள்ளலைக் காண வந்து எய்தினான். 9

இராமனின் தவச்சாலையை குகன் சேர்தல்

சுற்றம் அப் புறம் நிற்க, சுடு கணை
வில் துறந்து, அரை வீக்கிய வாள் ஒழித்து,
அற்றம் நீத்த மனத்தினன், அன்பினன்,
நல் தவப் பள்ளி வாயிலை நண்ணினான். 10

குகன் இலக்குவனுக்குத் தன்னை அறிவித்தல்

கூவா முன்னம், இளையோன் குறுகி, 'நீ
ஆவான் யார்?' என, அன்பின் இறைஞ்சினான்;
'தேவா! நின் கழல் சேவிக்க வந்தனென்;
நாவாய் வேட்டுவன், நாய் அடியேன்' என்றான். 11

குகனின் வரவை இலக்குவன் இராமனுக்கு அறிவித்தல்

'நிற்றி ஈண்டு' என்று, புக்கு நெடியவன் - தொழுது, தம்பி,
'கொற்றவ! நின்னைக் காணக் குறுகினன், நிமிர்ந்த கூட்டச்
சுற்றமும், தானும்; உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை; குகன் ஒருவன்' என்றான். 12

இராமனைக் கண்டு வணங்கி குகன் தன் கையுறைப் பொருளை ஏற்க வேண்டுதல்

அண்ணலும் விரும்பி, 'என்பால் அழைத்தி நீ அவனை' என்ன,
பண்ணவன், 'வருக' என்ன, பரிவினன் விரைவில் புக்கான்;
கண்ணனைக் கண்ணின் நோக்கிக் கனிந்தனன்; இருண்ட குஞ்சி
மண் உறப் பணிந்து, மேனி வளைத்து, வாய் புதைத்து நின்றான். 13

இராமன் இருக்கச் சொல்ல, குகன் தன் கையுறைப் பொருளை அறிவித்தல்

'இருத்தி ஈண்டு' என்னலோடும் இருந்திலன்; எல்லை நீத்த
அருத்தியன், 'தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினென் கொணர்ந்தேன்; என்கொல் திரு உளம்?' என்ன, வீரன்
விருத்த மாதவரை நோக்கி முறுவலன், விளம்பலுற்றான்: 14

குகனது அன்பை இராமன் பாராட்டுதல்

'அரிய, தாம் உவப்ப, உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால், அமிழ்தினும் சீர்த்த அன்றே?
பரிவினின் தழீஇய என்னின் பவித்திரம்; எம்மனோர்க்கும்
உரியன; இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ?' என்றான். 15

விடியலில் நாவாய் கொண்டு வர குகனிடம் இராமன் கூறல்

சிங்க ஏறு அனைய வீரன், பின்னரும் செப்புவான், 'யாம்
இங்கு உறைந்து, எறி நீர்க் கங்கை ஏறுதும் நாளை; யாணர்ப்
பொங்கும் நின் சுற்றத்தோடும் போய் உவந்து, இனிது உன் ஊரில்
தங்கி, நீ நாவாயோடும் சாருதி விடியல்' என்றான். 16

குகனது வேண்டுகோள்

கார் குலாம் நிறத்தான் கூற, காதலன் உணர்த்துவான், 'இப்
பார் குலாம் செல்வ! நின்னை, இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வனேன் யான், இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன்; ஆனது, ஐய! செய்குவென் அடிமை' என்றான். 17

குகனின் வேண்டுகோளை இராமன் ஏற்றல்

கோதை வில் குரிசில், அன்னான் கூறிய கொள்கை கேட்டான்;
சீதையை நோக்கி, தம்பி திருமுகம் நோக்கி, 'தீராக்
காதலன் ஆகும்' என்று, கருணையின் மலர்ந்த கண்ணன்,
'யாதினும் இனிய நண்ப! இருத்தி ஈண்டு, எம்மொடு' என்றான். 18

அடிதொழுது உவகை தூண்ட அழைத்தனன், ஆழி அன்ன
துடியுடைச் சேனை வெள்ளம், பள்ளியைச் சுற்ற ஏவி,
வடி சிலை பிடித்து, வாளும் வீக்கி, வாய் அம்பு பற்றி,
இடியுடை மேகம் என்ன இரைத்து அவண் காத்து நின்றான். 19

இராமன் நகர் நீங்கிய காரணம் அறிந்து குகன் வருத்துதல்
'திரு நகர் தீர்ந்த வண்ணம், மானவ! தெரித்தி' என்ன,
பருவரல் தம்பி கூற, பரிந்தவன் பையுள் எய்தி,
இரு கண் நீர் அருவி சோர, குகனும் ஆண்டு இருந்தான், 'என்னே!
பெரு நிலக் கிழத்தி நோற்றும், பெற்றிலள் போலும்' என்னா. 20

கதிரவன் மறைதல்
விரி இருட் பகையை ஓட்டி, திசைகளை வென்று, மேல் நின்று,
ஒரு தனித் திகிரி உந்தி, உயர் புகழ் நிறுவி, நாளும்
இரு நிலத்து எவர்க்கும் உள்ளத்து இருந்து, அருள்புரிந்து வீந்த
செரு வலி வீரன் என்னச் செங் கதிர்ச் செல்வன் சென்றான். 21

இராமனும் சீதையும் உறங்க இலக்குவன் காவல் இருத்தல்
மாலைவாய் நியமம் செய்து மரபுளி இயற்றி, வைகல்,
வேலைவாய் அமுது அன்னாளும் வீரனும் விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினர்; வரி வில் ஏந்திக்
காலைவாய் அளவும், தம்பி இமைப்பிலன், காத்து நின்றான். 22

இராம இலக்குவரை நோக்கி குகன் இரவு முழுது கண்ணீர் வழிய நிற்றல்
தும்பியின் குழாத்தின் சுற்றும் சுற்றத்தன், தொடுத்த வில்லன்,
வெம்பி வெந்து அழியாநின்ற நெஞ்சினன், விழித்த கண்ணன்
தம்பி நின்றானை நோக்கி, தலைமகன் தன்மை நோக்கி,
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவி சோர் குன்றின் நின்றான். 23

கதிரவன் தோன்றலும் தாமரை மலர்தலும்
துறக்கமே முதல ஆய தூயன யாவையேனும்
மறக்குமா நினையல் அம்மா! - வரம்பு இல தோற்றும் மாக்கள்
இறக்குமாறு இது என்பான்போல் முன்னை நாள் இறந்தான், பின் நாள்,
பிறக்குமாறு இது என்பான்போல் பிறந்தனன் - பிறவா வெய்யோன். 24

செஞ்செவே சேற்றில் தோன்றும் தாமரை, தேரில் தோன்றும்
வெஞ் சுடர்ச் செல்வன் மேனி நோக்கின விரிந்த; வேறு ஓர்
அஞ்சன நாயிறு அன்ன ஐயனை நோக்கி, செய்ய
வஞ்சி வாழ் வதனம் என்னும் தாமரை மலர்ந்தது அன்றே. 25

குகனை நாவாய் கொணருமாறு இராமன் பணித்தல்

நாள் முதற்கு அமைந்த யாவும் நயந்தனன் இயற்றி, நாமத்
தோள் முதற்கு அமைந்த வில்லான், மறையவர் தொடரப் போனான்,
ஆள் முதற்கு அமைந்த கேண்மை அன்பனை நோக்கி, 'ஐய!
கோள் முதற்கு அமைந்த நாவாய் கொணருதி விரைவின்' என்றான். 26

இராமனைத் தன் இருப்பிடத்தில் தங்க குகன் வேண்டுதல்

ஏவிய மொழிகேளா, இழி புனல் பொழி கண்ணான்,
ஆவியும் உலைகின்றான், அடி இணை பிரிகல்லான்,
காவியின் மலர், காயா, கடல், மழை, அனையானைத்
தேவியொடு அடி தாழா, சிந்தனை உரை செய்வான்: 27

'பொய்ம் முறை இலராய்; எம் புகல் இடம் வனமேயால்;
கொய்ம் முறை உறு தாராய்! குறைவிலெம்; வலியேமால்;
செய்ம் முறை குற்றேவல் செய்குதும்; அடியோமை
இம் முறை உறவு என்னா இனிது இரு நெடிது, எம் ஊர்; 28

'தேன் உள; திணை உண்டால்; தேவரும் நுகர்தற்கு ஆம்
ஊன் உள; துணை நாயேம் உயிர் உள; விளையாடக்
கான் உள; புனல் ஆடக் கங்கையும் உளது அன்றோ?
நான் உளதனையும் நீ இனிது இரு; நட, எம்பால்; 29

'தோல் உள, துகில்போலும்; சுவை உள; தொடர் மஞ்சம்
போல் உள பரண்; வைகும் புரை உள; கடிது ஓடும்
கால் உள; சிலை பூணும் கை உள; கலி வானின் -
மேல் உள பொருளேனும், விரைவொடு கொணர்வேமால்; 30

'ஐ - இருபத்தோடு ஐந்து ஆயிரர் உளர், ஆணை
செய்குநர், சிலை வேடர் - தேவரின் வலியாரால்;
உய்குதும் அடியேம் - எம் குடிலிடை, ஒரு நாள், நீ
வைகுதி எனின் - மேல் ஓர் வாழ்வு இலை பிறிது' என்றான். 31

மீண்டும் வருகையில் குகனிடம் வருவதாக இராமன் இயம்பல்

அண்ணலும் அது கேளா, அகம் நிறை அருள் மிக்கான்,
வெண் நிற நகைசெய்தான்; 'வீர! நின்னுழை யாம் அப்
புண்ணிய நதி ஆடிப் புனிதரை வழிபாடு உற்று
எண்ணிய சில நாளில் குறுகுதும் இனிது' என்றான். 32

குகன் நாவாய் கொணர, மூவரும் கங்கையைக் கடத்தல்

சிந்தனை உணர்கிற்பான் சென்றனன், விரைவோடும்;
தந்தனன் நெடு நாவாய்; தாமரை நயனத்தான்

அந்தணர்தமை எல்லாம், 'அருளுதிர் விடை' என்னா,
இந்துவின் நுதலாளோடு இளவலொடு இனிது ஏறா. 33

'விடு, நனி கடிது' என்றான்; மெய் உயிர் அனையானும்,
முடுகினன், நெடு நாவாய்; முரி திரை நெடு நீர்வாய்;
கடிதினின், மட அன்னக் கதிஅது செல, நின்றார்
இடர் உற, மறையோரும் எரி உறு மெழுகு ஆனார். 34

பால் உடை மொழியாளும், பகலவன் அனையானும்,
சேலுடை நெடு நல் நீர் சிந்தினர், விளையாட;
தோலுடை நிமிர் கோலின் துழவிட, எழு நாவாய்,
காலுடை நெடு ஞெண்டின், சென்றது கடிது அம்மா! 35

அருஞ்சொற்பொருள்: அம்பி - தோணி, காழம் - உடை, கவடியன் - துடைச்சந்து, ஆளி - சிங்கம், அரவு - பாம்பு, நாற்றம் - வாசம், கூற்றம் - இயமன், அருத்தியன் - விருப்பமுடையவன், பவித்திரம் - சுத்தம், ஆழி - கடல், பருவரல் - துன்பம், நியமம் - தவம், துகில் - ஆடை, சிலை - வில்.

4.5. சீறாப்புராணம்

(இக் காப்பியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

மானுக்குப் பிணை நின்ற படலம்

அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டிய சிபிச் சக்கரவர்த்தி, மனுநீதிச் சோழன் போன்றோரது உயிர் இரக்கத்தை நினைவூட்டும் வகையில், நபிகளாரின் செயலும் அவர் வேடனுக்குக் கூறிய அறவுரைகளும் விளங்கிய சிறப்பை இப் படலத்தில் கற்றுத் துய்க்கலாம். 'உண்மை, நேர்மை, உயிர் இரக்கம், சொல்திறம்பாமை போன்ற நற்பண்புகள் கொலையிற் கொடியாரையும் அறவழிக்குத் திருப்பும்' என்னும் அரிய கருத்தை எளிதின் உணர்த்தும்.

குயினிழல் பரப்பச் செவ்விக் கொழுந்தடை நறவஞ் சிந்தும்
வயிரவொண் வரையின் விம்மி வளர்ந்ததிண் புயத்து வள்ளல்
செயிரறு மறையின் றீஞ்சொற் செழுமழை பொழிந்து தீனின்
பயிர்வளந் தேறச் செய்து பரிவுட னிருக்கு நாளில். 1

நபிகள் நாயகம் வலையில் அகப்பட்ட பெண்மானைக் காணுதல்

அரியினஞ் செறிந்த போன்ற அறபிகள் குழுவி னாப்ப
ணொருதனிச் சீய மொப்ப வுடையவன் றூதர் செல்வத்
திருநகர்ப் புறத்து நீங்கிச் செழுமுகின் முடியிற் றாங்கி
மருமலர் செறியுஞ் சோலை சூழ்ந்ததோர் வரையைச் சார்ந்தார். 2

கொன்றையுங் குருந்துங் கார்க்கோற் குறிஞ்சியும் வேயுந் தற்றித்
துன்றிய நிழலு நன்னீர் சொரிதரு மிடமுஞ் செந்தேன்
மன்றலொண் மலரு நீங்கா வனந்திகழ் வரையின் கண்ண
சென்றன நெறிக்குங் காந்தி செவ்விமெய் முகம்ம தன்றே. 3

வனந்தரி விலங்கு மாய்த்து வன்றசை வகிர்ந்து வாரித்
தினந்தொறுங் கோலிற் கோலித் தீயிடை யமிழ்த்திக் காய்த்தித்
தனந்தனி யிருந்து நின்று தன்றசைக் பெருக்க லன்றி
யனந்தலிற் பொழுதும் வேறோ ரறிவென்ப தறிந்தி லானே. 4

காலினிற் கழலு நீண்ட கரியகா ளத்தின் வீக்கும்
பாலினில் வலையுங் கையிற் பருவரைத் தனுவுங் கூருங்
கோல்வெறி நணியுந் தோளிற் கூன்பிறை வாளு மென்மை
வாலுடைப் பறவை சேர்த்துங் கண்ணியு மருங்கிற் கொண்டோன். 5

குறுவெயர்ப் புதித்த மெய்யுங் கொழுந்தசை மணத்த வாயும்
பறிதலை விரிப்புங் கூர்ந்த படுகொலை விழியு மாக
வறபினி லறபி வேட னடவியிற் றொடர்ந்தோர் மானைக்
கறுவொடும் வலையிற் சேர்த்திக் கட்டிவைத் திருப்பக் கண்டார். 6

குழைகுழைத் தெரியுஞ் செந்தேன் கொழுமலர்க் காவை நோக்கார்
பொழிமலை யருவி நோக்கார் புறத்துநன் னிழலை நோக்கார்
செழுமுகிற் கவிகை வள்ளல் செறிதரு மீந்தின் செங்காய்
மறையெனச் சொரிவ நோக்கார் மானையே நோக்கிச் சென்றார். 7

அருளடை கிடந்த கண்ணு மழகொளிர் முகமுஞ் சோதி
சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ் சூன்முகிற் கவிகை யோடும்
வருவது தூயோன் றூதர் முகம்மது வென்னத் தேறிப்
பருவர லுழக்கு முள்ளத் தொடும்பிணை பகரு மன்றே. 8

நெடியவன் றூதர் வந்தார் வேடனா னிலத்தி னந்த
முடலுயிர்க் கிறுதி யில்லை யுழையினத் தோடுஞ் சேர்ந்து
கடிதினிற் கன்றுங் காண்போ மெனமுகம் மதுவைக் கண்ணா
னொடிவரை யிமைமு டாம னோக்கியே கிடந்த தன்றே. 9

பொருப்பிடைத் துறுகற் சார்பிற் பொரியாரைத் தருவி னீழன்
மருப்புடைப் படலைத் திண்டோன் மன்னவ ருடனும் புக்கு
நெருப்பிடைத் தசைவா யார்ந்து நின்றவே டனையுஞ் செம்மான்
றிருப்புதற் கருங்கட் டுண்டு கிடப்பதுஞ் சிறப்பக் கண்டார். 10

இடைநிலத் துருக்கி விட்ட விரசிதம் பரந்த தென்ன
மடிசுதை யமுதஞ் சிந்த வடிக்கணீர் பனிப்பத் தேங்கு
முடலகந் துருத்தி யொப்ப நெட்டுயிர்ப் புயிர்த்துக் காலிற்
றுடரொடுங் கிடப்பத் தூயோன் றூதுவ ரடுத்து நின்றார். 11

கொடியடம் பிலையை மானும் குளம்பின்மேற் சுருக்கும் புள்ளிப்
பொடியுடற் பதைப்பும் வீங்கிப் புதையுநெட் டுயிர்ப்பு நோக்கி
நெடியவ னிறசூ லுல்லா நெஞ்சுநெக் குருகிக் கானின்
பிடிபடு மானின் றன்பாற் பேரருள் சுரப்ப நின்றார். 12

கதிர்விரி ஹபீபு நிற்பக் கானகத் தருக்க ளியாவும்
புதுமல ரலர்த்திச் செந்தேன் பொழிவமான் வருத்த நோக்கி
விதிர்சினைக் கரங்கள் சாய்த்து மென்றழைக் கூந்தல் சோர
மதியழிந் திரங்கிக் கண்ணீர் வடிப்பன போன்ற தன்றே. 13

குலத்தொடும் பறவை தத்தங் குடம்பையிற் புகுதன் மானை
நிலத்திடைக் கிடத்திக் கட்டி நின்றவேட் டுவனைக் கண்ணா
னலத்தொடுங் காண்ப தாகா தெனநடு நடுங்கி யுள்ள
முலைத்தறப் பெடையி னோடு மொளிப்பன போன்ற தன்றே. 14

ஏட்டலர் நறவ மாந்தி யிருஞ்சுரும் பிசைக்குந் தோற்றம்
வாட்டமின் முகம்ம திங்ஙன் வந்தனர் வருந்து மானை
மீட்டனர் வேட னீமான் விரும்பினன் பயங்க டேர்த்தார்
கூட்டுறைந் தொளித்தன் மாற்று மெனப்பல கூய போலும். 15

நபிகளாரிடம் மான் முறையிடல்

நிறைவளஞ் சுரந்த கானி னின்றநந் நபியை நோக்கிக்
குறியவா லசைத்து நீண்ட கொழுங்கழுத் துயர்த்தி நீட்டி
மறைபடா மதியே வண்மை முகம்மதே யென்னப் போற்றித்
தறுகிடா தெவர்க்குங் கேட்பச் சலாமெடுத் துரைத்துக் கூறும். 16

வல்லவ னுண்மைத் தூதே மன்னுமா நிலத்தின் மாந்த
ரல்லலை யகற்றி வேதத் தறநெறி பயிற்றிச் சொர்க்கத்
தில்லிடைப் புகுத்தப் பூவி னிடத்தினி லுதித்த கோவே
யொல்லையி னெனது சொற்கேட் டுவந்தரு ளளிக்க வேண்டும். 17

என்னுயி ரெனநீங் காத வினமுமென் கலையுங் கன்றுந்
துன்னிடத் திரண்டு பைம்புற் றுறைதொறு மேய்ந்து நாளு
முன்னிய பசிக டீர்த்தோர் மிருகங்கட் குயிர்கொ டாமன்
மன்னிய மலையின் சார்பு மனப்பய மகற்றி வாழ்ந்தேம். 18

இருநிலத் தாசைக் காயோ ரிளங்கன்றென் வயிற்று றாதான்
மருவிய கலையு நானும் வருத்தமுற் றிருக்குங் காலம்
பெருகுதீன் முகம்ம தேநும் பெயரினைப் போற்றல் செய்தே
னுருவமைந் திளஞ்சூன் முற்றி யுதரமும் வளர்ந்த தன்றே. 19

தனியனென் னுயிருங் காக்குங் கலையுயிர் தானு மொன்றா
யினிதினொன் றாய தென்ன விளங்கன்றொன் றீன்றே னின்ப

நனிகனி கடலி லாழ்ந்து நறுமலை யிடத்திற் சேர்ந்து
துனிபல வகற்றி னேன்முன் சூழ்வினை யறிகே லேனே. 20

உள்ளுயி ரனைய கன்று மொருத்தலு மியானு மோர்நாள்
வெள்ளமொத் தனைய மானி னினமோர் வெற்பின் சார்பி
னள்ளிலை யள்ளி வாய்கொண் டரும்பசி தடிந்து நீருண்
டெள்ளள வெனினு மச்ச மின்றிநின் றுலவு நேரம். 21

அத்திசைக் கெதிரின் மேல்பா லடுத்தொரு குவட்டின் கண்ணே
மத்தகக் கரியு மாய்க்கும் வரிப்புலி முழக்க நீண்ட
குத்திரத் தசனித் தாக்கின் குவலய மதிரக் கேட்டுத்
தத்தியெத் திசையுந் திக்குந் தனித்தனிச் சிதறி னேமால். 22

கூடிய தூறும் பாரிற் குளித்திடக் குதித்து வல்லே
யோடிய திசையி னொன்றை யொன்றுகாண் கிலதா யானும்
வாடிய மனத்தி னோடு மறியையு நோக்கா தாக்கை
யாடியிற் றுரும்பாய் வேறோ ரடவியி னடைந்திட் டேனால். 23

அடவியி னடையுங் காலை யவ்வுழைக் கரந்திவ் வேடன்
றுடரிடும் வலையைச் சுற்றிச் சுருக்கிடப் புலிவாய்த் தப்பி
மிடலரி யுழையிற் சிக்கி மிடைந்தென மிடைந்து செவ்வி
யுடலுயிர் பதைப்பத் தேம்பி யுணர்வழிந் தொடுங்கா நின்றேன். 24

வலையிடத் துறைந்த தென்ன மகிழ்ந்தெழுந் தோடி வந்து
நிலைபெற வடுத்துச் சாய்த்து நின்றெனை நோக்கி யாகத்
துலைவுறும் பசிக்கின் றென்பா லுற்றனை யென்னக் கூறிச்
சிலகணை நிலத்திற் சேர்த்தித் தெரிந்தொரு பாசந் தொட்டான். 25

திருக்கற நாலு தாளுஞ் செவ்விதிற் கூட்டி யங்கை
வரிக்கயி றதனாற் சுற்றி மாறுகொண் டீழ்த்துக் கட்டிக்
சரிக்கர மென்ன நீண்ட கரத்தினாற் றாங்கி முன்னர்ச்
சுருக்கிய வலையை நீக்கித் தோளினி லெடுத்துக் கொண்டான். 26

சுவைமுனைக் கோட்டுச் செவ்விக் கலையுட லுயிரு மீன்ற
நவியுட லுயிரு மோர்மா னுடன்கொண்டு நடப்ப தொத்துச்
சவிபுறந் தவழுங் கோட்டுச் சார்பிலிவ் வனத்தின் கண்ணே
சுவையறு மொழியா னென்னைச் சுமந்திவ ணிறக்கி வைத்தான். 27

கட்டுடன் கிடந்து நெஞ்சிற் கவலையுள் ளழிந்து மாறா
நெட்டுயிர்ப் பெறிந்து சோர்ந்து நிலத்திடைக் கிடக்கு நேரம்
வட்டவெண் கவிகை வள்ளல் முகம்மது நபியே யும்மைத்
திட்டியிற் றெரியக் கண்டேன் றிடுக்கமுந் தீர்ந்த தன்றே. 28

எனவினை யுரைத்துப் பின்னு மெழினபி முகத்தை நோக்கி
மனநிலை வாக்கி னோடு முகம்மதே யென்னப் போற்றிப்

புனமுறை விலங்கின் சாதி யாயினுந் தமியேன் புன்சொற்
றனையருட் படுத்திக் கேட்பீ ரென்றுரை சாற்றிச் சாற்றும். 29

இச்சிலை வேடன் கையி னிறத்தலை யுளத்தி லெண்ணி
யச்சமுற் றுரைப்ப தன்றிவ் வவனியிற் சீவ னியாவு
நிச்சய மிறத்த லல்லா லிருப்பவை நிலத்தி லுண்டோ
முச்சகம் விளங்குந் தீனின் முதன்மறை முறைமைச் சொல்லோய். 30

கலையெனப் பிரிவி லாது கண்ணிமை காப்ப தென்ன
வலைவறக் காப்பச் சின்னா ளவனியிற் கலந்து வாழ்ந்தேன்
குலவிய மறியு மீன்றேன் குறித்தினி யிருப்ப தென்கொ
லிலைநுனிப் பனியி னாக்கை யிறத்தலே நலத்தன் மன்னோ. 31

அடவியிற் கிரியில் வீணி லவதியுற் றிறந்தி டாமல்
வடிவுடைக் குரிசி லேனும் மலர்ப்பதச் செவ்வி நோக்கிப்
படுபரற் கானில் வேடன் பசிப்பிணி தீர்ப்ப தாக
வுடலிறத் திடுத லெவ்வெவ் விறப்பினு முயர்ச்சி மேலோய். 32

வரிப்புலி முழக்கங் கேட்டு மானினஞ் சிதறித் தத்தந்
தரிப்பிட மறியா தொன்றுக் கொன்றுடன் சாரா தெங்கு
முரைப்பரி தென்னப் போந்த தாலென தொருத்த றேடி
யிரைப்பறா நெடிக்கான் போய்ப்போ யிருந்ததோ விறந்த தேயோ. 33

ஒல்லையி னோடி நீங்கா தொருத்தலின் றளவு மோந்து
புல்லினைக் கறியா நீரும் புசித்திடா திருந்து தேடி
யல்லலுற் றழுங்கிக் கண்ணி னருவிநீர் சொரிய வாடிப்
பல்லவ மெரியிற் புக்க தெனவுடல் பதைக்கு மன்றே. 34

கன்று குறித்த மானின் பதைபதைப்பு

பிடிபடு மிதற்கு முன்னே மூன்றுநாட் பிறந்து புல்லின்
கொடிநுனை மேய்ந்து நீருங் குடித்தறி யாது பாவி
மடிமுலை யிறங்கிப் பாலும் வழிந்தது குழவி சோர்ந்து
படிமிசை கிடந்தென் பாடு படுவதோ வறிகி லேனே. 35

கோட்டுடைக் கலையி னோடுங் கூடிற்றோ வலதோர் பாலின்
மீட்டதோ வினத்தைச் சேர்ந்து விம்மிநின் றேங்கிற் றோகான்
காட்டிடைப் புலிவாய்ப் பட்டுக் கழிந்ததோ வென்னைத் தேடி
வாட்டமுற் றலறி யோடி மறுகிற்றோ வறிகி லேனே. 36

தேங்கிய பசியால் வாடித் திரிந்ததோ விறந்த தோவென்
றேங்கிய வருத்த மல்லா லிவ்விட ரதனி லாவி
நீங்குமென் றுள்ளத் துள்ளே னெட்டுட லுடுப்பி னாவி
தாங்கிய தரும வேந்தே தவறன்று சாத மன்றே. 37

மன்னிய கலிமா வென்னும் வழிநிலை மாந்த ரியாரும்
பொன்னிலம் புகுதச் செய்யும் புண்ணியப் புகழின் மிக்கோய்
கொன்னிலைச் சிலைக்கை வேடன் கொடும்பசி தணிப்பே னென்றாட்
பின்னிய பிணிப்பு நீக்கிப் பிணையென விடுத்தல் வேண்டும். 38

விடுத்திரேற் கலையைச் சேர்ந்து விழைவுறுங் கவலை தீரப்
படுத்தியென் னினத்துக் கோதிப் பறழினுக் கினிய தீம்பால்
கொடுத்தரும் பசியை மாற்றிக் குலத்தொடுஞ் சேர்த்து வல்லே
யடுத்தொரு கடிகைப் போதிலடைவ னென் றைந்த தன்றே. 39

மானுக்குப் பிணையாக இருக்க நபிகளார் ஒருப்படுதல்
மானுரை வழங்கக் கேட்டு மனத்தினிற் கருணை பொங்கிக்
கானவேட் டுவனை நோக்கிக் கன்றிடை வருத்தந் தீர்த்துத்
தான்வரு மளவு மியானே பிணையெனச் சாற்றி நின்றார்
தீனெனும் பயிரைக் காத்துச் செழும்புகழ் விளக்குஞ் செம்மல். 40

பிரியமுற் றிரங்கிக் காட்டின் பிணக்கியான் பிணையென் றோது
முரையினைக் கேட்டு வேட னொண்புயங் குலுங்க நக்கித்
தெரிதரு மறிவி னோடுஞ் சினத்தொடுங் கலந்து தேர்ந்து
கருமுகிற் கவிகை வள்ளல் கவின்முக நோக்கிச் சொல்வான். 41

முள்ளுடைக் கானி லேகி முகமழிந் துச்சி வேர்வை
யுள்ளங்கா னனைப்ப வோடி யுடலுலைந் தொன்றுங் காணா
வின்ளரும் பசியான் மீளும் வேளையிப் பிணையை நோக்கி
யொள்ளிழை வலையிற் றாக்கிப் பிடித்திவ ணொருங்கு சார்ந்தேன். 42

பெருத்தமான் றசையா லிற்றைப் பெரும்பசி தவிர்ந்த தென்று
ளிருத்தியிங் கிருந்தே னந்த விருமனக் களிப்பை நீக்கி
வருத்தமுற் றிடுஞ்சொற் சொன்னீர் முகம்மதே யெவர்க்கு மிச்சொற்
பொருத்தம தன்று விண்ணு மண்ணிலும் புகழின் மிக்கோய். 43

கானிடைப் பிடித்த மானைக் கட்டவிழ்த் தவணிற் போக்கின்
மானிடர் பாலின் மீட்டும் வருவது முன்ன ருண்டோ
ஞானமு மறையுந் தேர்ந்தோர் செய்யுளு நாட்டிற் றுண்டோ
வூனமிப் பிணைச்சொ லையா வோதுவ தொழிக வென்றான். 44

என்னுறு பிணையாய்ப் போன விரும்பினை கடிகைப் போதி
னுன்னிடத் துறும்வா ராதே லுன்பசி தீர்ப்ப தாகப்
பின்னிரண் டொன்றுக் கன்பாய்த் தருகுவன் பேது றேலென்
றன்னவன் றனக்குச் சொன்னா ராரணத் தமிர்தச் சொல்லார். 45

காரணக் குரிசில் கூறுங் கட்டுரை செவியி னோர்ந்து
பாரினி லெவர்க்குந் தோன்றாப் புதுமைபார்த் தறிவோ மல்லாற்
சார்பினிற் சாரா லொன்றுக் கிரண்டுமே தருது மென்றார்
பேரினிற் பிணயாய்க் கொள்ளல் கருத்தெனப் பெரிதுட் கொண்டோன். 46

கள்ளமுங் கரப்பு மாறாக் கருத்தின னுயிர்கட் கென்று
மெள்ளள விரக்க மில்லா வேட்டுவ ரினத்தி னுள்ளே
னுள்ளம தறிந்துங் கேட்டீ ருரைப்பதென் னுயர்ந்த மேன்மை
வள்ளல்நும் மதுர வாய்மை மறுத்திலேன் விடுத்தி ரென்றான். 47

வேட்டுவ னுரைப்பக் கேட்டு முகம்மது விருப்ப முற்று
வாட்டமுற் றிருந்த புள்ளி மானிடத் திருந்து பாரி
னீட்டிய காலிற் சேர்த்த துடரினை நெகிழ்த்துக் கானிற்
கூட்டுறாக் குழவிக் குப்பால் கொடுத்திவண் வருக வென்றார். 48

மான் நபிகளாரை வணங்கிப் புறப்படுதல்

இருந்துகான் மடக்கி நீட்டி யெழுந்துடன் முறுக்கு நீக்கி
மருந்தெனு மமுதத் தீஞ்சொன் முகம்மதின் வதன நோக்கிப்
பொருந்திய கலிமா வோதிப் புகழ்ந்துடற் பூரிப் போடுந்
திருந்தவே டனையும் பார்த்துச் சென்றது கானின் மானே. 49

வெண்ணிலாக் கதிர்கான் றென்ன மென்முலை சுரந்த தீம்பான்
மண்ணெலா நனைப்பச் சூழ்ந்த வனமெலாந் திரிந்து தேடிக்
கண்ணினி லினங்கா ணாது கலங்கியோர் வனத்தின் கண்ணே
யெண்ணரும் பிணையுங் கன்றுங் கலையுட னினிது கண்ட. 50

மலைவற வினத்து ளாகி மனத்தினுட் கவலை நீக்கிக்
கலையினுள் வருத்தந் தீர்த்துக் கன்றினை யணைத்து விம்மு
முலையினை யூட்டி மென்மை முதுகுவா லடிநா நீட்டி
யலைதர வளைத்து மோந்து வேட்கையை யகற்றிற் றன்றே. 51

மான் தன் கூட்டத்தாரோடு சேர்தலும் துணைமானின் கருத்தும்

கன்றது வயிறு வீங்கக் கதிர்முலை யமுத மூட்டி
நின்றதன் னினத்துக் கெல்லா நெடிபடுங் கானி லோடி
வன்றிறல் வேடன் கையிற் படும்வர வாறுந் தூதர்
வென்றிகொள் பிணையின் மீட்டு விட்டது மோதிற் றன்றே. 52

பிணையென வுரைத்த மாற்றம் பிணைக்குல மனைத்துங் கேட்டுப்
பணைபடு கானி லுள்ளப் பதைப்பொடுந் துணுக்கி நிற்பத்
துணையெனுங் கலையி னங்கஞ் சோர்ந்துநெட் டுயிர்ப்பு வீங்கி
யணைதர வடுத்து நோக்கி யாற்றுவான் றொடங்கிற் றன்றே. 53

மாறுகொண் டவர்கை தப்பி வந்தமா னினத்தின் சாதி
கோறலை விரும்பி முன்னு நரர்கையிற் கூடிற் றுண்டோ
வேறுரை பகரேல் பார்ப்பை வெறுத்துமுன் னினத்தை நீத்து
மீறெனப் போதல் வேண்டா மெனுமுரை யியம்பிற் றன்றே. 54

பெண்மானின் மறுமொழி

இணைத்தெனைப் பிணித்த வேட னிதயத்துக் கியையப் பேசிப்
பிணைதனைப் பொருத்தி நின்றோர் பெரியவன் றூத ரிந்தத்
திணைத்தலத் தறிவி லாத சேதனச் சாதி யன்றே
யணைத்துயி ரனைத்துங் காத்தற் கவரல தில்லை யன்றே. 55

என்னுயி ரதனை வேட னிரும்பசிக் கியைய வீந்து
நன்னபி பிணையை மீட்ப நன்மனம் பொருந்தி லேனாற்
பொன்னுல கிழந்து தீயு நரகினிற் புகுவ தல்லாற்
பின்னொரு கதியு முண்டோ பிழையன்றிப் பெருமை யன்றே. 56

சிறப்புடைக் குரிசின் முன்னஞ் செப்பிய மாற்ற மாறி
மறப்பொடு மிருந்தே னாகில் வரிப்புலி யினத்தின் வாய்ப்பட்
டிறப்பதே சரத மல்லா லிருப்பதற் கிடமற் றுண்டோ
வுறப்பெரும் விருப்ப மென்மே லிருத்தலை யொழித்தல் வேண்டும். 57

நதியிடைப் பெருக்கின் முன்னோர் நவ்விபி னடக்கு நாளின்
மதியிலி யொருத்தன் வள்ளன் முகம்மதின் வசன மாறிப்
புதியநன் னீரு ளாழ்ந்து நொடியினில் வீழ்ந்து போய
வதிசய முலகில் விண்ணி லியாவரே யறிகி லாதார். 58

ஃதெலா மறிந்து மென்னை யிவணிடை யிருத்தல் வேண்டி
யோதுதல் பழுதென் றோதி யுழையின மனைத்துந் தேற்றிக்
காதலிற் கலையைப் போற்றிக் கன்றினை யதன்பாற் சேர்த்திப்
பேதுற லெனப்பா லூட்டி யெழுந்தது பிணையு மன்றே. 59

இனத்தினை விடுத்து நீங்கி யிருங்களிப் பிதயம் பூப்ப
வனத்தினி லேகுங் காலை மறிமுன மறிப்பச் சீறிச்
சினத்தது தடுப்ப வோடிச் செவ்விமான் முகத்தை நோக்கி
யினித்தவாய் புற்றீண் டாத விளமறி யுரைக்கு மன்றே. 60

மாதவம் பெற்று நின்போன் முகம்மது நபிதஞ் செய்ய
பாதபங் கயத்தைக் கண்டு பரிவுட னீமான் கொண்டு
போதலே யன்றி நின்னைப் புறத்தினி லகற்றி வாழே
னீதுமுத் திரையென் றோதி யெழுந்துமுன் குதித்த தன்றே. 61

இறையவன் றூதைக் கண்ட வதிசய மிதுகொ லென்ன
மறிமன மறுகி லாது வதைதனைப் பொருந்திச் சேற
லிறுதியிற் றின்ப நம்பா லெய்துமென் றகத்தி னெண்ணிச்
செறிவனங் கடந்து வேடன் றிசைதனை யடுத்த தன்றே. 62

மான் மற்றும் நபிகளாரின் நேர்மையைக் கண்ட வேடன் மனந்திருந்துதல்

குருளையும் பிணையுங் கூடி வருவது குறித்து நோக்கி
முருகலர் புயத்தார் வள்ளன் முகம்மது மகிழ்ந்தன் பாக
விருளுறு மனத்த னான வேடனை யினிது கூவி

யொருபிணைக் கிரண்டுன் பாலில் வருவதென் றுரைத்திட் டாரால். 63

அன்னது கேட்டு வேட னோக்கியன் புற்ற காலை
முன்னிய கன்று மானு முகம்மதி னடியிற் றாழ்ந்து
பன்னிய சலாமுங் கூறிப் பாலியெற் காக வேட்டு
மன்னிய பிணையை மீட்டு மெனுமுரை வழங்கிற் றன்றே. 64

மாடுறைந் திவைமான் கூற முகம்மது நபியும் விற்கை
வேடனை விளித்து நந்தம் பிணையினை விடுத்து நின்றன்
பீடுடைப் பசியை மாற்றிப் பெரும்பதிக் கடைக வென்றார்
வீடுபெற் றுயர்ந்து வாழ்ந்தே னெனமலர்ப் பதத்தின் வீழ்ந்தான். 65

பாதபங் கயத்தைப் போற்றிப் பருவர லகற்றி யாதி
தூதுவ ரிவரே யல்லா விலையெனு மனத்திற் றூக்கி
வேதநா யகமே யென்பால் விருப்புறுங் கலிமாத் தன்னை
யோதுமென் றிருகை யேந்தி யுவந்துநின் றுரைப்ப தானான். 66

கருமுகிற் கவிகை வேந்தே கானக வேட னென்னு
முருவினன் விலங்கோ டொப்பே னுள்ளறி வுணர்வு மில்லேன்
றெருளுறப் பாவி யென்னை தீனிலைக் குரிய னென்னப்
பெரிதளித் திடுதல் நுந்நம் பெருமையிற் பெருமை யென்றான். 67

மதிமுக மகிழ்ச்சி கூர முகம்மது கலிமாச் சொல்ல
விதயமுற் றோதி வேட னினிதினி னீமான் கொண்டு
புதியினை வணங்கிச் செய்யுஞ் செய்தொழில் பொருந்தக் கேட்டு
நிதிமனைக் குரிய னாகி தீனிலை நெறிநின் றானே. 68

பெறுகதி நின்னாற் பெற்றேன் பெரும்பவங் களைந்தேன் மாறாத்
தெறுகொலை விளைத்து முன்னஞ் செய்தொழி றவிழ்த்தே னீயு
மறுகலை யெறிந்து தேறு மனக்கலை யொடுகன் றோடு
முறுகலை யிடத்திற் போய்ச்சேர்ந் தொழுகலை முயல்தி யென்றான். 69

வானவர் பரவுங் கோமான் முகம்மது மானை நோக்கிக்
கானகஞ் சென்னீ யென்றார் கமலமென் பதத்திற் றாழ்ந்து
தீனிலைக் குரிய வேடன் றன்னையுந் திருந்தப் போற்றி
நானிலம் புகலப் பாரி னடந்தினஞ் சேர்ந்த தன்றே. 70

தேனைக்குங் குமங்கள் சிந்தச் செழித்ததிண் புயத்து வள்ளல்
கானக்குவ் விடத்திற் காட்டுங் கமலமென் பதத்தைப் போற்றித்
தானைக்கும் பதிக்கு மியானே தலைவனென் பவர்போல் வேடன்
மானைக்கொண் டுவரப் போய் மானைக்கொண் டகத்திற் புக்கான். 71

துடவைநன் மலரைத் தூற்றுந் தூய்நிழ லிடத்தை நீந்திப்
படர்முகிற் கவிகை யோங்கப் பாருள தெவையும் வாழ்த்த
வடவரை யனைய திண்டோள் வயவர்க ளினிது சூழக்
கடிமனை யிடத்திற் புக்கார் ஹபீபிற சூலூ மன்றே. 72

அருஞ்சொற்பொருள்: நறவம் - தேன், சீயம் - சிங்கம், காளம் - இருள்; கருமை, பருவரல் - துன்பம், பொருப்பு - மலை, விரசிதம் - வெள்ளி, குளம்பு - விலங்குகளின் பாதம், தருக்கள் - மரங்கள், குடம்பை - கூடு, சுரும்பு - வண்டு, பயிற்றி - பழக்கி, மருவிய - தழுவிய, உதரம் - வயிறு, வெற்பு - மலை, அடவி - காடு, ஒல்லை - விரைவு, குழவி - குட்டி, கலை - ஆண் மான், தேங்கிய - மிகுந்த, பறழி - குட்டி, பேதுறேல் - வருந்த வேண்டாம், குரிசில் - பெருமையில் சிறந்தோன், கரப்பு - மறைப்பு, வன்றிறல் - வலிமை, நெட்டுயிர்ப்பு - பெருமுச்சு, சரதம் - உண்மை, குருளை - குட்டி, பங்கயம் - தாமரை.

4.6. இயேசு காவியம்

(இக் காப்பியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

ஊதாரிப்பிள்ளை

உடன்பிறந்தோர் தங்களுக்குள் போட்டி - பொறாமை இருக்கல்லாம். ஆனால், பெற்றோர் உள்ளம் அனைவரையும் சமமாகவே நடத்தும் என்பதை இப்பகுதி உணர்வுப்பூர்வமாகக் காட்டுகிறது.

ஒருதந்தை இருமக்கள் ஊர்முழுதும் சொத்து
ஒருபிள்ளை அவர்களிலே மணியான முத்து!
சிறுபையன் ஊதாரி தேறாத நெத்து
தீராத மழையினிலே கரையேறும் வித்து! 1

தன்பாகம் வேண்டுமெனத் தந்தையிடம் கேட்டான்
தந்தை அவன் மொழிகேட்டுச் சரிபாதி தந்தான்!
தந்தானே யல்லாது தாளாது துடித்தான்
தன்பிள்ளை வாழட்டும் என்றேதான் கொடுத்தான்! 2

குருட்டுமகன் தன்சொத்தைக் குறைந்தவிலை விற்றுக்
கொண்டோடி வெளிநாட்டில் கும்மாளமிட்டான்!
பொருட்பெண்டிர் மதுவென்று போனவழி சென்று
பொருள்தேய்ந்து புகழ்தேய்ந்து தெருவினிலே நின்றான்! 3

அந்நாட்டில் பெரும்பஞ்சம் அவ்வேளை சூழ
அறியாத இளமைந்தன் அலைந்தானே வாழ!
தன்னாட்டு மனிதனிடம் ஒருவேலை தேட
தந்தானே ஒருவேலை பன்றிகளோ டாட! 4

பன்றிக்குத் தருகின்ற உணவேதான் உணவு
பாவிக்கு நாளெல்லாம் தந்தையவன் கனவு!
அந்நேரம் தெளிந்ததுகாண் அவனுடைய அறிவு
அப்பாவின் கால்களிலே விழுகின்ற நினைவு! 5

"என்தந்தாய் வானுக்கும் உமக்குமெதி ரானேன்

எத்தனையோ ஊழியர்கள் இங்கிருக்கப் போனேன்
உன்வீட்டுக் கூலிகளில் ஒருவனென ஏற்பாய்
உன்பிள்ளை என்றுசொலத் தகுதியில்லை காப்பாய்!" 6

இப்படிப்போய் விழவேண்டும் என்றெண்ணிச் சென்றான்
எதிர்பார்த்துக் காத்திருந்த தந்தையின்முன் நின்றான்!
"அப்பாஎன் மகனே" என் றணைத்தானே தந்தை
அன்பான தந்தையின்முன் அழுததவன் சிந்தை! 7

"எப்போது வருவாயென் றெண்ணியிருந் தேனே!
இளைத்தாயே என்மகனே! கண்மணியே தேனே!
தப்பான பிள்ளையல்ல எதுவும்சொல் லாதே!
சந்தர்ப்பம் செய்தசதி வருவாய்இப் போதே! 8

"யாரங்கே பணியாள்வா பட்டாடை நகைகள்
அத்தனையும் அணியுங்கள் அலங்கார வகைகள்!
பேர்சொல்லும் மகனுக்குப் பெருங்கன்றின் கறிகள்
பிழையாமல் செய்யுங்கள் விரைவில்" எனச் சொன்னான்! 9

மாலையிலே மூத்தமகன் மனைக்குவரும் போது
மனையினிலே சங்கீதம் நடனவகை நூறு!
சாலையிலே நின்றபடி 'ஏன்சத்தம்?' என்றான்
'தம்பிஇன்று வந்துள்ளார்' என்றொருவன் சொன்னான்! 10

ஆத்திரத்தில் வெளிப்புறமே மூத்தமகன் நின்றான்
அப்போது தந்தையவன் அந்தஇடம் வந்தான்!
"த்திரத்தை மறந்தவனைத் தடபுடலாய் ஏற்றீர்
சாப்பாடு நடனமென ஏற்றுகிறீர் போற்றி! 11

"உங்களுடன் இருந்தவரை நானென்ன கண்டேன்
ஒருநாளும் எனக்கென்று விருந்துவகை உண்டா?"
கண்கலங்கி மூத்தமகன் இவ்வாறு சொல்ல
கனிவோடு தந்தையவன் மறுவார்த்தை சொன்னான்: 12

"என்னோடு என்றும் நீ இருப்பவனே யன்றோ
என்செல்வம் எந்நாளும் உன்னுடைய தன்றோ!
உன்தம்பி இறந்ததன்பின் உயிர்பெற்று வந்தான்
உண்மையிலே மறுபிறவி அதற்காகச் செய்தேன்!" 13

அருஞ்சொற்பொருள்: தேறாத - தெளியாத, தாளாது - தாங்க முடியாது, பாவி - கொடியவன், சதி - வஞ்சனை, சாத்திரத்தை - வேதத்தை.

* * *

அலகு - 5 பக்தி இலக்கியமும் பகுத்தறிவு இலக்கியமும்

5.1. பக்தி இலக்கியம்

(பக்தி இலக்கியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

5.1.1. திருநாவுக்கரசர் - தேவாரம்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில், வேளாளர் மரபில் புகழனாருக்கும் மாதினியார்க்கும் மகனாகப் பிறந்தவர் திருநாவுக்கரசர். பெற்றோர் இட்ட பெயர் மருள்நீக்கியார். தமக்கையார் திலகவதியால் இளமை முதலே வளர்க்கப்பட்டார்.

சமண சமயத்தில் சேர்ந்து அச்சமய நூல்களை எல்லாம் கற்றுத் தேர்ந்து ‘தரும சேனர்’ என்ற பட்டப் பெயருடன் வாழ்ந்துவந்தார். ஒருசமயம் தருமசேனருக்குத் தீராத சூலைநோய் ஏற்பட, சமணர்கள் தம்மாலியன்ற மருத்துவத்தால் நோயைக் குணப்படுத்த முயன்றனர். ஆனாலும் நோய் தீராததால் திருவதிகைப் பெருமானை வேண்டி, தமக்கையார் திருநீறு அணிவித்தார். பின் வீரட்டானேசுவரம் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கிப் பதிகம் பாட நோய் தீர்ந்தது. அப்போது அவர் பாடிய முதல் பதிகம் ‘கூற்றாயினவாறு விலக்ககலீர், கொடுமை பலசெய்தன நானறியேன்” எனத்தொடங்கும் முதலடியினைக் கொண்டது.

இதுதொடங்கி அவர் சிவபெருமான் தலங்களுக்குச் சென்று வழிபட்டுப் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைத் தொகுப்பில் 4, 5, 6 ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. தருமசேனர் சைவசமயத்தைப் பின்பற்றிய செய்தியைக் கேட்டு, வெகுண்ட சமணர்கள் மகேந்திரவர்மப் பல்லவனிடம் முறையிட, அவன் சீற்றம் கொண்டு அமைச்சரை அனுப்பி அழைத்துவரச் சொன்னான். திருநாவுக்கரசர் பின்வரும் பதிகம்பாடி அமைச்சருடன் செல்ல மறுத்தார். அப்பதிகத்தின் முதல் பாடல் பாடமாக உள்ளது. இது ஆறாம் திருமுறையில் திருத் தாண்டகப் பண்ணில் அமைந்துள்ளது.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற் சங்க வெண் குழை ஓர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

அருஞ்சொற்பொருள்: நமன் - எமன், கூற்றம்; நடலை - பொய், வஞ்சனை, பாசாங்கு, துன்பம், ஏமாப்பு - மகிழ்வுடன் இருத்தல், குறுகுதல் - அடைதல், மீளா ஆளாய் - விலகாத அடியாராய், கோமான் - அரசர்க்கு அரசர்.

5.1.2. மாணிக்கவாசகர் - திருவாசகம்

பாண்டிய நாட்டில் திருவாதவூரில் 'திருவாதவூரர்' (மாணிக்கவாசகர்) பிறந்தார். அறிவாற்றலில் சிறந்து விளங்கிய இவர் அரிமர்த்தனப் பாண்டியனிடம் அமைச்சராக விளங்கினார். 'தென்னவன் பிரம்மராயன்' என்னும் பட்டமளித்துப் பாராட்டப்பெற்றார்.

மன்னனுக்குக் குதிரை வாங்குவதற்காக நிறையப் பொன்னுடன் கீழைக்கரைக்குச் சென்றபோது, திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் இறைவன் ஞானாசிரியனாய் வெளிப்பட்டு உபதேசம் செய்ய, ஞான உபதேசம் பெற்றதும் தன் நிலைமறந்து கொண்டுவந்த பொன்னையெல்லாம் இறைப்பணியில் செலவிட்டார். இதனையறிந்த மன்னன் இவரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்தவே, இறைவன் அவர் பொருட்டு நரியைப் பரியாக்கி, வைகையில் வெள்ளப் பெருக்கு உண்டாக்கி, பிட்டுக்கு மண்சுமந்து, பிரம்படிபட்டு எனப் பல்வேறு வகையான திருவிளையாடல்களைப் புரிந்தார். அதன்பிறகு மன்னன் மாணிக்க வாசகரின் பெருமையை உணர்ந்தான். சிறையிலிருந்தும், பதவியிலிருந்தும் விடுதலைபெற்ற இவர் சிவத்தொண்டில் ஈடுபட்டார்.

இவர் பாடிய பாடல்களின் தொகுப்பு திருவாசகம், திருக்கோவையார் ஆகியனவாகும். திருவாசகத்தில் சிவபுராணம் தொடங்கி அச்சோப் பதிகம் ஈறாக 659 பாடல்கள் உள்ளன. இவை 51 தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் சிறப்புகொண்ட 'திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பர். திருவாசகத்தின் சிறப்பால் ஈர்க்கப்பட்ட இராமலிங்க அடிகளார் அதனை வழிபடு நூலாக ஏற்றதோடு,

வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து என்
ஊன்கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

என்றும்

வாட்டமிலா மாணிக்கவாசக நின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்கினமும் மெய்ஞான
நாட்டமுறும் எனில் நானுறுதல் வியப்பன்றே

என்றும் பாடிச் சிறப்பிக்கிறார்.

துறைமங்கலம் சிவபிரகாச அடிகள் தமது நால்வர் நான்மணிமாலையில்,

திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர்ப் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே

என்று போற்றியுள்ளார்.

அயல் நாட்டினாரான டாக்டர் ஜி.யு. போப் தமது இறுதிக் காலத்தில் திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இத்தகைய நூலின் முதல் பகுதியான சிவபுராணத்திலிருந்து பத்து அடிகள் பாடமாக உள்ளன.

சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தாற்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க.

அருஞ்சொற்பொருள்: இமைப்பொழுதும் - கால அளவு, கோகழி - திருவாவடுதுறை என்னும் சிவத்தலம்; அண்ணிப்பான் - பக்கத்தில் இருப்பவன், இனிமை செம்பவன்; ஏகன் - ஒருவன், அநேகன் - பலவாக இருப்பவன்: பிஞ்ஞகன் - தலைக்கோலம் உடையவன் (பிறை, கங்கை, அரவம் முதலியன தலைக்கோலங்கள்) புறத்தார்க்குச் சேயோன் - இறைவன் தன்னை நினையாதவரைத் தனக்கு வேறானவராகவே வைத்துச் சிறிதும் விளங்கித் தோன்றாதவன்" இறைவன் விரும்பி இருக்கும் இடங்கள் இரண்டு என்பர். அவை, நெஞ்சத் தாமரை, மற்றொன்று துவாதசாந்தப் பெருவெளி. அதாவது, தனக்குப் பன்னிரண்டு அங்குலத்திற்கும் மேல் உள்ள இடம். இவை இரண்டையும் சுட்ட "கரங்குவிவார், சிரங்குவிவார்" என்றார்.

5.1.3. பொய்கையாழ்வார்

தமிழ்நாட்டுச் சமயங்களில் மிக முக்கியமான சமயங்கள் சைவமும் மாலியமும் ஆகும். மாலியம் என்பது வைணவம் ஆகும். வைணவ நெறியைப் பின்பற்றி பக்தி நெறியில் விளங்கிய பன்னிரு ஆழ்வார்களில் முதல் ஆழ்வார் பொய்கையாழ்வார். காஞ்சிபுரத்தில் ஐப்பசி மாதம் திருவோணம் நட்சத்திரத்தில் பொற்றாமரைக் குளத்தில் பிறந்தவர் எனப்படுகிறது. திருமாலின் ஐம்படைகளில் ஒன்றாக விளங்கும் பாஞ்சசன்யம் என்ற சங்கின் அம்சமாகப் பிறந்தவர் என்றும் கூறுவர். இவரால் அந்தாதியாகப் பாடப்பட்ட நூறு பாடல்களும் 'முதல் திருவந்தாதி' என்று நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இயற்பாவாகத் தொகுக்கப்பட்டுள்ளன. 'வையம் தகளியா வார்கடலே நெய்யாக' என்னும் பாடல் பாடப்பகுதியில் அமைந்துள்ளது.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர் ஆழி நீ(ங்)குகவே என்று.

அருஞ்சொற்பொருள்: வையம் - உலகம்: தகளி - அகல், சுடர் ஆழி - ஒளிவீசும் சக்கரம்; ஆழி - கடல்.

5.1.4. பூதத்தாழ்வார்

வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், ‘அலைகள் தாலாட்டும் மாமல்லபுரம்’, என்றும் ‘கடல் மல்லை’ என்றும் போற்றப்படும் மாமல்லபுரத்தில், பள்ளிகொண்ட அலங்காரநாதர் திருக்கோயில் நந்தவனத்தில், குருக்கத்தி மரத்தடியில் பிறந்தவர் பூதத்தாழ்வார் என்பர். திருமாலின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான கதாயுதத்தின் அம்சமாகப் பிறந்தவர் என்று இறைவனோடு இணைத்துக் கூறப்படுகிறது. எம்பெருமானுடைய மெய்ந்நிலையை உணர்ந்து பரஞானம் அடைந்தவர் என்பதால் ‘பூதத்தாழ்வார்’ எனப் பெயர் வந்ததாகக் கூறுவர். இவர் பாடிய நூறு பாசுரங்களும் இரண்டாம் திருவந்தாதி என நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. இவண், ‘அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக’ என்னும் பாடல் இடம்பெற்றுள்ளது.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினே நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.

அருஞ்சொற் பொருள்: தகளி - விளக்கு, இன்புருகு சிந்தை - இனிமையாலே உருகும் மனம், திரி - விளக்கில் இடப்படும் திரி, நன்புருகி - ஆன்மா உருகி, நாரணற்கு - நாராயணனுக்கு.

5.1.5. பேயாழ்வார்

சென்னை, திருமயிலையில் கேசவப் பெருமாள் கோயில் அருகில் உள்ள ஒரு கிணற்றில் செவ்வல்லி மலரில் தோன்றியவர் பேயாழ்வார் என்பர். இவர் இளமையில் நன்கு கல்வி கற்று, உலக வாழ்வில் பற்றின்றி இடையறாது திருமாலின் பக்தியில் திளைத்து வழிபட்டு வந்தார். பேரன்பு கொண்டு வாழ்ந்ததனால் உலகத்தாரால் ‘பேயன்’ என்றும் அதிக பக்தியால் ஆடியும் பாடியும் வழிபட்டதால் ’பேயாழ்வார்’ என்றும் அழைத்தனர். இவர் பாடிய பாடல்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் மூன்றாம் திருவந்தாதி என்று சுட்டப்பெறும் பெருமையுடையவையாகும். இவர் எம்பெருமானின் பொன்மேனியைக்கண்டு உளமுருகப் பாடிய பாடல் இது.

திருக்கண்டேன் பொன் மேனிகண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் – செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.

அருஞ்சொற்பொருள்: அருக்கன் - சூரியன்: செருக்கிளரும் பொன்னாழி - மகாபாரதப் போரில் சுழற்றப்பட்ட சக்கரம்: புரிசங்கம் - முறுக்கேறிய சங்கு, ஆழிவண்ணன் - கடல்நிறம் கொண்டவன்.

5.1.6. ஆண்டாள் - திருப்பாவை

தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களில் ஒருவர். வைணவம் பரப்பிய 12 ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண் ஆழ்வார். திருவில்லிபுத்தூரில் வாழ்ந்த விட்டுணுசித்தர் எனும் பெரியாழ்வார் துளசிச் செடியின் கீழ்க்

கிடந்த பெண் குழந்தையை எடுத்துக் கோதை என்று பெயரிட்டு வளர்த்துவந்தார். பெரியாழ்வார் திருவில்லிபுத்தூரில் ஆண்டாள் உடனுறை அரங்கநாதர் கோயிலுக்கு மலர்கொய்து மாலையாக்கிக் கொடுக்கும் கடமையாற்றினார்.

இளம் வயதிலேயே தமிழில் நல்ல புலமை கொண்டவராக கோதை விளங்கினார். இதன் காரணமாக கண்ணனையே மணந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தையும் வளர்த்துக் கொண்டார். கோயிலில் இறைவனுக்கு அணிவிக்க பெரியாழ்வார் தொடுத்துவைத்த மாலைகளை ஒவ்வொரு நாளும் அவருக்குத் தெரியாமல் அணிந்து கண்ணனுக்கு ஏற்றவளாகத் தாமிருக்கிறோமா என்று கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்து பின்னர் திரும்பவும் கொண்டுபோய் வைத்துவந்தார். இதனை அறிந்துகொண்ட அவர் கோதையைக் கடிந்துகொண்டார். அவள் சூடிய மாலையை ஒதுக்கிவிட்டுப் புதிய மாலையைத் தொடுத்து இறைவனுக்கு அணிவித்தார்.

அன்றிரவு இறைவன் அவர் கனவில் தோன்றி கோதை அணிந்த மாலைகளே தனக்கு உவப்பானவை என்றார். இதனாலேயே ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’ என்றும் ’ஆண்டாள்’ எனவும் போற்றப்பட்டாள். கோதை மணவயது அடைந்த பின்னர் அவளுக்கான திருமண ஏற்பாடுகள் நடந்தன. “மானிடர்க்கு என்று பேச்சுப்படில் உயிர் வாழ்கிலேன்” என்று மறுத்துத் திருவரங்கத்தில் உறையும் இறைவனையே மணப்பது என்று உறுதியாக இருந்தாள். அதன்பிறகு கோதையை மணக் கோலத்தில் திருவரங்கம் கோயிலுக்கு அழைத்துச்செல்ல கோயில் கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்தாள் என்பது ஆண்டாள் வரலாறு.

இயற்றிய நூல்கள்: ஆண்டாள் இயற்றிய நூல்களான நாச்சியார் திருமொழி, திருப்பாவை ஆகிய இரண்டும் இலக்கியச் செழுமையும் தத்துவமும் பக்தியும் நிறைந்திருப்பதால் அனைவராலும் போற்றப்படுகின்றன. திருப்பாவை 30 பாடல்களைக் கொண்டுள்ளது. இது ஆண்டாள் தன்னை ஆயர்பாடியில் வாழும் கோபிகையாக நினைத்துக் கொண்டு பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். இத்திருப்பாவையை இராமானுஜர் போற்றிக் கோயில் ஒழுங்கில் இணைத்துப் பாடிவரும்படிச் செய்ததனால், இராமானுஜர் ‘திருப்பாவை ஜீயர்’ எனப்பட்டார். தாய்லாந்தில் அரசுரிமை இருந்த காலத்திலிருந்து திருப்பாவையைப் பாடி, அரச பதவி ஏற்கின்றனர்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரேோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!

அருஞ்சொற்பொருள்: ஏரார்ந்த கண்ணி - அழகிய கண்களைக் கொண்ட யசோதை, கதிர்மதியம் - கதிரும் நிலவும்போலும் விளங்கும் முகம், பறை - முழவு வாத்தியம்.

5.2. பகுத்தறிவு இலக்கியம்

(பகுத்தறிவு இலக்கியம் குறித்த செய்திகளை அலகு 1, இலக்கிய வரலாறு அறிமுகம் பகுதியில் காண்க).

பக்தி இலக்கியங்கள் சமயப் பரப்புதலை நோக்கமாகக் கொண்டு உருவானதேயாயினும் அவை சார்ந்த சமயக் கருத்துகளையும் இறைப்படிவ வருணனையும் உள்ளார்ந்த மெய்யியல் கூறுகளையும் மையமிட்டு எழுதப்பட்டவை.

அவற்றில் பொதுமை இல்லை என்றாலும் அவற்றை உருவாக்கிய அருளாளர்கள் அவர்கள் சார்ந்திருத்த சைவ வைணவ சமயம் சார்ந்த கருத்துக்களையே வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் சார்ந்திருந்த சமயம் சார்ந்து சாதி வேற்றுமையைப் புறந்தள்ளிச் சமயம் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவையாகப் பக்தி இலக்கியங்கள் இருந்தன.

சமயம் சார்ந்த வேறுபாடுகளும் சாதி சார்ந்த வேறுபாடுகளும் பொருளாதார வேறுபாடுகளும் மக்கள் இடையே பூசலை வளர்த்ததனால் சில மெய்யியல் அறிவு பெற்ற ஆன்றோர் தங்கள் இலக்கியங்களில் பகுத்தறிவு சார்ந்த கருத்துகளை மையப்படுத்தியும் சமய, சாதி, பொருளாதாரத்தால் பிளவுபடாமல் மக்கள் நம்பிக்கை சார்ந்த பொதுமையை உருவாக்க முயற்சி செய்தோரது இலக்கியங்களைப் பகுத்தறிவு இலக்கியம் என வரையறுத்துப் பின்வரும் பாடப்பகுதியை உணர்ந்து கொள்ளலாம்.

5.2.1. திருமூலர் - திருமந்திரம்

திருமூலரின் நூல் திருமந்திரம் ஆகும். இவர் திருமூல நாயனார் என்றும் வழங்கப்படுகிறார். வாழ்க்கையின் பல்வேறு நிலையாமையினையும் கண்டு தெளிந்த சான்றோர். திருக்கயிலையில் நந்திதேவரின் திருவருள் பெற்ற சிவயோகியருள் ஒருவர். எண்பெருஞ் சித்திகளும் கைவரப்பெற்ற இச்சித்தர், திருவாவடுதுறைக் கோயிலில் உள்ள அரசமரத்தடியில் 3,000 ஆண்டுக்காலம் யோகத்தில் இருந்ததாகவும், ஆண்டுக்கு ஒரு முறை, கண் விழித்து ஒரு பாடல் வீதம் 3,000 பாடல்கள் பாடியதாகவும் உயர்த்திக் கூறப்படுகிறது.

நூலின் சிறப்பு: தமிழில் மெய்ப்பொருள் உணர்வினை விளக்கும் தொன்மையான இலக்கியங்களுள், இதுவே முதல் மற்றும் முழுமையான நூலாகும். இந்நூல் பொது அறம், மந்திரம், சோதிடம், மருத்துவம், சித்தாந்த அடிப்படை விளக்கம் ஆகிய அனைத்தையும் விளக்குகிறது.

நூல் அமைப்பு: இந்நூலில் 9 தந்திரங்களும் 232 அதிகாரங்களும் அடங்கியுள்ளன. இவர் திருஞான சம்பந்தர் காலத்திற்கு முற்பட்டவர் என்பதால் இவரது காலம் கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டாக இருத்தல் கூடும். வடமொழி செல்வாக்கு பெற்ற காலத்தின் பின் தோன்றியமையால் இதில் வடசொற்கள் பயின்று வருகின்றன. சைவ சித்தாந்தம் என்ற தொடரை முதன் முதலில் இந்நூலில் காணமுடிகிறது. இதன் பாக்கள் பெரும்பாலும் மறை பொருள் செய்தியாக அமைந்துள்ளன. எளிய சொற்களால் அரிய பொருளைத் தருகின்ற இந்நூலில்,

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'

'அன்பும் சிவமும் இரண்டென்ப அறிவிலார்'

போன்ற அரிய தொடர்களையும் அரிய கருத்துகளையும் கண்டு துய்க்கலாம்.

இந்நூலின் முதல் தந்திரத்தில் 'அன்புடைமை' பகுதியில் இடம்பெற்றுள்ள 270, 271, 274, 275, 285 ஆகிய ஐந்து பாடல்கள் பாடமாக உள்ளன.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. *(270)*

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே. *(271)*

என்அன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்அன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்அன் புருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன்அன் பெனக்கே தலைநின்ற வாறே. *(274)*

தானொரு காலம் சயம்பு என் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்கும்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே. *(275)*

கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி
கண்டேன் கரியுரி யான்தன் கழலிணை
கண்டேன் கமல மலர்உறை வானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே. *(285)*

அருஞ்சொற்பொருள்: அமர்ந்திருத்தல் - ஜீவனும் சிவனும் ஒன்றாதல், சுடுபொடி - சுடுகாட்டுப் பொடியான சாம்பல்; திருநீறு, சயம்பு - தான் தோன்றி; சுயம்பு, கரியுரி - யானையின் தோலை உரித்தவன்/உடுத்தியவன்.

5.2.2. பட்டினத்தார் - திருவிடை மருதூர்

பட்டினத்தடிகளின் காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு. ஊர் காவிரிப்பூம்பட்டினம்; வணிகர் குலம்; இயற்பெயர் திருவெண்காடர். அ) கோயில் நான்மணிமாலை, ஆ) திருக்கழுமல மும்மணிக்கோவை, இ) திருவேகம்பமுடையார் திருவந்தாதி, ஈ) திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, உ) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும்.

காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தை சுற்றி
ஓடே எடுத்தென்ன? உள்ளன்பிலாதவர் ஓங்கு விண்ணோர்
நாடே இடைமருதீசர்க்கு மெய்யன்பர் நாரியர் பால்
வீடே இருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே (279)

தாயும்பகை; கொண்ட பெண்டீர் பெரும்பகை; தன்னுடைய
சேயும்பகை; உறவோரும்பகை; இச்செகமும் பகை
ஆயும்பொழுதில் அருஞ்செல்வம் நீங்கில்! இங்க ஆதலினால்
தோயும் நெஞ்சே மருதீசர் பொன்பாதம் சுதந்திரமே. (280)

5.2.3. கடுவெளி சித்தர்

"நந்தவனத்திலோர் ஆண்டி"

எனத் தொடங்கும் பாடலைத் தமிழகத்தில் எல்லோரும் அறிவர். புகழ்பெற்ற இப்பாடலைப் பாடியவர் கடுவெளி சித்தர். கடுவெளி என்பது வாக்கும் மனமும் கடந்த நிலையில் உள்ள பரவெளி. இதனைப் பாடுவதால் இச்சித்தர் இப்பெயர் பெற்றார். இவர் பாடியது 34 கண்ணிகள் கொண்டதொரு ஆனந்தக் களிப்பு. இப்பாடல் பெரும்புகழ் பெற்றதனால் இத்தகைய யாப்புக்கு ஆனத்தக்களிப்பு என்ற பெயரே தமிழிலக்கியத்தில் நிலைத்துவிட்டது. இவர் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்தப் பாடலில் தன் செயலுக்குக் காரணமான மனத்திடம் கூறுவதைப் போல நமக்கு அறிவுறுத்துகிறார்.

ஆனந்தக்களிப்பு

பல்லவி

பாபஞ்செய் யாதிரு மனமே - நாளைக்
கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்
பாபஞ்செய் யாதிரு மனமே.

சரணங்கள்

சாபம் கொடுத்திட லாமோ? - விதி
தன்னை நம்மாலே தடுத்திடலாமோ?
கோபந் தொடுத்திடலாமோ? - இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திடலாமோ? 1

சொல்லருஞ் சூதுபொய் மோசம் - செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத்தி விசு வாசம் - எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாய் நேசம் 2

நீர்மேற் குமிழியிக் காயம் - இது
நில்லாது போய்விடும் நீயறிமாயம்
பார்மீதில் மெத்தவும் நேசம் - சற்றும்
பற்றா திருந்திடப்பண்ணு முபாயம் 3

நந்த வனத்திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி 4

தூடண மாகச்சொல் லாதே - தேடுஞ்
சொத்துகளிலொரு தூசும் நில்லாதே
ஏடணை மூன்றும் பொல்லாதே - சிவத்
திச்சைவைத் தாலெம லோகம் பொல்லாதே 5

நல்ல வழிதனை நாடு - எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு - அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு 6

நல்லவர் தம்மைத் தள்ளாதே - அறம்
நாலெட்டில் ஒன்றேனும் நாடித்தள் ளாதே
பொல்லாக்கில் ஒன்றுங்கொள்ளாதே - கெட்ட
பொய்மொழிக் கோள்கள் பொருந்த விள்ளாதே 7

வேத விதிப்படி நில்லு - நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
சாத நிலைமையே சொல்லு - பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு 8

பிச்சையென்று ஒன்றும் கேளாதே - எழில்
பெண்ணாசை கொண்டு பெருக்கமாளாதே
இச்சையது உன்னை ஆளாதே - சிவன்
இச்சை கொண்டது அவ்வழி யேறிமீளாதே 9

மெஞ்ஞானப் பாதையி லேறு - சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு - உன்னை
அண்டினோர்க் கானந்த மாம்வழி கூறு 10

மெய்குரு சொற்கட வாதே - நன்மை
மென்மேலும் செய்கை மிகவடக்காதே
பொய்க்கலை யால்நடவாதே - நல்ல
புத்தியைப் பொய்வழி தனில் நடத்தாதே 11

கூடவருவ தொன்றில்லை - புழுக்
கூடெடுத் திங்ஙன் உலைவதே தொல்லை
தேடரு மோட்சம் அதுஎல்லை - அதைத்
தேடும் வழியைத் தெளிவோரு மில்லை 12

ஐந்துபேர் சூழ்ந்திடுங் காடு - இந்த
ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும் நாடு
முந்தி வருந்திநீ தேடு - அந்த
மூலம் அறிந்திட வாமுத்தி வீடு 13

உள்ளாக நால்வகைக் கோட்டை - பகை
ஓடப் பிடித்திட்டால் ஆளலாம் நாட்டை
கள்ளப் புலனென்னுங் காட்டை - வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம் வீட்டை 14

காசிக்கு ஓடில்வினை போமோ - அந்தக்
கங்கையாடில் கதி தானுமுண் டாமோ?
பேசுமுன் கன்மங்கள் சாமோ? - பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ 15

பொய்யாகப் பாராட்டும் கோலம் - எல்லாம்
போகவே வாய்த்திடும் யார்க்கும் போங்காலம்
மெய்யாகவே சுத்த காலம் - பாரில்
மேவப் புரிந்திடில் என்னனு கூலம்? 16

சந்தேகம் இல்லாத தங்கம் - அதைச்
சார்ந்து கொண்டாலுமே தாழ்விலாப் பொங்கம்;
அந்தம் இல்லாதவோர் துங்கம் - எங்கும்
ஆனந்தமாக நிரம்பிய புங்கம் 17

பாரி லுயர்ந்தது பக்தி - அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி
சீரி லுயரட்ட சித்தி - யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினால் பத்தி 18

அன்பெனும் நன்மலர் தூவிப் - பர
மானந்தத் தேவியின் அடியிணை மேவி
இன்பொடும் உன்னுட லாவி - நாளும்
ஈடேற்றத் தேடாய்நீ இங்கே குலாவி 19

ஆற்றும் வீடேற்றங் கண்டு - அதற்
கான வழியை யறிந்து நீகொண்டு
சீற்றமில் லாமலே தொண்டு - ஆதி
சிவனுக்குச் செய்திடிற் சேர்ந்திடும் தொண்டு 20

ஆன்மாவால் ஆடிடு மாட்டம் - தேகத்
தான்மா அற்றபோதே யாமுடல் வாட்டம்
வான்கதி மீதிலே நாட்டம் - நாளும்
வையிலுனக்கு வருமே கொண்டாட்டம் 21

எட்டும் இரண்டையும் ஓர்ந்து - மறை
எல்லா முனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து 22

இந்த உலகமு முள்ளு - சற்றும்
இச்சைவையாமலே யெந்நாளும் தள்ளு
செந்தேன் வெள்ளம் அதைமொள்ளு - உன்றன்
சிந்தை தித்திக்கத் தெவிட்டவுட் கொள்ளு 23

பொய்வேதந் தன்னைப் பாராதே - அந்தப்
போதகர் சொற்புத்தி போத வோராதே!
மையவிழி யாரைச் சாராதே - துன்
மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்து சேராதே 24

வைதோரைக் கூடவை யாதே - இந்த
வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே
வெய்ய வினைகள் செய்யாதே - கல்லை
வீணிற் பறவைகள் மீதி லெய்யாதே 25

சிவமன்றி வேறே வேண்டாதே - யார்க்குந்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே
தவநிலை விட்டுத் தாண்டாதே - நல்ல
சன்மார்க்க மில்லாத நூலை வேண்டாதே 26

பாம்பினைப் பற்றியாட் டாதே - உன்றன்
பத்தினி மார்களைப் பழித்துக்காட் டாதே
வேம்பினை யுலகிலூட் டாதே - உன்றன்
வீராப்புத் தன்னை விளங்கநாட் டாதே 27

போற்றும் சடங்கை நண்ணாதே - உன்னைப்
புகழ்ந்து பலரில் புகல வொண்ணாதே;
சாற்றுமுன் வாழ்வை யெண்ணாதே - பிறர்
தாமும் படிக்குந் தாழ்மைப் பண்ணாதே 28

கஞ்சாப் புகைபிடி யாதே - வெறி
காட்டி மயங்கியே கட்குடி யாதே!
அஞ்ச வுயிர் மடியாதே - பத்தி
அற்ற அஞ்ஞானத்தின் நூல் படியாதே 29

பத்தி யெனுமேணி நாட்டித் - தொந்த
பந்தமற்ற விடம் பார்த்ததை நீட்டிச்
சத்திய மென்றதை யீட்டி - நாளும்
தன்வச மாக்கிக்கொள் சமயங்க ளோட்டி 30

செப்பரும் பலவித மோகம் - எல்லாம்
சீயென் றொறுத்துத் திடங்கொள் விவேகம்
ஒப்பரும் அட்டாங்க யோகம் - நன்றாய்
ஓர்ந்தறிவாய் அவற் றுண்மை சம்போகம் 31

எவ்வகை யாகநன் னீதி - அவை
எல்லா மறிந்தே யெடுத்து நீபோதி
ஒவ்வா என்ற பலசாதி - யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்ந்துற வோதி 32

கள்ள வேடம் புனையாதே - பல
கங்கையிலே உன் கடம் நனையாதே
கொள்ளை கொள்ள நினையாதே - நட்பு
கொண்டு புரிந்துநீ கோள் முனையாதே 33

எங்கும் சுயபிர காசன் - அன்பர்
இன்ப இருதயத் திருந்திடும் வாசன்
துங்க அடியவர் தாசன் - தன்னைத்
துதிக்கிற் பதவி அருளுவான் ஈசன் 34

அருஞ்சொற்பொருள்: தோண்டி - தண்ணீர் கொண்டு வரும் சிறு மண் பாத்திரம்; கலயம். இச்சை - ஆசை, சுற்றம் - உறவினர், பத்தி - பக்தி; இறைவன் மற்றும் குரு ஆகியோர் மீது வைக்கும் அன்பு, காமம் - உடல் இச்சை, உபாயம் - வழி, தூடணம் - நிந்தைச் சொல், தூசு - மிகக் குறைந்த அளவு, ஏடணை - ஆசை, நத்துதல் - ஒட்டி இருத்தல்/அண்டி இருத்தல், தூறு - நிந்தி, உடைதல் - நிலைகுலைதல், அனுகூலம் - உதவி, பொங்கம் - மிகுதல்; செழித்தல், துங்கம் - உயர்ச்சி; பெருமை, அட்ட சித்தி - அரிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம், ஈடேற்றம் - உய்வு, பேரின்ப வாழ்வு.

5.2.4. இராவண காவியம் - தாய்மொழிப் படலம்

(இந்நூல் குறித்தும் நூலாசிரியர் குறித்தும் அலகு 1 பகுத்தறிவு இலக்கியம் பகுதியில் காண்க).

புலவர் குழந்தை

இராவண காவியத்தின் நோக்கம் இராமனை வீழ்த்துவதல்ல, தமிழரையும் தமிழ்மொழியையும் உயர்த்த வேண்டும் என்பதாகும். அவ்வகையில் இப்பாடப்பகுதி அமைந்துள்ளது. 'தமிழகக் காண்டம்' எனத் தொடங்கும் முதல் காண்டத்தின் ஆறாவது படலம் தாய்மொழிப் படலம் ஆகும். பழந்தமிழகத்தின் கல்விநிலை குறித்து தனித்தமிழ் நடையில் மிக உயர்வாகப் பேசுகிறார் புலவர் குழந்தை. இப் படலத்திலிருந்து 5 பாடல்கள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

ஏடுகையில்லாரில்லை இயலிசை கல்லாரில்லைப்
பாடுகையில்லாரில்லை பள்ளியோ செல்லாரில்லை
ஆடுகையில் லாரில்லை அதன்பயன் கொள்ளாரில்லை
நாடுகையில் லாரில்லை நற்றமிழ் வளர்ச்சியம்மா 1

தமிழ்எனது இருகண்பார்வை தமிழ்எனது உருவப்போர்வை
தமிழ்எனது உயிரின் காப்புத் தமிழ்எனது உளஏமாப்பு
தமிழ்எனது உடைமைப் பெட்டி தமிழ்எனது உயர்வுப் பட்டி
தமிழ்எனதுஉரிமை என்னத் தனித்தமிழ் வளர்ப்பர் மாதோ 2

நாடெலாம் புலவர் கூட்டம் நகரெலாம் பள்ளி ஈட்டம்
வீடெலாம் தமிழ்த்தாய் கோட்டம் விழவெலாம் தமிழ்க் கொண்டாட்டம்
பாடெலாம் தமிழின் தேட்டம் பணையெலாம் தமிழ்க்கூத் தாட்டம்
மாடெலாம் தமிழ்ச் சொல்லாட்டம் வண்டமிழகத்து மாதோ 3

உண்டியை யுண்ணார் பொன்பட் டுடையினை யென்னார் கன்னல்
கண்டினைப் பேணார் செம்பொன் கலன்களைப் பூணார் வண்ணச்
செண்டினைச் சூடார் சாந்தத் திரளினை நாடார் யாழின்
தண்டினைத் தீண்டார் யாரும் தமிழுமொழி பயிலாக் காலே 4

பாடுபவருக்கும் உரை பண்ணுபவருக்கும்
ஏடதுவிரித்து உரை இசைப்பவர் தமக்கும்
நாடு நகரோடு அவர் நயப்பவை கொடுத்தும்
தேடி வருவித்தும் உயர் செந்தமிழ் வளர்த்தார் 5

அருஞ்சொற்பொருள்: ஏடு - நூல், புத்தகம், நாடுகை - ஆராய்தல்; தெரிதல், ஏமாப்பு - பாதுகாப்பு, ஈட்டம் - கூட்டம்; மிகுதி, கோட்டம் - கோயில், பாசறை, தேட்டம் - குவியல்; திரட்டு, மாடம் - மேல் தளம் கொண்ட வீடு; அரண்மனை முதலியவற்றின் மாடிப்பகுதி, பூணார் - அணியார், நயப்பவை - விரும்பியவை.

வினாத்தாள் அமைப்பு

அலகு/ மதிப்பெண்கள்	அலகு 1	அலகு 2	அலகு 3	அலகு 4	அலகு 5	விருப்பேற்பு	மதிப்பெண்கள்
பகுதி அ 2 மதிப்பெண்கள்	3	2	2	3	2	10/12	10*2 = 20
பகுதி ஆ 5 மதிப்பெண்கள்	2	1	1	1	2	5/7	5*5 = 25
பகுதி இ 10 மதிப்பெண்கள்	2	1	1	1	-	3/5	3*10 = 30
						மொத்தம்	**75**

பகுதி அ - ஒரு சொல் அல்லது ஒரு தொடரில் விடை தருக.

பகுதி ஆ - 100 சொற்களில் விடை தருக.

பகுதி இ - 250 சொற்களில் விடை தருக.

மாதிரி வினாத்தாள்

காலம்: 3 மணி **பொதுத்தமிழ்-I** மதிப்பெண்கள்: 75

பகுதி - அ (10 x 2 = 20)

எவையேனும் 10 வினாக்களுக்கு ஒரு சொல் அல்லது ஒரு தொடரில் விடை தருக.

1. பரிணாம வளர்ச்சியைப் பற்றி உரைக்கும் இலக்கண நூல் எது?
2. ஓர்-ஒரு வரும் இடங்களுக்குத் தலா ஓர் எடுத்துக்காட்டு தருக.
3. வெள்ளித்தட்டு, வெள்ளி தட்டு - எது சரி? ஏன்?
4. 'வேட்கைப் பத்து' இடம் பெற்றுள்ள நூல் எது?
5. 'யவனர்' பற்றிய குறிப்பு இடம்பெறும் நூல் யாது?
6. மானிடருக்கு அழகு சேர்ப்பது யாதென நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது?
7. 'நஞ்சைப் போன்றவர்' - யார்?
8. அறக்கடவுளின் செயல் யாதென இளங்கோவடிகள் உணர்த்துகிறார்?
9. வேடன் மனமாற்றத்திற்குக் காரணம் என்ன?
10. மூத்த மகனின் வினாவிற்குத் தந்தை அளித்த விடை யாது?
11. 'வையந் தகளியா' - பொருள் கூறுக.
12. எதனைத் தனது உரிமை என இராவண காவியம் சுட்டுகிறது?

பகுதி - ஆ (5 x 5 = 25)

எவையேனும் 5 வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக.

13. வல்லினம் மிகும் இடங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
14. எட்டுத்தொகை - சிறு விளக்கம் தருக.
15. நீரின்றி அமையாது உலகு - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
16. சிறியாரின் இயல்பாக முதுமொழி கூறுவது யாது?
17. பூசலார் நாயனாரின் பக்தியைப் புலப்படுத்துக.
18. இறைவனை அடைக்கலமாகப் பற்றுவதால், தான் பெறுவன எவை எனத் திருநாவுக்கரசர் பாடுகிறார்?
19. 'பாபம் செய்யாதிரு மனமே' எனக் கடுவெளி சித்தர் வலியுறுத்தக் காரணங்கள் யாவை?

பகுதி - இ (3 X 10 = 30)

எவையேனும் 3 வினாக்களுக்கு 250 சொற்களில் விடை எழுதுக.

20. நும் பாடப்பகுதியில் இடம்பெறும் இலக்கண நூல்கள் குறித்துத் தொகுத்து எழுதுக.
21. தமிழில் சைவ, வைணவ இலக்கியங்களின் பங்களிப்பை விவரி.
22. முல்லைப் பாட்டு கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
23. அறன் வலியுறுத்தல் அதிகாரம் கூறும் செய்திகளை விவரி.
24. "மணிமேகலை பாத்திரம் பெற்ற காதை'ச் செய்திகளைத் தொகுத்துக் கூறுக.

* * *